# கல்கி

குடும்பத்துடன் படிக்க...

KALKI
24.6.2007 ரூ.8.00
80 பக்கங்கள்



# மதுரையில் ஒரு சி.எம்!

இடைத்தேர்தல் டிரெய்லர்

# கல்கி

குடும்பத்துடன் படிக்க...

24.6.2007

கல்கி நிறுவன வெளியீடு தரம் நிரந்தரம்

உள்ளே...

# வட்டமேஜை

கூட்டுக் குடும்பத்தில் இருப்பதால் தான் ஸ்ரீமனுக்கு விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இயற்கையிலேயே அமைந்துள்ளது. அதனால்தான் சினிமாவில் ஹீரோவோ, ஹீரோவின் நண்பனோ எந்த கேரக்டராக இருந்தாலும் பரவாயில்லை என்ற மனத்துடன் நடிக்கிறார்.

**- எம்.ராஜேந்திரன், லால்குடி**

அசோகமித்திரனின் 'ஓசை' சிறுகதையில் வருவதுபோல் எனக்கும் ஏற்பட்டுள்ளது. அப்பொழுது நான் மீனம்பாக்கத்தில் ஒரு சைக்கிளும் மாம்பலத்தில் ஒரு சைக்கிளும் வைத்துக் கொண்டு, மயிலாப்



# அரசு கஜானா கவிழ்ந்தா போயிடும்?

பூரிலுள்ள அலுவலகத்துக்குப் போய் வந்து கொண்டிருந்தேன்.

இதே பாண்டிபஜாரில் போகும்போது ஒரு போலீஸ்காரர் 'ஒன் வே' என்று பிடித்துவிட்டார். 'நாளை வந்து அபராதம் கட்டிவிட்டு எடுத்துப் போ' என்றார். மறுநாள் சென்றபோது அதே போலீஸ்காரர் ''நீ எங்கே வேலை செய்கிறாய்?'' என்று கேட்டார். சொன்னதும் ''அப்படியா? என் தம்பியும் அதே இலாகாவில்தான் வேலை செய்கிறான்'' என்று சொல்லிவிட்டு ஜட்ஜ் கேட்டால் சரி/ஆம் என்று சொல்லச் சொன்னார். பிறகு என்னிடம் 'உன்னை மன்னித்து விட்டார்கள்' என்று சொல்லி, சைக்கிளைக் கொடுத்து விட்டார்கள்!

**- ஜி.ஸ்ரீனிவாசன், சென்னை**

'புதிய ஜமீன்தாரர்கள்' தலையங்கம் அருமை. அரசின் கட்டுப்பாட்டில் உள்ள புறம்போக்கு நிலம் பொதுமக்களின் சொத்து என்கிற கருத்து அற்புதமானது.

**ரொசாரியோ ரவிச்சந்திரன், சென்னை**

ரா.பார்த்திபனின் பில்லி சூன்ய சாமியார் அனுபவம், பல பேருக்கு நல்ல பாடமாக இருக்கும். இனியாவது மக்கள் விழிப்புணர்வு பெற வேண்டும்.

**- கே.மோகனசுந்தரம், பாளையங்கோட்டை**

புதிய ரேஷன் கார்டு வாங்க மூன்று மாதங்களாகக் கூடும் என்று சொல்லியிருக்கிறீர்கள். எனக்குத் தெரிந்த வரையில் யாருக்குமே மூன்று மாதத்தில் கொடுக்கவில்லை.

நான் புதிய கார்டுக்காக விண்ணப்பித்தபோது, கிடைக்கப் பத்து மாதங்களாகி விட்டன. எப்போது விசாரித்தாலும் 'உங்களுக்கு போஸ்ட் கார்டு அனுப்புகிறோம்' என்பதே பதில். உதவி ஆணையர் வரை சென்று விசாரித்தாலும் இதே பதில் தான். என்னைப்போல் நூற்றுக்கணக்கானோருக்கு இதே நிலைமைதான்.

**- வி.ரெங்கநாதன், சென்னை**

ஒரு குடும்பத்தில் இரண்டு காஸ்

'சுலபமாகக் கண்டறியலாம்' என்றால், கடந்த மூன்று வருடங்களில், ஐ.ஐ.டி.காரர்களே தமது மாணவர் குழு ஒன்றுக்கு ராமர் பாலம் இயற்கையானதா அல்லது செயற்கையானதா என்பதை ஆராய்ச்சிக்கான கருப்பொருளாகக் கொடுத்து, கண்டறிந்து வர அனுப்பியிருக்கலாமே?! தெய்வாம்சமான ராமர் கட்டியது என்னும் ஆழ்ந்த நம்பிக்கையால்தானே பிரச்னையே..?

- இரா.சம்பத்குமார், சென்னை

பீட்ஸா காலத்திலும் தயிர் சாதம் விற்பனையில் போட்டி போடுவது பெருமைதான்!

- அ.யாழினி பர்வதம், சென்னை

வரீய் நீளமான மாமியாருக்கு அகலமான முறுக்கைச் சுட்ட மருமகளின் புத்திசாலித்தனத்தை நினைத்துக் கச்சிதமாய் சிரித்தோம்.

- மு.செந்தில்குமார், திருச்சி

# ஸ்வீட் போஸ்ட்

சிலிண்டர் இருந்தால், அந்தக் குடும்ப அட்டைக்கு அறவே மண்ணெண்ணெய் வழங்காமல், வயிற்றில் அடிப்பது எந்த விதத்தில் நியாயம்? இலவச அடுப்பு, காஸ் என இலவசப் பட்டியலை விரிக்கும் தமிழ்நாடு அரசு, இரண்டு சிலிண்டர் உள்ள குடும்பங்களுக்கும் மண்ணெண்ணெய் வழங்கினால் அரசு கஜானா கவிழ்ந்தா போயிடும்?

- கே.கனகமூர்த்தி, திருப்பாலைத்துறை

ஆரோக்கியம் தரும் அக்குபஞ்சர்' மருத்துவக் கட்டுரை மிக உபயோகமாக இருந்தது. நானும்கூட இந்த மாற்று மருத்துவ சிகிச்சையைப் பெறலாம் என்று முடிவெடுத்திருக்கிறேன்.

-கே.ஆர்.ராமச்சந்திரன், சென்னை

மௌனத்தின் சிறகடிப்பை கவிதையாக்கி வாசக விழிகளில் படம் பிடித்திருக்கிற கவிஞர் கோ.பாரதிமோகனுக்கும் அக் கவிதை வரிகளை ஜீவனாய்ப் பிரதிபலித்து ஓவியமாக்கிய ஓவியர் மருதுவுக்கும் எமது பாராட்டுக்கள்.

- இராஜா, சென்னை

**கல்கி**

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

தலைமை உதவி ஆசிரியர் :
மு.மாறன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன், எம். மோகன்,
ச. கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623,
2225 1324

தொலைநகல் :
044 - 2225 1021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.440/-
ஆறு மாதம் : ரூ.220/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 65 யு.எஸ். டாலர்

**Bharathan Publications Private Limited,**
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.




# மதுரையில் ஒரு சி.

**ச**மீபத்தில் நமது நிருபருக்கு மதுரையில் ஏற்பட்ட அனுபவம் இது: தமிழகத்தின் ஆறு மாநகராட்சிகளில், இரு சக்கர வாகன ஓட்டுநர்கள் ஹெல்மெட் அணிய வேண்டுமென்பதை மாநில அரசு கட்டாயமாக்கியது. சென்னையிலும், திருச்சியிலும் போலீஸ் மிகவும் தீவிரமாக இதை அமல்படுத்துவதைப் பார்த்த நிருபர், மதுரையில் ஜங்ஷனுக்கு எதிரே, ஹெல்மெட் இல்லாமல் சென்ற ஒருவரிடம் "இங்க ஹெல்மெட் கட்டாயம் இல்லையா?" என்று அப்பாவித்தனமாக கேட்க, வாகனத்தில் இருந்தவர் சொன்னார்: "எங்க சி.எம். இதைப் பற்றி ஒன்னும் சொல்லலை."

நிருபருக்கு ஒன்றும் புரியவில்லை. "சி.எம்மா" என்று இழுக்க, "அட புரியலையா? அழகிரி அண்ணன்தான் எங்க சி.எம்." என்று கூலாகச் சொல்லிவிட்டு ஸ்கூட்டரில் விரைந்திருக்கிறார் அந்த நண்பர்.

மதுரையில் மட்டுமல்ல, மதுரையை ஒட்டிய சிவகங்கை, ராமநாதபுரம், விருதுநகர், தேனி மாவட்டங்களின் ஆளுங் கட்சி வட்டாரங்களிலும், அரசு அதிகாரிகள் மத்தியிலும், உச்சநிலை அதிகார மையமாகத் தெரிபவர் மு.க.அழகிரிதான். டிரான்ஸ்ஃபர், போஸ்டிங், காண்ட்ராக்ட் என்று எதையெடுத்தாலும், 'அண்ணன்கிட்ட ஒரு வார்த்தை சொன்னா போதும்' என்று நம்பிக்கை தொனிக்கும் வார்த்தைகள் கேட்பது சகஜம். இதுபோன்ற பேச்சுக்கள் கீழ்மட்ட அளவில் பரவ, பாமரர்கள் மத்தியிலும் ஒரு சி.எம்.முக்குரிய இமேஜுடன் வலம் வருகிறார் அழகிரி.

* மு.க.ஸ்டாலின்



**அ**ழகிரியின் இருபது வருட மதுரை வாசம்,

# எம்!

## இடைத்தேர்தல் டிரெய்லர்!

அவரை பல விதங்களில் மாற்றியிருக்கிறது. சட்ட அங்கீகாரம் இல்லாத அதிகார மையமாகச் செயல்படுகிறார் என்று குற்றம் சாட்டப்படும் சசிகலாவுக்கும், அழகிரிக்கும் ஒரு சின்ன ஒற்றுமை உண்டு. இருவரும் வீடியோ கேஸட் கடை வைத்திருந்தவர்கள்தான்.

''1985 - 86 காலகட்டத்தில் முரசொலி மதுரை பதிப்பை பார்த்துக்கொள்வதற்காக வந்தவர். ஒரு ஸ்கூட்டரில் சுற்றிக் கொண்டிருப்பார். பின்னர் முரசொலி நின்று போனது. அப்போதுதான் வீடியோ கடை துவங்கினார்'' என்று சொல்கிறார் அவருடன் அந்த நாளில் நெருங்கிப் பழகிய நண்பர் ஒருவர்.

கிட்டத்தட்ட 1992 வரை தான் உண்டு தன் வேலை உண்டு என்று இருந்தார் அழகிரி. வைகோ பிரிந்த போது பொன். முத்துராமலிங்கம் உடன் சென்றுவிட, மதுரையில் கட்சி கலகலத்தது. களத்தில் குதித்த அழகிரி, வீடு வீடாகச் சென்று கட்சிப் பிரமுகர்களைச் சந்தித்து கட்சியைப் பெரும் சரிவிலிருந்து மீட்டார். 1996-ல் கலைஞர் அரசு வந்தது அவருக்குச் சரியான ஏற்றத்தைக் கொடுத்தது. அதன்பின் மதுரை மற்றும் சுற்று வட்டார மாவட்டங்களில் அழகிரிக்கு என்று கட்சி ரீதியாக ஒரு பின்பலம் உருவாயிற்று.

கலைஞர் ஆட்சி நடந்த 1996 - 2001-ல் தாம் யாரும் தட்டிக் கேட்க முடியாத ஓர் அதிகார மையமாக இருப்பதை உணர்த்தியவர் அழகிரி.

2000-ம் ஆண்டு நெருக்கத்தில் தி.மு.க. சார்பில் ராஜ்ய சபா தேர்தலில் போட்டியிட காவிரி மணியத்தை, தான் சிபாரிசு செய்ததாகவும், ஆனால், தி.மு.க. தலைமை

தேர்தல் களம் தேர்தல் களம் தேர்தல் களம் தேர்தல் களம் தேர்தல் களம் தேர்தல்

## இலவசங்கள் வேண்டாம்... விலைவாசி குறைந்தால் போதும்!




* அங்காள ஈஸ்வரி

இடைத்தேர்தலால் மதுரை மேற்கு சட்டமன்ற தொகுதி களைகட்ட ஆரம்பித்துவிட்டது. அ.தி.மு.க. எம்.எல்.ஏ. சண்முகம் மறைவால் நடக்கும் இத்தேர்தலில், தொகுதியை தக்க வைத்துக் கொள்ள அ.தி.மு.க.வும், இது அழகிரியின் மானப் பிரச்னை என காங்கிரசுக்கு ஆதரவாக தி.மு.க.வும் வரிந்து கட்டிக் கொண்டு களத்தில் குதித்திருக்கின்றன. யார் கை ஓங்கும்? மதுரையை ஒரு ரவுண்ட் வந்தோம்.

மதுரையில் நிஜமான போட்டி என்பது மூன்று வேட்பாளர்களுக்கு இடையே. தி.மு.க. கூட்டணியின் காங்கிரஸ் வேட்பாளர் கே.எஸ்.கே. ராஜேந்திரன், மு.க.அழகிரிக்கு மிகவும் நெருங்கிய நண்பர். அ.தி.மு.க. வேட்பாளர் செல்லூர் கே. ராஜு மற்றும் தே.மு.தி.க. வேட்பாளர் சிவ முத்துக்குமரன். இவர்கள் மூவருமே தொகுதிக்காரர்கள். தொகுதிக்குள் பெரும்பான்மையாக வசித்து

* காமாட்சி



தேர்தல் களம் தேர்தல் களம் தேர்தல் களம் தேர்தல் களம் தேர்தல் களம் தேர்தல்

வரும் பிரமலைக் கள்ளர் வகுப்பைச் சார்ந்தவர்கள்.

''மதுரை மேற்கு தொகுதியில் கடந்த சட்டமன்றத் தேர்தலில் 14,000 வாக்குகள் பெற்றிருந்தோம். இத்தொகுதிக்குட்பட்ட மாநகராட்சி வார்டுகளில் மாநகராட்சி தேர்தலில் 24,000 வாக்குகள் பெற்றோம். அது போல இருமடங்குகளுக்கு மேலான வாக்குகளை இந்த இடைத்தேர்தலில் நாங்கள் பெற்று விட்டால், தே.மு.தி.க. வெற்றி பெற்றுவிடும். அதற்கு கேப்டனின் பத்து நாள் மதுரை கேம்ப், வாக்காளர்கள் மத்தியில் புதிய எழுச்சியை உண்டு பண்ணி விடும்!'' என்று நம்பிக்கை தெரிவிக்கிறார் தே.மு.தி.க. வேட்பாளர் சிவமுத்துக்குமரன்.



* கே.எஸ்.கே. ராஜேந்திரன்

தற்போது இடைத்தேர்தல் நடக்கும் 20 வார்டுகளில், கடந்த மாநகராட்சித் தேர்தலில் தே.மு.தி.க. ஐந்து வார்டுகளில் வெற்றி பெற்றது. சமீபத்தில் ஒரு கவுன்சிலர் தி.மு.க. பக்கம் போய்விட்டார். தற்போது நான்கு வார்டுகள் தே.மு.தி.க. வசம். ''நாங்கள் வசிப்பது 22-வது வார்டில். தே.மு.தி.க. வெற்றி பெற்ற வார்டு இது. தி.மு.க.-அ.தி.மு.க. ரெண்டையும் மாத்தி மாத்திப் பார்த்துட்டோம். புதுசா ஒருத்தர் வந்து வித்தியாசமா நல்லபடியா ஆட்சி பண்ணட்டும்னு தான் விஜயகாந்த் கட்சிக்கு வோட்டு போட்டு வர்றோம் என்று ஆர்வமுடன் பேசுகிறார் பொன்னகரம் பிராட்வே பகுதியில் வசித்து வரும் லாரி மெக்கானிக் காமாட்சி.

''அம்மாவாகப் பார்த்து எனக்கு அளித்திருக்கும் நல்வாய்ப்பு இது. பொது மக்கள் மத்தியில் அ.தி.மு.க.வுக்கு என்று செல்வாக்குள்ள தொகுதி. ஆளுங்கட்சி செயல்பாடுகள் மீதான அதிருப்தி, விலைவாசி உயர்வு போன்றவை காரணமாக வெற்றி உறுதி!'' என்கிறார் அ.தி.மு.க. வேட்பாளர் செல்லூர் கே.ராஜு.

சுயராஜ்யாபுரம் பகுதியில் நெசவாளக் குடும்பங்களில் பலரையும் சந்தித்தோம்.



கேட்கவில்லை என்றும் சொன்னார் அழகிரி. இதன் விளைவாக மதுரையில் கலவரச் சூழல் ஏற்பட்டது. அரசு பஸ்கள் நொறுக்கப்பட்டன. ''அழகிரி கட்சி உறுப்பினரே இல்லை'' என்று அறிக்கை விட்டார் பொதுச்செயலாளர் அன்பழகன். இந்தக் காலகட்டத்தில் மறைந்த பழனிவேல் ராஜனுக்கும் அழகிரிக்கும் உரசல்கள் ஏற்பட, கசப்புணர்வு வளர்ந்தது. கடுப்பில் இருந்த அழகிரி, பழனிவேல்ராஜன் உட்பட மூன்று தி.மு.க.வினர் 2001 தேர்தலில் தோற்கக் காரணமாக இருந்தார்'' என்கிறார் ஒரு மூத்த உடன்பிறப்பு.

* பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்



ஜெயலலிதா 2001-ல் ஆட்சிக்கு வந்த பிறகு நடந்த ஒரு சம்பவம், கட்சி மட்டத்தில் அழகிரியின் இமேஜை உயர்த்தி விட்டது. அப்போது நடந்த உள்ளாட்சித் தேர்தலில் நேரடி மேயர் தேர்தலில் தி.மு.க. ஜெயிக்க, துணை மேயரைத் தேர்ந்தெடுக்க மெஜாரிட்டி இல்லை. ஆனால் அழகிரி, எதிர்கட்சி உறுப்பினர்களின் ஆதரவையும் வளைத்துப் போட்டு, துணை மேயர் தேர்தலில் தி.மு.க.வை வெற்றி பெறச் செய்தார். அதே போல் ஆண்டிப்பட்டி இடைத் தேர்தலில் ஜெயலலிதாவை எதிர்த்து தி.மு.க. சார்பாக முழு மூச்சாக அச்சப்படாமல் பணியாற்றினார் அழகிரி.

இதற்கிடையே, அழகிரிக்கும் சிவகங்கை தா.கிருஷ்ணனுக்கும் இடையே மோதல் துவங்கியது. அழகிரி சிவகங்கை சிவராமனை உயர்த்தப் பார்த்தார். தா.கி.க்கு ஸ்டாலின் ஆதரவு இருந்தது. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர், டெண்டர்,

"நெசவாளிகளுக்கென்று நல்ல திட்டங்கள் கொண்டு வந்திருக்கறதாச் சொல்றாங்க. அறுவது வயசுக்கு மேற்பட்ட நெசவாளிகளுக்கு மாத பென்ஷன் திட்டம் நடைமுறைக்கு வந்துட்டா இன்னும் நல்லா இருக்கும். எங்க ஓட்டு தி.மு.க.வுக்கு தான் என்று இணைந்து குரல் தருகின்றனர் ஜானகி (58), ஞானசுந்தரி (32).

ஆனால், செல்லூர் நெசவுக் கூடமொன்றில் வேலை பார்க்கும் பெண் தொழிலாளி ஒருவர், பட்டிமன்ற ரேஞ்சுக்குப் பொரிந்து தள்ளிவிட்டார். "ரேஷன் அரிசி தவிர மத்த எல்லா சாமானும் விலை ஏறிப் போச்சு. ரெண்டு வருசத்துக்கு முன்னாடி ஒரு கிலோ மிளகாய் முப்பது ரூபா. இப்போ ஒரு கிலோ ஐம்பத்தைஞ்சு ரூபாய் விக்குது. இலவசங்களை நிறுத்தி வைச்சுட்டு, எல்லாப் பொருள்களின் விலையேற்றத்தையும் குறைச்சாலே போதும்" என்று 'லெக்சர்' அடிக்கிறார் சாதாரண கூலித் தொழிலாளியான அங்காள ஈஸ்வரி.



* செல்லூர் கே. ராஜு



* சிவ.முத்துக்குமரன்

தினகரன் நாளிதழ் தாக்கப்பட்ட சம்பவத்தை, தேர்தல் பிரசாரத்தில் பயன்படுத்த அ.தி.மு.க. முனையலாம். அதனை முறியடிக்க துருப்புச் சீட்டு ஒன்றினைத் தன் கைவசம் வைத்துள்ளது தி.மு.க. மூன்றரை வருடங்களுக்கு முன்பு அ.தி.மு.க. வட்டச் செயலாளர் பால்பாண்டி என்பவர் குத்திக் கொலை செய்யப்பட்டார். அப்போது மாவட்டச் செயலாளராக இருந்து வந்த செல்லூர் ராஜூ மீது குற்றம் சாட்டப்பட்டது. தினகரன் சம்பவத்தை அ.தி.மு.க. பிரசாரத்துக்குப் பயன்படுத்தினால், அ.தி.மு.க. வட்டச் செயலாளர் கொலைக் குற்றச்சாட்டை தேர்தல் பிரசாரத்தில் ஊதி விடலாம் என அழகிரி தரப்பு வியூகம் அமைத்திருக்கிறது!

**- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு**

தேர்தல் களம் தேர்தல் களம் தேர்தல் களம் தேர்தல் களம் தேர்தல் களம் தேர்த

வேலை வாய்ப்பு என்று பல விஷயங்கள்... அதிகாலை வாக்கிங்கில் தா.கி. கொலை செய்யப்பட்டார். குற்றம் சாட்டப்பட்ட அழகிரி ஒரு மாதம் சிறையில் இருந்தார். இப்போது ஜாமீனில் இருக்கிறார்.


2004-ல் தி.மு.க. பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற, மீண்டும் அழகிரியின் செல்வாக்கு உயர்ந்தது. 2006 தேர்தலில் தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும், அடித்தளத்தை நன்கு உருவாக்கியிருந்த அழகிரி வசம் சட்ட அங்கீகாரமில்லாத, அதிகார மையம் முழுமையாக வந்து சேர்ந்தது. மாவட்ட ஆட்சியாளர்கள், போலீஸ் கமிஷனர்கள் என்று போஸ்டிங்கில் வர வேண்டுமென்றால், வந்து நீடிக்க வேண்டுமென்றால் அவரது தயவு தேவையாக இருந்தது.

திருச்சிக்கு அந்தப் பக்கம் உள்ள விவகாரம் என்றால் 'அழகிரியை ஒரு வார்த்தை கேட்கவும்' என்கிற எழுதப்படாத விதி உருவாயிற்று.

அழகிரி - ஸ்டாலின் மோதல் வரும் என்ற கிசுகிசுக்கள் உலவி வந்த சமயத்தில், தினகரன் விவகாரம் குடும்பத்தை ஒற்றுமைப்படுத்திவிட்டது. கலைஞரின் சட்டமன்ற பொன்விழாவுக்கு 'முழுப் பாதுகாப்புடன்' அவர் வந்து சென்ற விதம், ஆட்சியாளர்களின் அங்கீகாரத்தையும், கட்சியின் அரவணைப்பையும் உணர்த்தியிருக்கிறது.

தினகரன் விவகாரம் இல்லையென்றால் தி.மு.க.வே இடைத்தேர்தல் களத்தில் குதித்திருக்கும். இப்போது காங்கிரஸ் நின்றாலும் அழகிரிக்கு இது கௌரவப் பிரச்னை. பிரசாரத்தில் கதர் சட்டைகளைவிட தி.மு.க. படையே முக்கிய இடம் வகிக்கிறது. அதிகார பலம், பணபலம், ப்ளஸ் 'தொண்டர்' பலம் ஆகியவற்றோடு இடைத்தேர்தல் களத்தில் சுற்றி வருகிறார் அழகிரி. காங்கிரசுக்கு விழும் வோட்டுக்கள் உண்மையில் அழகிரிக்கு விழும் வோட்டுகளே!

**- ப்ரியன்**



# 'இச்' எத்தனை

● த.சத்தியநாராயணன், அயன்புரம்

ஹெல்மெட்- மனைவி.... ஒப்பிடவும்....?

ஹெல்மெட் - தலை கட்டு... மனைவி கால் கட்டு..!

● ஜி.பாலசுப்பிரமணியன், திருவில்லிப்புத்தூர்

'பொம்பளை சிரிச்சா போச்சு' என்கிறார்களே....?

அட... பதிலுக்கு 'ஆம்பளை சிரிச்சா ஆச்சு'னு சொல்லிட்டுப் போய்கினே இருங்க பாலு...

● எஸ்.சுவாமிநாதன், மன்னார்குடி

இச் எத்தனை வகைப்படும்..?

இச்சையைப் பொருத்து வேறுபடும்... நாள்கணக்கில் இச்சியபடி கி(ன்ன)ஸ் சாதனை படைத்தவர்களைக் கேட்டால் வகைகளைக் கூறுவார்கள்... அட... இதுதான் 'இச்'சா சக்தி என்பதா....?

● மு.ரா.பாலாஜி, கோலார் தங்கவயல்

ஆன்மிகத் தேடலுக்கு வயது 16-36-56...எது ஏற்றது..?

எந்தத் தேடலுக்குமே ஏற்ற வயது பதினாறுதான்... ஐம்பத்தாறில் தேட ஆரம்பித்தால் நீங்களே காணாமல் போய் விடுவீர்கள்... அப்புறம் உங்களைத் தேட வேண்டியதாகி விடும்!

● பொன்விழி, அன்னூர்


வசூல் ராஜா MBBS - அருணாச்சலம்... ஒப்பிடவும்..?

எப்போதும் கிடைக்கும் வீட்டுச் சாப்பாடு - எதேச்சையாகக் கிடைத்த விருந்து சாப்பாடு....

● மீனா, சென்னை

கிரேஸி உங்கள் வெற்றிக்குப் பின்னால் உள்ள பெண்மணி யார்....?

இன்னொருவரின் மனைவி... 'திருமதி பிரும்மா...'



● கா.சங்கர், விழுப்புரம்

**விவேக் - வடிவேலு காமெடி... ஒப்பிடவும்..?**

விவேக் - சிரிக்க வைத்துச் சிந்திக்க வைப்பவர்... வடிவேலு - சிந்திக்க நேரம் கொடுக்காமல் சிரிக்க வைப்பவர்.

(பி.கு: இந்த வாரம் நிறையவே ஒப்பிட்டிருக்கிறேன்.... 'ஒப்பிட்டவரை உள்ளவும் நினையுங்கள்' ப்ளீஸ்...)

● கு.நித்யாநந்தன், திருச்சி

**குழந்தைகளுக்கு நிலாவைக் காட்டி சோறு ஊட்டுவது ஏன்..?**

இந்தக் காலத்துக் குழந்தைகளுக்கு ஐ-க்யூ கொஞ்சம் ஜாஸ்தி....எம்மா...

# வகைப்படும்?

காலைல நிலா கிடையாதே... அப்ப சோறும் கிடையாதானு கேக்குங்க... எதுனா ஐடியா பண்ணி ஊட்டுங்க.

● ஜெயந்தி சிவகுமார், ஏற்காடு

**வத்த குழம்பு, சுட்ட அப்பளாம், மிளகு குழம்பு, பருப்பு துவையல்....இதில் எது தங்களுக்குப் பிடித்த காம்பினேஷன்....?**

சுட்ட மிளகு, வத்த அப்பளம், துவையல் குழம்பு பருப்பு, மொத்த சோறு, அத்தை கையால....அய்யோ.... கேள்வியைப் படிச்சவுடனேயே நாக்குல ஜலம் ஊறுது....வாய் குழறுது... ஸாரிங்க ஜெயந்தி....

● என்.குப்புசாமி, கோவை


**தங்களின் மானசீக குரு யார்....?**

'நகரேஷு- காஞ்சியில்' உள்ள 'நாரிஷு- காமாட்சி'யை தனது 'புஷ்பேஷு- நெஞ்சில் கொண்ட புருஷேஷு- மஹா பெரியவா...'

● என்.சண்முகம், திருவண்ணாமலை

**'இடுக்கண் வருங்கால் நகுக'...ஏன் மற்ற நேரங்களில் 'நகுக' செய்யக் கூடாதா....?**


புயலுக்கு முன் அமைதி போல... எனக்கென்னமோ கலகலப்பாகச் சிரித்து நகுக செய்யாமல், முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டு மயான அமைதியில் இருக்கும் நேரத்தில்தான் இடுக்கண் புயலே வீசும் என்று தோன்றுகிறது... ஒருவேளை 'நகுக'வையும் மீறி இடுக்கண் வந்தால், அந்த இடத்தை விட்டு 'நகருக...' ○



# கிரேஸியைக் கேளுங்கள்

சுஜாதா

# மிகக் கடினம்! 36



'கோணை' என்ற ஒரு சொல்லுக்குப் பொருள் என்ன என்று சமீபத்தில் பார்க்க வேண்டியிருந்தது. கோணை என்றால் crookedness வளைவு. கோணைக் கத்தி, கோணைக் குழந்தன், கோணைப் பேச்சு, கோணை வாயன்... போன்ற பிரயோகங்களில் இந்தச் சொல் பயன்படுகிறது. திவ்யப்பிரபந்த காலத்தில் அதற்கு மிறுக்கு, பிரயாஸம், அனுபத்தி போன்ற அர்த்தங்கள் இருந்தது. 'ஸம்ஸாரிகளின் கோணைப் போக்கி' என்று ஒரு வியாக்கியானம் உள்ளது. difficulty கஷ்டம் என்ற அர்த்தத்தில் நம்மாழ்வார் திருவாய்மொழியில் திருமாலை வர்ணிக்க முயலும் போது இந்தச் சொல்லைப் பயன்படுத்துகிறார்.

## “வார்த்தைகளால் அவனைச் சிறைப் பிடிக்க முடியாது!”

“ஆணல்லன் பெண்ணல்லன் அல்லா
அலியுமல்லன்
காணலும் ஆகான்
உளனல்லன் இல்லையல்லன்
பேணுங்காற் பேணும் உருவாகும்
அல்லனுமாம்
கோணை பெரிதுடைத்து எம்
பெம்மானைக் கூறுதலே

(அல்லா - பயனல்லாத, பேணுங் கால் - விரும்பும்போது)

உலகத்தில் நாம் பார்க்கிற ஆண் களைப்போல் அல்லன், அவன். பெண் களைப் போலவோ உதவாத அலியோ அல்ல அவன். அவனைக் கண்ணால் பார்க்க முடியாது. இருப்பவனில்லை; இல்லையும் இல்லை. வேண்டும்போது வேண்டும் உருவில் தோன்றுவான்; தோன்றமாட்டான். என் பெருமானைக் கூறுவது ரொம்ப கஷ்டமாக இருக்கிறது.

உலகின் சிறந்த கவிஞர்களில் ஒரு வரும் பிரபந்தத்தில் திருவாய்மொழி மூலம் வேதத்தின் சாரத்தைக் கொண்டு வந்த நம்மாழ்வாரே திருமாலை இன்ன வன் என்று கூறுவதற்கு எவ்வளவு கஷ் டப்படுகிறார். எப்படி சொல்வது என்று தெரியவில்லை? ‘கூவும் ஆறு அறிய மாட்டேன்’ என்கிறார் பாருங்கள். நம்மால் முடியுமா? வார்த்தைகளால் அவனைச் சிறைப்பிடிக்க முடியாது.

(படிக்கலாம்)

## வாரம் ஒரு பாசுரம்



# தித்திக்கும் திங்கள்!

ஹலோ வாசகர்களே!

நன்றே செய்; அதையும் இன்றே செய்' என்று சொல்வார்கள். கடந்த திங்கட்கிழமை (11.6.07) திடீரென ஒரு யோசனை. உடனடியாக ஆசிரியர் மற்றும் ஆசிரியர் குழுவுடன் கலந்தாலோசித்தோம். அடுத்த சில மணி நேரத்தில் உதயமாகியது 'தித்திக்கும் திங்கள்.'

தொலைபேசி மூலம் வாசகர்களைத் தொடர்பு கொண்டு அந்த வாரம் வெளியாகியுள்ள கல்கி இதழ் குறித்து கருத்து கேட்க ஆரம்பித்தோம். வெறும் கருத்து கேட்பதோடு விடலாமா? கூடவே, அவர்களுக்குப் பரிசும் கொடுப்பதென்று முடிவெடுத்தோம்.

எங்கள் தொலைபேசி வலையில் முதலில் சிக்கியவர் **சென்னையைச் சேர்ந்த எஸ்.சுந்தரேசன்** முறையாக அறிமுகம் செய்து கொண்டு ''இந்த வாரம் கல்கியில் 'பிள்ளைகளிடம் அதிகாரம் செய்யாதீர்கள்' என்றொரு கட்டுரை வெளியாகியுள்ளது. அது குறித்து தங்கள் கருத்தைச் சொல்லுங்களேன்'' என்றோம்.

''மார்க் எடு, மார்க் எடு என்று பிள்ளைகளைப் போட்டு வறுத்தெடுப்பது கண்டிக்க வேண்டிய விஷயம்தான். அவர்களின் இயல்பையும் திறனையும் உணர்ந்து அதற்கேற்ப தட்டிக் கொடுத்து வளர்க்கணும். இந்த வருடம் அண்ணா பல்கலைக் கழக கவுன்செலிங்கில் கிட்டத்தட்ட முன்னூறு மாணவர்கள் மார்க் அடிப்படையில் ஒரே ரேங்கில் இருக்காங்களாம். இவங்களைக் குலுக்கல் முறையில் வரிசைப்படுத்துவாங்களாம். அப்போ விழுந்து விழுந்து படிச்சு, மார்க் எடுத்தும் என்ன பிரயோஜனம்? அதிர்ஷ்டத்தைதானே நம்ப வேண்டியிருக்கு?'' என்று தனது கருத்தை 'பளிச்'செனத் தெரிவித்தார்.

நன்றி சுந்தரேசன் அவர்களே! இவர் வாசகர் மட்டுமல்ல, கல்கியின் சந்தாதாரரும் கூட. ஆகவே, இவரது சந்தா முடியும் வாரத்திலிருந்து மேலும் ஆறு மாதங்களுக்குச் சந்தா நீட்டிக்கப்பட்டு, பரிசாக அளிக்கப்படுகிறது.



✱ எஸ்.சுந்தரேசன்

அடுத்து மாட்டியவர் மதுரைக்காரர். பெயர் மதிவாணன். இடைத் தேர்தல் குசலங்களை விசாரித்துவிட்டு ''இந்த வாரம் கல்கியில் 'தயிர் சாதத்துக்கு வந்த மவுசு' கட்டுரையில் ஒரு சித்த மருத்துவர் வர்றார். அவர் பேரைச் சொல்லுங்க பரிசு தருவோம்'' என்றோம்.

''ஐயையோ! காலையிலதான் கல்கியைப் புரட்டினேன். இப்ப கையில இல்லையே டைம் கொடுங்களேன். வீட்டுக்குப் போனதும் பார்த்துட்டு போன் செய்யறேன் பரிசு பெருசு இல்லை சார். கல்கியில என் பேரு வந்தா போதும்'' என்றார்.

மறக்காமல் மாலை நான்கு மணிக்குத்

# புதிய பகுதி

# முன்னறிவிப்பின்றி...
# அசத்தல் + அதிரடியுடன்...

தொடர்பு கொண்டு சரியான பதிலைச் சொன்னார். மதிவாணன் சார் உங்களுக்குப் பரிசா இடைத்தேர்தல்ல 'சீட்' வாங்கித் தரலாமான்னு யோசிச்சோம்! உங்களுக்கு அரசியல்ல ஆர்வம் இருக்குமோ இல்லையோன்னு சந்தேகம்! அதனால அமரர் கல்கியின் அற்புதமான புத்தகம் ஒண்ணை பார்ச்சல்ல அனுப்பறோம்! வாங்கிக்கங்க!

**தி**டீர்னு போன் செய்ததால சிலருக்கு உண்மையிலேயே கல்கியில இருந்துதானான்னு சந்தேகம். பதில் சொன்ன வங்ககிட்டே போட்டோ கேட்டதும் தயங்கினாங்க. ஒரு வாசகி ஒரு மணி நேரம் விட்டு போன் பண்ணி 'கன்ஃபார்ம்' பண்ணிகிட்டாங்க.

**இது சும்மா லேஅவுட் அழகுக்கு. இதைப் பார்த்துட்டு ஐஸ்வர்யாவே போன்ல பேசுவாங்கன்னு நீங்க கற்பனைச் செஞ்சீங்கன்னா நாங்க பொறுப்பில்லை!**

உஷாருதான்!

**ச**ரி வாசகர்களே, இந்தப் பகுதியில் நீங்களும் இடம் பெறணுமா? உங்கள் பெயர், முகவரி, அத்துடன் கண்டிப்பாகத் தொலைபேசி அல்லது அலைபேசி எண்ணைக் குறிப்பிடுங்கள். உங்கள் புகைப்படமும் அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி:
'திக்திக்கும் திங்கள்' ஆசிரியர் - கல்கி,
47-NP., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032

ஒவ்வொரு வாரமும் திங்கள் கிழமை காலை பத்து மணிக்குமேல் மாலை ஆறு மணிக்குள் உங்களைத் தொடர்பு கொள்வோம். அந்த வாரத்தின் கல்கியை கையிலேயே வெச்சுக்கிட்டு இருங்க. கேள்வி, கருத்துன்னு எது வேணும்னாலும் கேட்போம்! பரிசு கொடுத்து அசத்துவோம்! ரெடியா?

- கல்கி டீம்





கல்கி



2007 ஜூன் 24
சர்வஜித் ஆனி 10
மலர் : 65
இதழ் : 47


தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்.


## கூட்டணி வியூகமா? குடியரசுத் தலைவர் தேர்தலா?

குடியரசுத் தலைவர், கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டவராக இருக்க வேண்டும் என்பது நமது ஜனநாயக மரபு. அரசியல் ஞானம், நாட்டுப் பற்று, நேர்மை, மன முதிர்ச்சி, தார்மிக பலம் - இவற்றைத்தான் மக்கள் இந்தியக் குடியரசுத் தலைவரிடம் எதிர்பார்க்கிறார்கள். இந்த எதிர்பார்ப்பை அப்துல் கலாம் அருமையாகப் பூர்த்தி செய்தார். ஆனால், அவரையே மறுமுறை குடியரசுத் தலைவராக்க நம்முடைய அரசியல்வாதிகளுக்கு விருப்பமில்லை! பல்வேறு கட்சித் தலைவர்களும் கூடி கூடிப் பேசி, யாரைக் குடியரசுத் தலைவர் தேர்தலில் வேட்பாளராக்கலாம் என்று விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள்.

சோனியா காந்தியும் மாயாவதியும் சந்திக்கிறார்கள். டெல்லி போய் வந்த கருணாநிதி, ''குடியரசுத் தலைவருக்கான வேட்பாளர் நியமனம் பற்றி முடிவெடுக்கவில்லை. மீண்டும் ஒரு முறை டெல்லி சென்று அதை இறுதி செய்வேன்'' என்கிறார்.

இது விஷயமாக கம்யூனிஸ்டுகளுக்கு ஒரு கருத்து; காங்கிரசுக்கு இன்னொரு கருத்து. பா.ஜ.க.வோ எதிர் அணி யாரை வேட்பாளராக்குகிறது என்று பார்த்துவிட்டுத் தனது வேட்பாளர் யார் என்று முடிவெடுப்பதாகக் கூறுகிறது! மொத்தத்தில், பஞ்சாயத்துத் தேர்தல்களும் கூட்டுறவு சங்கத் தேர்தல்களும் அரசியல்மயமானது போல் குடியரசுத் தலைவர் தேர்தலும் அரசியல்மயமாக்கப்பட்டு வருகிறது.






இந்தியக் குடியரசுத் தலைவருக்கு ஆட்சி அதிகாரங்கள் கிடையாது என்ற போதிலும் ஆட்சியாளர்களிடம் விளக்கம் கேட்கவும் மறைமுகமாகக் கண்டிக்கவும் வழி நடத்தவும் அதிகாரங்கள் உண்டு. ஓர் இக்கட்டில் குடியரசுத் தலைவரிடம் ஆட்சியாளர்கள் கலந்தாலோசிக்கும் மரபும் நம் நாட்டில் உண்டு.

ஆனால், இன்றைய அரசியல் தலைவர்கள் இந்த அதிகாரத்தைக்கூட குடியரசுத் தலைவருக்குத் தர விரும்பவில்லை. தங்கள் கைப்பாவையாக, வெறும் ரப்பர் ஸ்டாம்ப் தலைவராகவே அவர் இருக்க வேண்டும் என்று கணக்குப் போடுகிறார்கள். அப்படிப்பட்ட ஒருவரை வேட்பாளராக நியமித்து, ஆதரவு திரட்டுவதற்கு உண்டான சகலவிதமான யுக்திகளும் பரிமாற்றங்களும்தான் தற்போது திரை மறைவில் நிகழ்ந்து வருகின்றன.

காங்கிரஸ் தலைவிக்கும் பி.எஸ்.பி. தலைவிக்கும் இரண்டு மணி நேரம் இரகசியப் பேச்சுவார்த்தை நடத்தும் அவசியம் ஏன் வந்தது? அதன் இறுதியிலும்கூட வேட்பாளர் பெயர் வெளியாகவில்லை! இந்த ரகசியக் கூட்டத்தில் என்ன பரிமாற்றங்கள் அல்லது பேரங்கள் நடந்தன என்பது யாருக்கும் தெரியாது.

வெட்டவெளிச்சமாக, பகிரங்கமாக நடக்க வேண்டிய வேட்பாளர் நியமனம் ஏதோ தேர்தல் கூட்டணி வியூகம் அமைப்பது போன்ற சூழலில் சிக்கிக் கொண்டிருக்கிறது. ஜால்ராக்களையோ கட்சிக்காரர்களையோ குடியரசுத் தலைவர் பொறுப்புக்கு நியமிக்க முற்படுவது நாட்டுக்கு நல்லதல்ல; அவமானமும்கூட. நீண்ட கால நோக்கில், கட்சி அரசியலுக்கும் இந்தப் போக்கு கேடு விளைவிக்கும்.

மக்கள் பெருமிதம் கொள்ளத்தக்க வகையிலும் உலக அரங்கில் நமது நாட்டின் கௌரவத்தை உயர்த்தக்கூடிய அளவிலும் அறிஞர் பெருமக்கள் இந்தியாவில் இல்லாமல் போய்விடவில்லை. அத்தகையவரை அழைத்துப் பதவி வகிக்கச் செய்ய நம் அரசியல்வாதிகளிடம் பரந்த மனம்தான் இல்லை. ●

# செல்லூர் கணேசன்

# மாறாத மாற்றங்கள்!

இருபது வருடங்களுக்கு முன் பார்த்த மாதிரி இல்லை காரைக்கால். ஆரம்பப் பள்ளி ஆசிரியராக முதன் முதலில் க.மன்னவன் பள்ளியில்தான் பணியில் சேர்ந்தேன். ஓர் ஓட்டுக் கட்டடத்தில் ஒண்டுக் குடித்தனம் நடத்துவதுபோல் வகுப்புகள் நடந்துகொண்டிருக்கும். பிடிக்கவில்லை. பச்சூர் பள்ளிக்கு மாற்றல் வாங்கிச் சென்றேன்.

மீண்டும் க.மன்னவன் பள்ளிக்கே தலைமையாசிரியராக ஆர்டர் வந்தது. நான் பயந்த மாதிரி இல்லை. பல அடுக்கு மாடி கட்டடத்தில் இயங்கிக்கொண்டிருக்கிறது.

பள்ளிக்கூடத்துக்கு அருகில் இருக்கும் ஹோட்டலில்தான் தினமும் மதியம் சாப்பிடுவேன். பழைய பாசத்துடன் ஹோட்டலுக்குள் நுழைந்தேன். எல்லாம் புது முகம்.

ஹோட்டல் விஸ்தரித்து நல்ல இருக்கை வசதியுடன் குளிர்சாதன அறையெல்லாம் கட்டியிருந்தார்கள். காபிக்கு ஆர்டர் கொடுத்துவிட்டு ஏதாவது தெரிந்த முகம் இருக்கிறதா என்று சுற்றும் முற்றும் பார்த்தேன். பக்கத்து மேசையை கிளீன் செய்து கொண்டிருந்த அந்த நீலச் சட்டைக் காரரைப் பார்த்ததும் அதிர்ச்சி!

இருபது வருடங்களுக்கு முன் மேசை துடைத்துக் கொண்டிருந்த கிளீனர். பெயர் கூட நினைவிருக்கிறது. நீலமேகம்.

''என்ன நீலமேகம் என்னை நினைவிருக்கிறதா?''

சற்று யோசித்தவர் ''மாதவன் சார்தானே?'' என்றார்.

நீலமேகத்தைப் பார்த்தபோது வருத்தமாக இருந்தது.

சற்று ஆதங்கத்துடன் ''ஏன் நீலமேகம் இப்படியே இருக்கீங்க. ஏதாவது முன்னேற்றத்துக்கு வழி பார்க்கக் கூடாதா?''

''இது போதும் சார். இதுவே கடவுள் அருள்'' என்றார்.

'சே' என்று இருந்தது. பெரிய முன்னேற்றம் எதுவும் வேண்டாம். கிளீனரிலிருந்து ஒரு சர்வராகக் கூடவா மாறக் கூடாது.

காபிக்கான பில்லைக் கல்லாவிலிருந்து கொடுத்து, மீதிக்குச் சில்லறை வாங்கும் போதுதான் பார்த்தேன் ஹோட்டலின் பெயரை:

'ஹோட்டல் நீலமேகம்'. சற்று அதிர்ச்சி அடைந்தவனாய் கல்லா அருகில் வந்த நீலமேகத்தைப் பார்த்தேன்.

''மாதவன் சார்! இந்த ஹோட்டலை பத்து வருஷத்துக்கு முன்னாடி வாங்கினேன். இப்ப பீச் ரோட்ல புதுசா ஒரு ரெஸ்டாரண்ட் திறக்கிறேன். திறப்பு விழாவுக்கு நீங்க அவசியம் வரணும். இந்தாங்க பத்திரிகை'' என்றார். ○






# கதவைத் தட்டும் காஸ்!

★ உங்கள் வீட்டுக்கு காஸ் இணைப்பு வேண்டுமென்றால் நீங்கள் முதலில் அணுக வேண்டியது அருகிலுள்ள காஸ் ஏஜென்ஸி நிறுவனத்தைத்தான்!

★ மத்திய அரசைச் சேர்ந்த இந்தியன் ஆயில், பாரத் பெட்ரோலியம் மற்றும் ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் ஆகிய நிறுவனங்கள் காஸ் விநியோகம் செய்கின்றன. இவற்றைத் தவிர, ஸ்பிக் போன்ற தனியார் நிறுவனங்களும் சிறிய அளவில் காஸ் விநியோகத் தொழிலில் ஈடுபடு

**வீட்டு உபயோக காஸ் சிலிண்டரை, உணவகங்கள் மற்றும்**

கின்றன.

★ காஸ் கனெக்ஷன் பெற அத்தியாவசியத் தேவையே ரேஷன் கார்டுதான்! ஏஜென்ஸி அந்தக் கார்டுக்கு ஏற்கெனவே கனெக்ஷன் வழங்கப்பட்டிருக்கிறதா? என்று சரி பார்த்து, உடனடியாக கனெக்ஷன் வழங்கும்.

★ சில குடும்பங்களில் அப்பா பெயரில் கார்டு இருக்கும்... மகனுக்குத் திருமணம் ஆகி, தனியாக வீடு அமைத்துக் கொள்வார். அப்படிப்பட்டவர் புதிய ரேஷன் கார்டுக்கு விண்ணப்பித்துவிட்டு, அதற்கான அத்தாட்சியுடன் காஸ் ஏஜென்ஸியை அணுகி, கனெக்ஷன் பெறலாம்.

★ ஒரு ரேஷன் கார்டில் ஒரு காஸ் இணைப்பு மட்டுமே கொடுக்கப்படும். கூடுதலாக ஒரு காஸ் சிலிண்டர் பெற வேண்டுமென்றால் மீண்டும் விண்ணப்பிக்கலாம். ஆனால், பொதுவாக ஏஜென்ஸிகள் பல வருடங்களுக்கு ஒரு முறைதான் கூடுதல் சிலிண்டர் தருகின்றன.

★ வீட்டு உபயோகத்துக்குக் கொடுக்கும் காஸ் சிலிண்டரின் எடை 14.2 கிலோ. வர்த்தக உபயோகத்துக்குக் கொடுக்கும் காஸ் சிலிண்டரின் எடை 19 கிலோ. இருபத்தொரு நாட்கள் பயன்பாட்டுக்குப் பிறகுதான் காலி சிலிண்டருக்கு மாற்றாக புதிய சிலிண்டரைப் பெற முடியும்.

வர்த்தக உபயோகத்துக்கு காஸ் இணைப்பு வாங்குவதென்றால், உங்கள் நிறுவனம் அல்லது கடை குறித்த முழு விவரங்களோடு, எண்ணெய் நிறுவனங்களை அணுக வேண்டும். அவர்கள் சம்பந்தப்பட்ட காஸ் ஏஜென்ஸிக்கு ஆணை அனுப்புவார்கள்.

★ வீட்டு உபயோக காஸ் சிலிண்டரை



உணவகம் மற்றும் கார் உபயோகங்களுக்குப் பயன்படுத்துவது சட்ட விரோதம் ஆகும். எனவே, பயன்பாட்டைக் கவனித்து நடவடிக்கை எடுக்க, எண்ணெய் நிறுவனங்களுக்கும், சிவில் சப்ளை அதிகாரிகளுக்கும் அதிகாரம் உண்டு.

★ காஸ் கனெக்ஷன் பெற முதலில் டெபாஸிட் தொகை மற்றும் இதர செலவுகளுடன் ரூ.1500/- ஆகும். காஸ் அடுப்பை ஏஜென்ஸியில்தான் வாங்க வேண்டுமென்று கட்டாயம் கிடையாது. தர நிர்ணயக் கழகம் முத்திரையிட்ட எந்த அடுப்பையும் உபயோகிக்கலாம். இணைப்பு ரப்பர் குழாயும் தர நிர்ணயத்தோடு இருக்க வேண்டும். அடுப்பு டியூபையும் சிலிண்டரையும் இணைக்கும் ரெகுலேட்டரை ஏஜென்ஸி கொடுக்கும்.

★ ஓர் ஏரியாவிலிருந்து மற்றொரு ஏரியாவுக்கு வீடு மாற்றி செல்லும்போது டெபாஸிட் ரசீதையும், சிலிண்டர் ரெகுலேட்டரையும் ஏஜென்ஸியில் காண்பித்து, புது ஏரியா ஏஜென்ஸி பெயரைச் சொல்லி மாற்றல் ரசீது வாங்கிக் கொள்ள வேண்டும். அதைக் கொண்டு புது ஏஜென்ஸியை அணுகினால் விநியோகம் தொடரும். பழைய ரெகுலேட்டரையே புது ஏஜென்ஸியில் காண்பித்து, தொடர்ந்து பயன்படுத்திக் கொள்ளலாம்.

- கௌசி

**வாகனங்களுக்குப் பயன்படுத்துவது சட்டப்படி குற்றம்!**



''டாக்டர், என் ''தொப்பை''யைக் குறைக்க வழி சொல்லுங்க, இதனால் என் கஸ்டமர்களை நெருங்கவே முடியலே!''

''நீங்க என்ன செய்யறீங்க?''

''ஜென்ட்ஸ் டெய்லரா இருக்கேன் டாக்டர். இன்ச் டேப்ல அளவெடுக்க முடியலே!''

- வெ.சீதாராமன்

# ஈடு செய்யக்

''தன்னைப் பற்றிய பத்திரிகைச் செய்தியைப் பார்த்ததும் தலைவர் குஷியாயிட்டாரே?''

''ஏன் ஆகமாட்டார்... 'பெட்டி'ச் செய்தியாயிற்றே அது!''

- சி.நாச்சிமுத்து





''அமைச்சரே! நான் போருக்குச் செல்வதைப் பற்றி மக்கள் என்ன சொல்கிறார்கள்?''

''இது 'ஈடு செய்யக் கூடிய இழப்புத்தான்' என்கிறார்கள் மன்னா!''

- தஞ்சை தாமு



"உங்க ஹஸ்பெண்டுக்குத் தூக்கத்துல நடக்கற வியாதி ஒரு வருஷமா இருக்குன்னு தெரிஞ்சும், ஏன் சொல்லலே?"

"நீங்க அட்வைஸ் பண்ண மாதிரி அவர் 'வாக்கிங்' போறதே இல்ல, அட்லீஸ்ட் இப்படியாவது நடக்கட்டும்னு பேசாம விட்டுட்டேன்!!"

- வெ.சீதாராமன்

# கூழய இழப்பு!



"நூறு ரூபாய் லஞ்சம் வாங்கினால் ஒரு ரூபாய் வரி கட்டணுமா?"

"ஆமாம்... இதன்மூலம் லஞ்சம் வாங்கும் பழக்கம் ஒழிந்து விடுமாம்.

-எஸ்.மோகன்


"இன்ஸ்பெக்டர் சார், எனக்குப் பாதுகாப்பு வேணும்..."

"ஏன்... என்னாச்சு?"

"இந்த வருஷம் கண்டிப்பா நான் பெயிலாயிடுவேன். எங்க அம்மா, அப்பா என்னை அடிச்சே கொன்னுருவாங்க."

- பி. ஜானகி





* டோனி பிளேர்

# விடைபெறும் கனவுக்

● மருதன்

டோனி பிளேர் போல் கோர்டன் பிரவுன் இருப்பாரா? இந்தக் கேள்விக்குப் பதில் தேடும் முயற்சியில் இறங்கியிருக்கிறது பிரிட்டன். எந்தப் பத்திரிகையைத் திறந்தாலும் பிளேர், கோர்டன் பிரவுன். கோர்டன் பிரவுன், பிளேர்.

நம்பர் 10, டவுனிங் தெரு வீட்டின் சாவியை பிரவுனிடம் ஒப்படைக்கத் தயாராகிவிட்டார் பிளேர். பத்து ஆண்டுகள் என்பது மிக நீண்ட காலம். போதும் என்று தோன்றிவிட்டது அவருக்கு. போதும் என்று தோன்றி விட்டது அவர் கட்சிக்கும். அதாவது தொழிலாளர் கட்சிக்கு (Labour party). ஆரம்பக் காலத்தில் பிளேர் கனவுக் கதாநாயகன். டெடிபியர் போல் பிளேரைத் தூக்கி வைத்துக் கொஞ்சிக் கொண்டிருந்தவர்கள்தான், அவர் ராஜினாமா முடிவை அறிவித்த போது, நன்றி! போய் வாருங்கள் என்று சொன்னார்கள். மே 10, 2007 அன்று தன் ராஜினாமாவை அறிவித்தார் பிளேர். ஜூன் 27 அவருடைய கடைசி வேலை நாள்.

தொழில் கட்சியின் தலைவராக பிளேர் தேர்ந்தெடுக்கப்பட்ட போது (1994), சரி மற்றொரு தலைவர் என்றுதான் கட்சி நினைத்துக் கொண்டது. ஆனால், பிளேர் காட்டிய அதீத தீவிரமும், அரசியல் ஆர்வமும் வெகு விரைவில் அவரை உச்சத்தில் கொண்டுபோய் அமர வைத்தன. 1997 தேர்தலில் போட்டியிட்ட போதுகூட, பிளேர் ஜெயிப்பார் என்று யாரும் நினைத்திருக்கமாட்டார்கள். சாதாரண வெற்றியா அது? பதினெட்டு ஆண்டுகளாக பிரிட்டனை ஆண்டுகொண்டிருந்த கன்சர்வேடிவ் கட்சியை, கண் மூடி கண் திறப்பதற்குள் தூக்கி அடித்து, காணாமல் போகச் செய்த வெற்றி.

இத்தனைக்கும் இந்தப் பத்து ஆண்டுகளில் நிறையவே வேலை பார்த்திருக்கிறார் பிளேர். அவர் ஆட்சிக் காலத்தில் பொருளாதார ரீதியாக பிரிட்டன் நன்றாகவே செழுமையடைந்திருக்கிறது. பங்குச்சந்தை சீரடைந்திருக்கிறது. வேலை வாய்ப்புகள் பெருகியிருக்கின்றன. குறைந்தபட்ச ஊதியம் என்று குறிப்பிட்டத் தொகையை நிர்ணயம் செய்திருக்கிறார்.

வட அயர்லாந்தில் புதிய அரசு பூப்பதற்கு காரணமாக பிளேர் இருந்திருக்கிறார். ஆப்பிரிக்காவுக்கு அதிக அள




# கதாநாயகன்!

வில் நிதி வழங்கியிருக்கிறார்.

தவிர பிரிட்டன்வாசிகள் அவரால் நிறையவே மாறியிருக்கிறார்கள். ஓர் ஆணும் ஆணும் திருமணம் செய்துகொள்ளலாம் என்று சட்டம் இயற்றும் அளவுக்கு விசாலமாகியிருக்கிறார்கள். கறுப்பர்களைத் துரத்தியடிப்போம், பிரிட்டன் அல்லாத பிற நாட்டினர் இருக்கக் கூடாது என்றெல்லாம் பேசி, யாரும் ஓட்டு வாங்க முடியாது.

பிறகு ஏன் அவரைக் கட்சி கைகூப்பி அனுப்பி வைத்தது? அப்படியெல்லாம் அனுப்பவில்லை அது வதந்தி என்கிறார்கள் சிலர். வதந்தி எனில் பிளேர் ஏன் ராஜிநாமா செய்யவேண்டும்? மூன்று முறை ஜெயித்தவருக்கு இன்னும் இரண்டு ஆண்டுகளை ஓட்டத் தெரியாதா? அப்படி என்ன நெருக்கடி அவருக்கு?


அதன் பெயர் இராக்! இந்த ஒரு காரணம் போதாது? ஜார்ஜ் புஷ் ஃபோன் பண்ணிச் சொன்னார் என்ற ஒரே காரணத்துக்காக, ஓட்டு மொத்த பிரிட்டனையும் போருக்கு இழுத்தவர் பிளேர்.

இராக் விவகாரத்தில் புஷ் பேச்சைக் கேட்காமல் விட்டிருந்தால் பிளேரை பிரிட்டன் கொண்டாடியிருக்கும். ஆனால், பிளேர் அசைந்துகொடுக்கவில்லை. இராக் விஷயத்தில் நான் எடுத்த முடிவு சரிதான். சதாமை வீழ்த்துவது காலத்தின் அவசியம். சதாமுக்கு எதிரான யுத்தம் என்பது பயங்கரவாதத் துக்கு எதிரான யுத்தம். ஆகவே, பிரிட்டன் கலந்து கொண்டது. பத்திரிகையாளர்கள் விடவில்லை. துரத்தித் துரத்திக் கேட்டார்கள்.

''மிஸ்டர் பிளேர், உங்களுக்கு இன்னொரு வாய்ப்பு வழங்கப்பட்டால் உங்கள் முடிவு என்னவாக இருக்கும்?'' பிளேர் தீர்மானமாகச் சொன்னார்: ''நிச்சயம் புஷ்ஷுடன் கைகோத்துக் கொள்வேன். அதற்காகத் தலைகுனிய மாட்டேன்.''

**பி**ளேருக்கு அடுத்து, பிரதம மந்திரி பொறுப்பேற்றுக்கொள்பவர் தற்போதைய சான்ஸிலர் கோர்டன் பிரவுன். இவருக்கு அவர் எப்படி? இவருக்கு பிளேர் எவ்வளவோ பரவாயில்லை என்பது பரவலான கருத்து. பத்திரிகை தலையங்கங் கள் திருபத்திரும்பச் சொல்வது இதைத்தான்.

பிளேர் அளவுக்கு பிரவுனால் பரிமளிக்க முடியாது. ஏன்? பிளேருக்கு இருந்த அளவுக்கு பிரவுனுக்கு வசீகரம் கிடையாது. ஆதரவு கிடையாது. பிளேருக்கு இருந்ததைப் போன்ற தொலைநோக்குப் பார்வை அவரிடம் இல்லை. புத்தி



★ கோர்டன் பிரவுன்

## ரீடர்ஸ் கார்னர்!



## தேவையா?

எனக்குத் தெரிந்த ஒரு கணவன் - மனைவி இருவருமே ஆசிரியர்கள். அவர்களுக்கு முதலில் ஓர் ஆண் குழந்தைப் பிறந்தது. மூளை வளர்ச்சியற்ற அந்தக்குழந்தை மூன்று வயதில் இறந்து விட்டது. அடுத்து பிறந்த பெண் குழந்தையும் அதே போல் மூன்று வயதில் இறந்துவிட்டது. அதனால் ஒரு பெண் குழந்தையைத் தத்தெடுத்து வளர்த்தார்கள். சில வருடங்களில் கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிந்து விட்டனர். குழந்தையைக் கவனித்துக் கொள்ள தன்னால் முடியவில்லை என்று இருவருமே கை விட, தத்து பெண், மீண்டும் அனாதை இல்லத்தில்.இது தேவையா? இதுவே சொந்தக் குழந்தையாக இருந்திருந்தால் 'நான்தான் வளர்ப்பேன்' என போட்டியிட்டு இருப்பார்கள் அல்லவா?

- ஜெகா, கும்பகோணம்

சாலித்தனம் இல்லை. இப்படியாக நீள்கிறது அந்த லிஸ்ட்.

பிரவுனுக்கும் இது தெரியும். "நான் ஆயிரம் நல்ல காரியங்கள் செய்தாலும், பிளேர் போல் இல்லை என்றுதான் எல்லோரும் சொல்லப்போகிறார்கள். கிட்டத்தட்ட பதினைந்து ஆண்டுகள் கட்சியில் இருந்திருக்கிறேன். இதுவரை என்னைப் பற்றி துண்டுச் செய்திகள்கூட வெளிவந்ததில்லை. சர்ச்சைகள் கூட இல்லை. பிரவுன் வாழ்க கோஷம் போட வேண்டாம். பிரவுன் ஒழிக என்றாவது காதுபட கத்தக்கூடாதா!"

யோசித்துப் பார்த்து ஒரு முடிவுக்கு வந்தார் பிரவுன். "பிளேரை மிஞ்ச முடியாது. ஆகவே, அவரை அப்படியே பிரதி எடுக்கப் போகிறேன். பிளேர் அணிவதைப் போன்ற கோட். அதே நிறம். அதே குணம். அதே மடிப்புகள். தலையை அழுத்தமாக வாரி படிய வைத்தார். எப்போதும் அணியும் சிவப்பு டையை தூக்கி கடாசி விட்டு பிளேரைப் போலவே நீல நிற டையை அணிந்தார்.

சிடுசிடுப்புடன் இருப்பதைக் குறைத்துக்கொண்டுவிட்டார். உதடுகளை விரித்து புன்னகை செய்யும் வித்தையைக் கற்றுக் கொண்டிருக்கிறார். டோனி பிளேர் போல் ஜோக் அடிக்கவும் அவ்வப்போது முயற்சி செய்கிறார்.

தொழிலாளர் கட்சி பிரவுனை தலைவராக ஏற்றுக்கொண்டாகிவிட்டது. புதிய அரசியல் தளத்தை உருவாக்குவேன். "எல்லாவற்றிலும் வெளிப்படையாக இருப்பேன். பிரச்னைகளைப் பற்றி திறந்த மனத்துடன் விவாதிப்பேன். உங்கள் அத்தனை பேரையும் கவனித்துக்கொள்வேன்." பிரவுன் தன் மக்களுக்கு அளித்துள்ள வாக்குறுதி இது. அடுத்த ஆறு வாரங்களுக்கு டோனி பிளேர் தான் எனக்கு எல்லாம். அவரிடம் கலந்தாலோசித்து தான் எல்லா வேலைகளையும் பார்ப்பேன் என்று சொல்லியிருக்கிறார் பிரவுன்.

உண்மையில், பிளேரின் அத்தனை சாதனைகளுக்கும் பின்னால், பிரவுன் இருந்திருக்கிறார். பிளேர் எடுத்த ஒவ்வொரு அரசாங்க முடிவும் பிரவுனிடம் விவாதிக்கப்பட்ட பிறகே எடுக்கப்பட்டிருக்கிறது. பிரவுன் ஆட்சியில் அமர்ந்த பிறகு, பிரிட்டன் தன் படைகளை இராக்கிலிருந்து விரைவாகத் திரும்பப் பெற்றுக் கொள்ளும் என்று எதிர்பார்க்க முடியாது.

பிரவுனிடமே கேட்டார்கள். "ஐயா, இராக்கில் என்ன செய்யப்போவதாக உத்தேசம்?" அவர் அளித்த பதில் இது. "நான் நேரடியாக இராக்குக்குப் போகப் போகிறேன். இராக் நிலவரத்தை நேரடியாக ஆராயப் போகிறேன். அங்கே என்ன நடக்கிறது என்பதைத் திரும்ப வந்து சொல்கிறேன்."

விமர்சனம்



# பிறப்பு!

ஜாதிக் கொடுமையை மையமா வெச்சு எடுக்க நினைச்சு, எங்கெங்கோ தாவித் தடுமாறி நிலைக்கே வராமல் போற கதை. சொல்ல வந்த விஷயத்தை நேரடியா சொல்லாம, ஜவ்வு மாதிரி இழு இழுன்னு இழுக்குறாங்க. படம் முழுக்க சோகம்.

நடிப்புன்னா கிலோ என்ன விலைன்னு கேக்குற அறிமுக ஹீரோ பிரபா. அடுத்தடுத்த படங்களில் கொஞ்சம் கவனம் எடுத்துக்கோங்க. இல்லேன்னா தமிழ் சினிமாவுல நிலைக்க முடியாது...! மொத்த பாரத்தையும் தன் மேல தாங்குற 'நாயகி கார்த்திகா. நடிப்புல நல்ல தேர்ச்சி. யார் அந்த இன்னொரு பொண்ணு? இந்தக் கதைக்கும் அவுங்களுக்கும் என்ன சம்பந்தம்? இயக்குனருக்கே வெளிச்சம். கஞ்சா கறுப்பு சிரிக்க வைக்க முயற்சி பண்றாரு, முடியல. சரண்யா எப்பவும் போல புள்ள பாசத்துல பொலபொலன்னு கண்ணீர் விட்டுக் கதறுறாங்க. சண்முகராஜ் வில்லனா வந்து நல்லாவே மிரட்டுறாரு.

பரத்வாஜ் இசையில பரவசம் அதிகம். 'உலக அழகி நான்தான்', 'இதுதானா' பாடல்கள் பட்டாம்பூச்சியை மனசுல பறக்க விடுது. பாலுமகேந்திராவோட மகன் ஷங்கியோட ஒளிப்பதிவுல நேர்த்தி அதிகம். கிராமத்துக் காட்சிகளில் குளிர்ச்சியூட்டுது அவருடைய கேமரா. ரோகாந்த் நந்தாவோட வசனங்கள் சில இடங்கள்ல பளிச்... பல சமயங்களில் வெறிச்!

திரைக்கதை செம டல். வேகம் இல்லாம தத்தளிக்குது. கருத்து சொல்லணும்னு வந்து வெறுத்துப் போக வைக்கிறாங்க. பிறப்புன்னு பேர் வச்சுட்டு பிறக்கறதுக்கு முன்னாடியே கொடுத்துட்டாங்களோ!

- லஜ்ஜாவதி



✱ சிகிச்சையின்போது

# படிக்கும்போதே

"ப்ளஸ்டு முடித்த பெரும்பாலான மாணவர்களின் டார்கெட் கனவு என்ஜினியரிங், எம்.பி.பி.எஸ். என்பதாகத்தான் இருக்கும். ஆனால், ப்ளஸ்டு முடித்த எல்லா மாணவர்களுக்கும் என்ஜினியரிங், எம்.பி.பி.எஸ் சீட் கிடைப்பது என்பது அவ்வளவு எளிதான காரியமா என்ன? அதனால்தான் அதே தரத்துடன் விளங்கும் பேச்சுத்திறன் மற்றும் மொழி கேட்பியல் (Department of Speech, Language and Hearing Science) துறையின் Audiology and Speech Pathology என்கிற நான்கு வருட இளநிலை பட்டப்படிப்பை மாணவர்கள் தேர்ந்தெடுக்க ஆரம்பித்திருக்கிறார்கள். இந்தப் பட்டப்படிப்பின் சிறப்பு அம்சமே படிக்கும்போதே வேலை ரெடி என்பதுதான்" என்கிறார் ராமச்சந்திரா மருத்துவ கல்லூரியின் பேச்சுத்திறன் மற்றும் மொழி கேட்பியல் துறையின் பேராசிரியரான ரூபா நாகராஜன்.

"இந்தப் பட்டப்படிப்பு ஏதோ சமீப காலமாகத்தான் கல்லூரியில் சொல்லிக் கொடுக்கப்படுகிறது என்று பலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், பத்து வருடங்களுக்கு முன்பே டெல்லியின் RCI (Rehabilitaion Council of India)ன் அங்கீகாரத்துடன் அமலுக்கு வந்துவிட்டது. இந்தியா முழுவதும் முப்பது கல்லூரிகளில் இந்தப் பட்டப்படிப்பு உள்ளது. தமிழ்நாட்டில் எஸ்.ஆர்.ஆம். தமிழ்நாடு திறந்த வெளிப் பல்கலைக் கழகம், பாண்டிச்சேரி விநாயகா மிஷன், ராமச்சந்திரா உள்ளிட்ட நான்கு கல்லூரிகளில் உள்ளது. இப்படிப்பில் இளநிலை முடித்து முதுநிலை படிக்கும் வசதி எமது ராமசந்திரா கல்லூரியில் மட்டும்தான் உள்ளது" என்கிறார்.

"பேச்சுத்திறன், மொழி கேட்கும் திறனில் நவீனமுறையைக் கொண்டு வரவும், அதிகரிக்கச் செய்யவும் இந்தப் படிப்பு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது.

ப்ளஸ் டூவில் சயின்ஸ் பாடத்தின் கீழ், ஐம்பது சதவீதத்திற்கு மேல் மதிப்பெண் பெற்றிருந்தாலும், ஒரு மருத்துவருக்குத் தேவையான சேவை மனப்பான்மையும், மனபக்குவமுமே இந்தப் படிப்புக்கான தகுதிகள்.

முதலில் BASLP (Bachelor in Audiology and Speech language Pathology) எனப்படும் நான்கு வருட பட்டப் படிப்பை முடித்த முதல் மாதமே பத்தாயிரத்துக்கு மேல் சம்பளத்துடன் வேலையில் சேர முடியும். அதுவே MASLP (Language Pathology) என



## திக்கு வாயுள்ள, மனவளர்ச்சிக் குன்றியக் குழந்தைகளுக்குச் சிகிச்சைச் செய்து குணமாகும்போது ஏற்படும்

## மகிழ்ச்சிக்கு ஈடு இணையே இல்லை...!



* ரூபா நாகராஜன்

# வேலை ரெடி!

மீண்டும் இரண்டு வருடம் முதுநிலைப் பட்டம் பயின்றால் வேலைக்குச் சேரும் முதல் மாதமே பதினைந்தாயிரத்துக்கு மேல் சம்பாதிக்க முடியும். இந்தப் படிப்பை முடித்தவர்களுக்கு, வெளிநாடு களிலும் வேலை வாய்ப்புகள் சிவப்புக் கம்பளம் விரித்து காத்துக் கொண்டிருக் கின்றன. இந்தப் படிப்பில் பல மாண வர்கள் எம்.எஸ்.சி முடித்து பி.எச்.டி.கூட செய்கிறார்கள்.

டாக்டராக வேண்டும் என்று கனவு கண்ட மாணவர்களுக்கு, இந்தப் படிப்பின் மூலமே மனரீதியான திருப்தி வந்துவிடும். மேலும், இந்தப் படிப்பில் இரண்டு விதமான சிறப்பம்சங்கள் உள்ளன. ஆடியாலஜியை மட்டுமே விரும்பினால் ஆடியாலஜி துறையிலும், ஸ்பீச் தெரபியை விரும்பினால் ஸ்பீச் தெர பிஸ்டாகவும் ஆக முடியும். இது அவர வர்களின் சாய்ஸ்!''

''இதற்கான படிப்பு செலவு என்ன? எப் படிப்பட்ட மாணவர்கள் இந்த துறையைத் தேர்ந்தெடுக்கிறார்கள்'' என்று கேட்டால்...

'அதை மாணவர்களிடமே கேளுங் களேன்' என்று கைகாட்டுகிறார் ரூபா நாகராஜன்.



''அரசு கல்லூரிகளாக இருந்தால் ஹாஸ் டல் செலவைத் தவிர்த்து பதினைந் தாயிரத்துக்குள் செலவாகும். தனியார் கல்லூரியாக இருப்பதால் ஹாஸ்டல் செல வைத் தவிர்த்து வருடத்துக்கு எழுபத் தைந்தாயிரம் செலவாகுது. ஆனா எந்த அளவுக்கு செலவு செஞ்சு படிக்குறோமோ, அதைவிட அதிகமாக இதுல சம்பாதிக்க முடியும்'' என்கிறார் மாணவர் தீபக்.

''அதுக்காக நாங்க பணம் சம் பாதிக்கதான் இந்தத் துறையைத் தேர்ந் தெடுத்துருக்கோம்ங்கிறதில்லீங்க. காது கேட்காம, பேச முடியாம, திக்கு வாயுள்ள, மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு சிகிச்சை செய்து குணமாகும்போது ஏற் படுற மகிழ்ச்சிக்கு ஈடு இணையே இல்லை'' என்று மெய்சிலிர்க்கிறார் மாணவி ஷெண்பகவள்ளி.

''ஆடியாலஜி மற்றும் ஸ்பீச் பெத் தாலஜி இன்னும் யாருக்குமே சரிவர தெரி யல. இது மாதிரி நல்ல விஷயங்களை மீடியா எடுத்துப் போய்ச் சேர்க்க வேண்டும். மாணவர்கள் பயனடைவர்கள்'' என்கிறார் டாக்டர் ரூபா நாகராஜன்.

**- ம.மனோவிக்டர்**

படங்கள்: பொள்ளாச்சி சுந்தரம்



# சிகரத்தில் சிவாஜி!

"மதாரி, அந்த ஆங்கிலேயர்கள் உன்னை அழைத்து ஏதோ விசாரித்தார்களே, என்ன விஷயம்...?"

"மகாராஜாவைத் தரிசிக்க உன்னால் உதவி செய்ய முடியுமா? என்று கேட்டார்கள்..."

"நீ என்ன சொன்னாய்...?"

"நான் மிகச் சாதாரண ஊழியன். என்னால் அது முடியாது என்று சொன்னேன்."

"ஏனடா மதாரி அப்படிக் கூறினாய்? சத்ரபதி சிவாஜியின் அருகிலேயே மெய்க் காப்பாளனாக, நீ இருப்பதால்தான் உன்னை அழைத்துப் பேசியிருக்கிறார்கள். அவர்கள் விருப்பத்தை நீ உடனே சிவாஜியிடம் சொல்..."

"சரி, மாதாஜி..."

அன்று மதியமே அந்த ஆங்கிலேய வர்த்தக குழுவினரைச் சந்திக்க அனுமதியளித்தார் சிவாஜி.

முடிசூட்டு விழா கொண்டிருந்த பரபரப்பான சூழ்நிலையிலும் சத்ரபதி சிவாஜி தங்களைச் சந்திக்க அனுமதி அளித்தது, அந்த மதாரியால்தான் என்பதை உணர்ந்த ஆங்கிலேயர்கள், அவனுக்கு மிகுந்த நன்றி கூறினார்.

முடிசூட்டு விழா முறைப்படி நிகழ்ந்து முடிந்ததும் சிவாஜி மகாராஜா, கோட்டையில் கோயில் கொண்டிருந்த குலதெய்வம் துல்ஜா பவானி தேவி ஆலயத்துக்குச் சென்று வழிபட்டார். ஆலய மண்டபத்திலேயே அன்னை ஜீஜாபாயின் பாதங்களில் விழுந்து வணங்கினார்.

ஆலயத்திலிருந்து திரும்பிய சத்ரபதி சிவாஜி, மதாரியை அழைத்து, "எங்கே... அந்த ஆங்கிலேயர்கள் அழைத்து வா... பார்க்கலாம்" என்றார்.

அவர்கள் அழைத்து வரப்பட்டனர். தங்களுக்கே உரிய முறையில் தொப்பியைக் கழற்றி, சிவாஜி மகாராஜாவுக்கு வணக்கம் செலுத்தினர். பிறகு நட்பின் அடையாளமாக ஒரு வைர மோதிரம், வேலைப்பாடுகள் மிக்க ஓர் உயரிய இருக்கை - இவற்றுடன் பதினாறாயிரம் தங்க மொகராக்கள் போன்றவற்றை அளித்தனர்.

அவர்களை உரிய இருக்கைகளில் அமரச் சொன்னார். அக் குழுவின் தலைவன் சற்றுத் தயங்கி நின்று, "யுவர் எக்ஸ்லன்ஸி, ஆங்கிலேய வர்த்தக நிறுவனங்கள் சார்பில் நாங்கள் தங்களிடம் சில கோரிக்கைகள் வைக்க வேண்டியிருக்கிறது..." என்றான்.

அமைச்சர், பண்டித நாராயண்ஜி ஆங்கிலேயரின் பேச்சை சத்ரபதி சிவாஜிக்கும், அவர் கூறும் மறுமொழியை அக் குழுவினருக்குமாக மொழிபெயர்த்து எடுத்துரைக்கும் பணியைச் செய்தார்.

"மாட்சிமைமிக்க மராட்டிய மன்னருக்கு ஒரு விண்ணப்பம்...' என அத் தலைவன் பேச்சை அவர் மொழி பெயர்த்து முடித்ததும்,

"சர் ஜார்ஜ் ஆக்ஸிண்டன், என்னை நீ மராட்டிய மன்னன் என்று ஒப்புக் கொள்கிறாயா...?" என்று வினவினார், சத்ரபதி சிவாஜி.

"இது என்ன கேள்வி மகராஜ்? அப்படி ஒப்புக்கொண்டதால்தானே தங்கள் நாட்டில் எங்கள் வர்த்தகப் பணிகளை நிகழ்த்த அனுமதி கேட்டுத் தங்களிடம் வந்து நிற்கிறோம்.

"நல்லது ஆக்ஸிண்டன். இன்று இப்படிப் பேசும் நீ, அன்றொரு நாள் சூரத் நகரில்

என்னைப் பற்றி என்ன கூறினாய்.''

''அன்று மராட்டிய சேனை சூரத் நகரைச் சூறையாடிய தருணம் மகாராஜ். உங்கள் தளபதியை வாள்முனையில் சந்தித்த நான், பிறகு துப்பாக்கியைக் காட்டி மிரட்டினேன். அவர், 'இது சிவாஜி மகாராஜாவின் சேனை என்பது நினைவிருக்கட்டும்' என்றார். நான், 'யார் மகாராஜா? அவன் ஒரு கொள்ளைக்காரன். உன்னையும் சுடுவேன்; அவனையும் சுடுவேன் என்றேன். அதை நான் மறக்கவில்லை...''

''இதில் நீ மறந்துபோன விஷயம் ஒன்று இருக்கிறது ஆக்ஸிண்டன்... அதை நான் நினைவு படுத்தட்டுமா...?'' என்றார் சிவாஜி.

''கூறுங்கள் மகராஜ்...''

''நீ அன்று சையத்பேக் என்னும் பணக்

கௌதம நீலாம்பரன்





**ஆக்ஸிண்டன் நீ அன்று என்னைச் சுடுவேன் என்று சொன்னவன். ஆனால், அன்றும் சரி... இன்றும் சரி... நான் உன்னை என் பகைவனாகவே கருதவில்லை.**

கார முகமதிய வணிகனின் பண்டகசாலை முன் நின்று, அதைக் காக்கப் போரிட்ட தருணத்தில்தான் நீ அப்படிக் கொக்கரித்தாய். அதற்காக உனக்கு சூரத் நகர முகமதிய ஆளுநர் ஒரு வீரவாளைக்கூட பரிசளித்துக் கௌரவித்தான் என்று கேள்விப்பட்டேன்...''

''இல்லை மகராஜ்! அந்தப் பரிசை திருப்பி அனுப்பி விட்டேன். ஆனால், நீங்கள் கூறுவது போன்று சில முகமதிய வணிகர்களுக்கு நாங்கள் பாதுகாப்பு அளித்தது உண்மைதான் மகராஜ்.''

''நியாயம்தான் ஆக்ஸிண்டன்! அன்றே கூட நான் என் தளபதிகளிடம் உன் வீரத்தைப் பாராட்டித்தான் பேசினேன். சூரத் மாநகர், 'மெக்காவின் நுழைவாசல்' என்றே இஸ்லாமியர்களால் போற்றப்படுகிறது. அந்த நகரத்தைச் சூறையாடினால்தான் மொகலாயர்களுக்கு அதிகம் வலிக்கும். எங்கள் பூனா நகரத்தை மொகலாயர் கைப்பற்றிப் பாழடித்தனர். அதற்குப் பழி வாங்கவே நான் சூரத்தைத் தாக்கினேன்...

''தெரியும் மகராஜ், 'சிவாஜி இஸ்லாமியர்களுக்குத்தான் எதிரி; ஐரோப்பியருக்கு அல்ல' என்று எங்கள் மேலாளர்கள் பலர் உரைத்ததை நான் கேட்டதுண்டு. நான் தங்களை நிந்தித்துப் பேசியதை மன்னித்து விடுங்கள் மகராஜ்...''

ஆக்ஸிண்டன் திடீரென இருக்கையிலிருந்து எழுந்து, சிவாஜி முன்பாக மண்டியிட்டே நின்றுவிட்டான்.

அவன் கவலையெல்லாம் தன் மீதுள்ள கோபத்தால் எங்கே சிவாஜி மகாராஜா அந்தத் தூதுப் பேச்சையே புறக்கணித்து விடுவாரோ என்பதாகவே இருந்தது. மராட்டிய அரசின் நாணயங்களை வடிவமைத்து உருவாக்குவது, பீரங்கி போன்ற போர்த் தளவாடங்களை வார்த்தளிப்பது போன்ற உரிமங்களை ஆங்கிலேயர்களுக்கே அளிக்கும்படி கோரி பெறுவது என்று பல அம்சங்களை உள்ளடக்கிய பேச்சாகும். எனவேதான் பணிந்து போவதில் அப்படியொரு தடாலடி முடிவை மேற்கொண்டான்.

சத்ரபதி சிவாஜி, அரியணையிலிருந்து எழுந்து வந்து அவனைத் தூக்கி நிறுத்தித் தோள் தழுவினார்.

''அன்று சூரத் நகரில் நீ என்னை நிந்தித்ததை நான் மறந்து விடுகிறேன் ஆக்ஸிண்டன். ஆனால், இன்று இப்போது ஒரு நிந்தனை செய்தாயே, இதை எப்படி மறப்பது, மன்னிப்பது...?''

''மகராஜ்! இன்று நான் தங்களை நிந்தனை செய்தேனா... என்ன சொல்கிறீர்கள்...?''

''இஸ்லாமியர்களுக்கு மட்டுமே நான் எதிரி என்று ஒரு கருத்து சொன்னாயே, அது நிந்தனை இல்லையா...?''

''எல்லோரும் அப்படித்தானே சொல்கிறார்கள்...?''

''எல்லோரும்' என்று சொல்லாதே ஆக்ஸிண்டன், 'எதிரிகள்' என்று சொல். நான் ஐரோப்பியரின் பகைவனல்ல என்று நீ எப்படி உணர்ந்தாயோ, அவ்வாறே நான் இஸ்லாமியர்களின் பகைவனல்ல என்பதை உணர்ந்து கொண்டவன் இந்த மதாரி.

''ஆம் மகராஜ்! எனக்கே அது வியப்பாகத்தான் இருந்தது. ஆசாரமான பிராமணர்கள் வைதீகச் சடங்குகள் செய்யும்போதுகூட, இந்த மதாரி உங்கள் அருகிலேயே நின்றிருந்தான். அதனால்தான் இவனுக்குள்ள முக்கியத்துவத்தை நான் உணர்ந்தேன்.

''ஆக்ஸிண்டன், நீ என்னையே துப்பாக்கியால் சுடுவேன் என்று கூறியவன். உன்னை

நான் அன்றும் சரி, இன்றும் சரி, பகைவனாக எண்ணவில்லை. உண்மையில் நான் இஸ்லாமிய விரோதியாக இருந்தால் இவன் இப்படி என் உயிர்க் காவலனாக நின்றிருப்பானா... நீயே சொல்?''

''நிச்சயம் இருக்க மாட்டான் மகராஜ்... இது எப்படிச் சாத்தியமாயிற்று?''

''ஆக்ரா கோட்டையில் நான் அவுரங்கசீபுவால் பலத்த காவலுடன் சிறை வைக்கப்பட்டிருந்த செய்தி உனக்குத் தெரியுமா ஆக்ஸிண்டன்...?''

''அது மாபெரும் சாகசங்களின் உச்சம் மகராஜ்.

''அந்த வீர சாகசங்களை நிகழ்த்தப் பெரிதும் துணை நின்றவன் இந்த மதாரி மெஹ்தர்தான் ஆக்ஸிண்டன். இவன் அவுரங்கசீபுவிடம் பணிபுரிந்தவன். இந்து மன்னனான என்னை ஆரம்பத்தில் வெறுத்த இவன், நான் சிறையிலிருந்தபடியே முஸ்லிம் தர்காக்களுக்கும் காணிக்கைகள் அனுப்புவது கண்டுவியந்தான். பிறகு என்னைச் சிறைக்கூடத்தில் வந்து சந்தித்தான்.

''ஆப்கானிஸ்தானில் நிகழும் கலவரம் ஒன்றை அடக்கும் பணியை நான் வெற்றிகரமாகச் செய்து திரும்பினால், என்னை மராட்டிய அரசனாக அங்கீகரிப்பதாகக் கூறி ஆப்கன் செல்லும் வழியில் என்னைக் கொலைகாரர்களை ஏவிக் கொன்று விட அவுரங்கசீபு திட்டமிட்ட உண்மையை என்னிடம் கூறினான். அந்த நன்றிக்கே இவனைப் பிறகு இங்கு அழைத்து வைத்துக் கொண்டிருக்கிறேன். இன்றுகூட இவன் என் தாயிடம் என்ன கூறினான் தெரியுமா...?''

''என்ன கூறினான்...?''

''என் மகுடாபிஷேகத்தை முன்னிட்டு என் தாய் இவனிடம், 'மதாரி, நீ என் மகனின் உயிர் காத்தவன். உனக்கு என்ன பரிசு வேண்டுமானாலும் கேள்... தருகிறேன்' என்றார். அதற்கு இவன், 'என்னை ஒரு இஸ்லாமியன் என்று ஒதுக்காமல், எப்படி சிவாஜி மகாராஜாவின் அரியணையையும் காக்கும் பொறுப்பு எனக்கு அளிக்கப்பட்டுள்ளதோ, அந்த நிலை நீடித்தால் போதும்' என்றானாம்.

''இவனைப் போன்று இன்னும் பல இஸ்லாமிய இளைஞர்கள் என்னிடம் பணி புரிகிறார்கள் ஆக்ஸிண்டன். நான் ஆதிக்க வெறி பிடித்த மொகலாய ஆட்சியாளர்களுக்கு மட்டுமே எதிரி; முகமதிய இனத்துக்கு எதிரியல்ல. என் தாயகத்தை மீட்டு, சுய ஆட்சி செய்யும் முயற்சியில்தான் நான் வெற்றி பெற்று, இன்று மன்னனாக மகுடம் சூடியிருக்கிறேன். இன்று நண்பர்களாக வந்து நிற்கும் உங்கள் ஆங்கிலேயர் நாளை இந்த மண்ணில் ஆதிக்கம் செலுத்தினால், அதை எதிர்த்துப் போராடவும் நான் தயங்கமாட்டேன்'' என்று கம்பீரமாக முழக்கமிட்டார் சத்ரபதி சிவாஜி.

அன்று ஆக்ஸிண்டன், அவர் கூறிய விளக்கத்தையும் அளித்த பரிசையும் மகிழ்வுடன் ஏற்று, விடைபெற்றான். காலம் எத்தனையோ மாற்றங்களை நிகழ்த்தியது. ஆனால், மதாரி மெஹ்தர் இறுதிவரை சத்ரபதி சிவாஜியின் மெய்க்காவலனாகவே திகழ்ந்தான். ○



''ஏண்டா, புத்தகத்தை அடிக்கடி மோந்து பார்க்கறே?''

''நீங்கதான் எனக்குப் படிப்பு வாசனையே அறவே கெடையாதுன்னு சொன்னீங்களே!''

**- சி.சண்முகம்**

# தொப்பையை குறைக்க ஓர் ஐடியா!









**"டேய்** மணி வாடா சினிமாவுக்குப் போகலாம்'' என்றபடி வந்த பிரதீப்புக்குப் பதில் சொல்லாமல் புத்தகத்தில் மூழ்கி இருந்தான் மணி.

''அப்படி என்னத்தடா படிக்கிற?''

''சினிமாவ விடவும் இன்ட்ரஸ்டிங்கான புத்தகம்டா இது.

'புத்தகம் வாங்கினால் புன்னகை இலவசம்.' இது புத்தகத்தோட பேரு. வாரப் பத்திரிகையில் ஏற்கெனவே அறிமுகமான வாசுதேவ், முதன் முதலா நகைச்சுவைக் கதைய புத்தகமா போட்ருக்காரு. இந்தா படி. நல்லா சிரி'' என்றான் மணி.

''ஓ! இந்த மாதிரி புத்தகமும் படிப்பியா? சரி சரி... உலகமயமாக்கல் அப்படின்னா என்னன்னு கேட்டிருந்தியே அதுக்கு நான் ஒரு புத்தகம் வாங்கினேன். மூன்று பேர் சேர்ந்து, 'உலகமயமாக்கலும் முஸ்லிம் இளைஞர்களும்' என்ற தலைப்பில் எழுதியிருக்காங்க'' என்றான் பிரதீப்.

''வாழ்க்கையிலேயே இன்னிக்குதான் உருப்படியா பேசிட்டிருக்கீங்க போலிருக்கு'' என்று சொன்னவாறு வந்தார் மணியின் அப்பா. தொப்பையைத் தடவியபடியே ஏப்பம் விட்டார்.

''அங்கிள் உங்க தொப்பைய குறைக்கறதுக்கு ஓர் ஐடியா என்கிட்ட இருக்கு. ஆயுள் வளர்க்கும் ஆயுர்வேதம். அருமையான புக் சார் இது. உடம்புல ஒரு பிரச்னை வருதுனா அது ஏன் வருது, எதனால வருது, அது வராம இருக்க என்ன செய்யலாம், வந்திடுச்சினா என்ன சிகிச்சை பண்ணலாம்னு விலாவாரியா இருக்கு'' என்றான் பிரதீப். அந்தப் புத்தகத்தை வாங்கிக் கொண்டு அவனைப் பெருமையாகப் பார்த்தார் மணியின் அப்பா!

**- தஞ்சை சகா**

**'ஆயுள் காக்கும் ஆயுர்வேதம்!' - பேராசிரியர் எஸ்.சுவாமிநாதன்**
வசந்தா பிரசுரம், 15 (ப.எண்.6) ஜெய்சங்கர் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை - 33. விலை ரூ.125


**'உலகமயமாக்கலும் முஸ்லீம் இளைஞர்களும்'**
இஸ்லாமிக் ஃபௌண்டேஷன் டிரஸ்ட், 138, பெரம்பூர் ரோடு, சென்னை - 12. விலை ரூ. 50/-

**'புத்தகம் வாங்கினால் புன்னகை இலவசம்!' - வாசுதேவ்,** நியூ ஹரிஜான் மீடியா பிரைவேட் லிட், 33/15, இரண்டாவது தளம், எல்டாம்ஸ் ரோடு, சென்னை - 18. விலை ரூ. 50/-

**அலமாரி**

# புத்தி!

"மிருகங்களுக்குக் கொடுத்திருக்கும் சௌகரியங்களை ஸ்வாமி நமக்குக் கொடுக்கவில்லை!"



மிருகங்கள் குறுக்குவாட்டில் வளர்கின்றன. இதனாலேயே அவற்றுக்குத் 'திர்யக்' என்று பெயர். இதற்கு மாறாக உயர்ந்து மேல்நோக்கி வளருகின்ற மனிதன் மற்ற பிராணிகளைக் காட்டிலும் மேலான நோக்கத்தைப் பெற வேண்டும். இப்படிச் செய்தால் இவன்தான் சகல ஜீவ இனங்களையும்விட அதிகமான சுகத்தை அனுபவிக்கலாம். ஆனால், நடைமுறையிலோ அவற்றைவிட அதிகமான துக்கத்தைத்தான் நாம் அனுபவிக்கிறோம். மிருகங்களுக்கு நம்மைப் போல் இத்தனை காமம், இத்தனை கவலை, இத்தனை துக்கம், இத்தனை அவமானம் இல்லை. எல்லாவற்றுக்கும் மேலாக அவற்றுக்கு பாபமே இல்லை. பாவங்களைச் செய்து துக்கங்களை நாம்தான் அனுபவிக்கிறோம்.

ஒரு வழியில் பார்த்தால் மிருகங்களுக்குக் கொடுத்திருக்கும் சௌகரியங்களை ஸ்வாமி நமக்குக் கொடுக்கவில்லை என்று தோன்றும். நம்மை யாராவது அடித்தால் திருப்பி அடிக்க ஓர் ஆயுதமும் நமக்கு இல்லை. மாட்டை அடித்தால் அதற்கு கொம்பு கொடுத்திருக்கிறார், அதனால் திருப்பி முட்ட வருகிறது. புலிக்கு நகம் கொடுத்திருக்கிறார். நமக்குக் கொம்பு இல்லை; நகம் இல்லை. குளிரிலிருந்து காப்பாற்றிக் கொள்ள ஆட்டுக்கு உடம்பில் போர்வை வைத்திருக்கிறார். வேறு மிருகங்களுக்கும் போர்வை வைத்திருக்கிறார். மனிதன் ஒருவனைத்தான் வழித்து விட்டிருக்கிறார். யாராவது அடிக்க வந்தால் எதிர்க்க முடியவில்லை. ஓடலாம் என்றால் வேகமாக ஓட முடியாது. குதிரைக்கு கொம்பு இல்லா விட்டாலும் ஓடுவதற்கு வேகம் கொடுத்திருக்கிறார். அதுவும் நமக்கில்லை. இருந்தாலும், ஸ்வாமி மனிதனுக்குத்தான் புத்தியை அதிகமாக வைத்திருக்கிறார்.

**– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்**

## அருள்வாக்கு

டாக்டர் கு. கணேசன்

ஓர் ஆண்டுக்கு சாலை விபத்துகளில் மட்டும் சராசரியாக ஒரு லட்சம் பேர் உயிரிழக்கின்றனர். குறிப்பாக இரண்டு சக்கர வாகனங்கள் மோதி ஏற்படும் விபத்துகளில் எழுபது முதல் தொண்ணூறு சதவிகிதம் பேருக்குத் தலையில் அடிபட்டு உயிருக்கு ஆபத்தான நிலைமை ஏற்படுகிறது.

இதனைக் கருத்தில் கொண்டுதான் தமிழக அரசு ஹெல்மெட் அணிவதை நடைமுறைக்குக் கொண்டு வந்தது. ஆனால், உயிர் காக்கும் கவசமாகக் கருதப்படும் ஹெல்மெட்டை உபயோகிக்கும்போது சில உடல்நலக் குறைவுகளும் ஏற்படுகின்றன.

இன்று அன்றாடப் பணிகளுக்குச் செல்வோர் ஆண்களாக இருந்தாலும் சரி, பெண்களாக இருந்தாலும் சரி, தினமும் பல கிலோ மீட்டர் வரை, இரு சக்கர வாகனங்களில் பயணம் செய்கின்றனர். இவ்வாறு தொடர்ந்து பல மணி நேரம் ஹெல்மெட் அணிந்து, பயணம் செய்யும்போது தலையில் கடுமையாக வியர்க்கும். அதிலும் வெயில் காலத்தில் சொல்லவே வேண்டாம். இந்த வியர்வையின் காரணமாக ஒவ்வாமை உள்ளவர்களுக்கு 'சைனஸ்' தலைவலி வருவதற்கு வாய்ப்புகள் அதிகம்.

ஒற்றைத் தலைவலி, டென்ஷன் தலைவலி, கொத்துத் தலைவலி, தொடர் தலைவலி... போன்ற தொல்லை உள்ளவர்கள் ஹெல்மெட்டை அணியும்போது அவை மேலும் அதிகரிக்கும். தோல் ஒவ்வாமை உள்ளவர்களுக்குத் தலையில் ஹெல்மெட் அணிவதன் காரணமாக 'கரப்பான்' (Eczema)எனும் தோல் அழற்சி உண்டாவதற்கும், கழுத்து வலி மற்றும் தோள் பட்டை வலி உள்ளவர்களுக்கு அந்தக் குறைப்பாடு அதிகரிக்கவும் வாய்ப்புண்டு.

தலையில் ஹெல்மெட் அணியும்போது அதன் வாரைத் (Strap) தாடையில் இறுக்கி, ஆடாமல் அசையாமல் அணிந்து கொண்டால்தான் தலையில் நிற்கும். இல்லையென்றால் பயணம் செய்யும்போதே முன்புறமோ பின்புறமோ சாய்ந்து, பார்வையை மறைத்துவிடும். இதுவே சாலை விபத்துக்கு ஒரு காரணமாகி விடவும் வாய்ப்புண்டு.



✱ டாக்டர் கு. கணேசன்

அதே நேரத்தில் இவ்வாறு இறுகலாக ஹெல்மெட்டை அணியும்போது தலைத் தோலுக்கு (Scalp) ரத்தம் செல்வது தடைபடும். இதனால் முடி வளர்வது நின்றுவிடும். போகப் போக முடி கொட்டும். ஹெல்மெட் பயன்பாட்டினால் தலையில் முடி இழந்தவர்களுக்கு மீண்டும் முடி வளர வாய்ப்பில்லை.

ஆஸ்துமா நோய் உள்ளவர்கள் ஹெல்மெட் அணிந்தால், சுவாசிப்பதற்குச் சிரமம் உண்டாகி அந்நோய் அதிகரிக்கும். குழந்தைகள் ஹெல்மெட் அணியும் போது தலையில்



**ஆஸ்துமா நோய் உள்ளவர்கள் ஹெல்மெட் அணிந்தால், சுவாசிப்பதற்கு சிரமம் உண்டாகி அந்நோய் அதிகரிக்கும்!**

உண்டாகும் வியர்வை காரணமாக, அடிக்கடி ஜலதோஷம் பிடித்து நோய் எதிர்ப்பு சக்தி குறைந்துபோக வாய்ப்பு உண்டு.

தொடர்ந்து ஹெல்மெட் அணியும்போது வாகனம் ஓட்டுபவரின் பார்வைச் சுற்றளவு சற்றுக் குறைகிறது. இதனால் ஏற்கெனவே கிட்டப்பார்வை மற்றும் தூரப்பார்வைக் கோளாறுகள் உள்ளவர்களுக்குக் கண்ணாடி 'பவர்' அதிகரிக்கிறது.

தலையில் அறுவைச் சிகிச்சை செய்தவர்கள், அதிகத் தலைமுடி

# தலை காக்கும் ஹெல்மெட் நலம் காக்குமா?

வைத்துள்ளவர்கள் ஹெல்மெட் அணிய முடியாது. ஆகவே, ஹெல்மெட் அணிவதால் இத்தனை அசௌகரியங்கள் இருக்கும்போது அதைக் கட்டாயமாக அணிய வேண்டும் என்று நிர்ப்பந்தப்படுத்துவது ஆரோக்கியமானதல்ல.

அதேநேரத்தில் சாலை விபத்துகளைத் தவிர்த்து, விலை மதிக்க முடியாத மனித உயிர்களைக் காப்பாற்ற வேண்டியதும் அரசின் கடமைதான். விபத்துகளுக்கு சாலை விதி மீறல்கள்தான் முக்கியக் காரணம்.

இவற்றையெல்லாம் சரி செய்ய வேண்டுமென்றால் சாலைவிதிகளை மனப்பூர்வமாக மதிக்கும் விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்துவதில் அரசு அதிக அக்கறை காட்ட வேண்டும். இதுதான் இன்றைய அவசியத்தேவை. அவசரத்தேவையும் கூட.




# கொசு

## 24

நிராயுதபாணியாகப் போர்க்களத்தில் நிற்பது போலிருந்தது முத்துராமனுக்கு. சுற்றி இருக்கிற அத்தனை பேரும் ஆயுதம் தரித்திருக்கிறார்கள். சொற்கள் சிலருக்கு ஆயுதங்களாகி இருக்கின்றன. செயல்கள் சிலருக்கு. அம்மாவுக்குக் கண்ணீர். அப்பாவுக்கு மௌனம்.

சாந்தியின் வீட்டுக்குப் போகிற வழியெல்லாம் குழப்பம் ஒன்றுதான் பிரதானமாக மனத்தை ஆக்கிரமித்திருந்தது. தனது ஆர்வமும் வேட்கையும் மட்டுமே தன்னை மிக உயரத்தில் கொண்டுபோய் உட்கார வைத்துவிடும் என்று திடமாக நம்பியிருந்தான். சந்தோஷமாகத்தான் இருந்தது. திருமணமும் அரசியல் வாழ்வும். அதிரடியும் திடீர்த் தென்றலும். இரண்டுமே தன் வாழ்வில் உண்டு என்பது அவனுக்குத் தெரியும் என்றாலும் ஒரே காலகட்டத்தில் வந்து மோதுமென்று நினைத்திருக்கவில்லை. தன் தேரோட்டத்தைத் தானே விலகி நின்று சாந்திக்குச் சுட்டிக்காட்டி, அவள் ஒரு குழந்தைபோல் கைதட்டி ஆரவாரம் செய்யும் காட்சியை எப்போதும் விரும்பி அனுபவிக்கப் பழகியிருந்தான்.

கண்ணிமைக்கும் கணத்தில் ஒரு பதவியும் அந்தஸ்தும் கூடிவந்து, தனது திருமணப் பரிசாக அவளுக்கு அதைச் சமர்ப்பணம் செய்யும் கனவு சுகமாக இருந்தது. தன் வீட்டுக்கும் அது ஒரு அவசியத் தேவை என்றே கருதினான். ஐம்பதாண்டு காலமாக அரசியலில் ஈடுபட்ட குடும்பம். யாரும் தொண்டர் என்கிற கோட்டைத் தாண்டி அந்தப் பக்கம் போனதில்லை. ஒரு மாறுதலை உத்தேசித்து பதவிக்குக் குறிவைத்ததில் பிழையேதும் இருப்பதாக அப்போதும் அவனுக்குத் தோன்றவில்லை. ஆனால், அரசியல் கலபமில்லை என்று மீண்டும் மீண்டும் தோன்றியது. முதுகில் ஒரு கண். மூளையில் ஒரு பிரத்தியேக மின்சார விளக்கு. சொல்லில் ஒரு சுடர்ப்பொறி. தவிரவும் சொல்பேச்சு கேட்க ஒரு கூட்டம்.

அங்கேதான் அவன் களைத்துப் போனான். தோளோடு தோள் நின்ற குப்பத்து நண்பர்கள் எதிரே நின்று சட்டையைப் பிடித்த கணம். நடந்ததை நம்பச் செய்வதில் சவால் இல்லை. தகர்ந்த நம்பிக்கையைத் தைக்கிற காரியம் ஒரு சராசரி டைலருக்கு முடியாததென்று தோன்றியது.

அவன் சாந்தியின் வீட்டுக்குப் போனபோது அத்தனை பேரும் இடிந்துபோய் அமர்ந்திருந்தார்கள். என்ன, என்ன என்று நூறு முறை கேட்ட பிறகுதான் வாய் திறக்கவே மனம் வந்தவர்களாக இருந்தார்கள்.

"கல்யாணத்துக்கப்புறம் எம்பொண்ணு புது சேலைதான் உடுத்துவான்னு கனாக் காணுறவன் இல்ல நானு. ஆனா டைலர் மாப்ள கிளிஞ்ச சேலையோட வெளில அனுப்பமாட்டாருன்னு ஒரு நம்பிக்கை இருந்தது. ஏழைங்கதான்னாலும் மனசுக்கு ஏது தம்பி வேத்துமை? பெத்தவன் நான். எம்பொண்ணு நல்லாருக்கணும்னு நினைக்கமாட்டனா? வேணாம் தம்பி. நீங்க போயிருங்க."

முத்துராமனுக்குத் தலையில் அடித்துக் கொள்ளலாம் போலிருந்தது. எதைச் சொல்லிப் புரியவைக்க முடியும் என்றும் தெரியவில்லை.

"ஐயா நீங்க நினைக்கறமாதிரி நான் எந்தத் தப்பும் செய்யல. உங்களுக்கு யாரு என்னா சொன்னாங்கன்னு தெளிவா

சொன்னிங்கன்னா நல்லது.''


''இதுக்குமேல என்னாங்க சொல் லணும்? பாளையங்கோட்டைல பாக்கு வெத்தல மாத்திக்கிட்டு வந்திங்களாமே, இல்லேன்னப்போறிங்களா? நாலு பேரு வெள்ளையும் சொள்ளையுமா அட்ரஸ் விசாரிச்சிக்கிட்டு வந்து சொல்லிட்டுப் போனாங்க. நீங்க நல்லா அரசியல் பண்ணுங்க. பெரிய ஆளா வாங்க. எங் களுக்கு எந்தக் கஷ்டமும் இல்ல. உள்ளார போவறதுக்குள்ள ரெண்டு பொண்டாட்டி வோணுங்கறது உங்க அரசியல் கலாசாரமா இருக்கலாம். ஆனா அதுக்கு நாங்க ஆளில்ல. இத்தோட வுட்றுங்க.''

''ஐயோ, சத்தியமா இல்லிங்க. எனக் குப் போய்.. ச்சே.. என்னங்க நீங்க? நான்..''

''தபாருங்க தம்பி. காசு பணம் பாத்தோ, நீங்க நாளைக்கு எம்.எல்.ஏ. ஆவப்போறிங்கன்னு நெனச்சோ எங்க பொண்ணைத் தரோம்னு சொல்லல. இன்னிய தேதிக்கு ரெண்டு வேளை சோறு போடத் துப்பிருக்கான்னுதான் பாத் தோம். தப்பில்லையே? உங்க ஆளுங்கள்ள செலபேரு ஒண்ணுக்கு நாலு கல்யாணம் கட்டியிருக்கலாம். ஆனா ஒரே மேடையில ரெண்டுன்னு கனாக்கண்டிருக்க மாட் டாங்க. இப்படி செஞ்சித்தான் அரசியல்ல மேலுக்கு வரணும்னா அப்படியொரு நாறப்பொழப்பு எதுக்குன்னுதான் எங்க சனம் கேக்கும். உங்க சனமும் கேக்கும். சந்தேகமிருந்தா போய் உங்கம்மாவ கேட்டுப்பாருங்க.''

''ஐயா... தயவுசெஞ்சி வார்த்தைய அளந்து பேசுங்க. செத்தாலும் தப்பு செய்ய மாட்டேன் நான். கட்னா உங்க பொண்ணு தான்னு கடவுள் சாட்சியா மனசுக்குள்ள ஏற்கெனவே தாலி கட்டிட்டவன். எந்தக்

**பா.ராகவன்**



கபோதியோ வந்து உங்க மனச கெடுத்துட்டுப் போயிருக்கான். என்னா ஏதுன்னு வெவரம் தெரியாம நீங்கபாட்டுக்குப் பேசிக்கிட்டே போனா என்ன அர்த்தம்? அதே இரண்டு வேளை சோறு தின்றவன் தான் நானு. நாளைக்கு எம்.எல்.ஏ. ஆனாலும் பாயசத்துல சோறு திங்க முடியாது.''

சாந்தி அவனையே பார்த்துக்கொண்டிருந்தாள். அந்தக் கண்ணில் தென்பட்ட வெறுமை விலைமதிப்பற்றதாக இருந்தது. என்ன, என்ன என்று உள்ளுக்குள் குமையச் செய்கிற வெறுமை. அந்தக் கண் உதிக்கும்போதே அணிகலனாக உடன் பிறந்ததா என்று தெரியாத வெறுமை. அதுதான் அவனுக்குச் சங்கடமாக இருந்தது. சே! என்று அனைத்தையும் தள்ளி வைத்துவிட்டு எழுந்து கண்காணாமல் போய்விடலாமா என்று யோசித்தான். அவள் உடன் வரச் சம்மதமென்றால் அது முடியும் என்று தோன்றியது.



என்ன இது.
என்ன இது என்று
திரும்பத்திரும்ப
மனதுக்குள்
ஒரு பறவையின் சிறகு
அடித்துக்கொண்டே
இருந்தது.

“ஐயா என்னிய அஞ்சு நிமிசம் பேச விடுங்க. உங்களுக்குப் புரியவெக்கறேன். அப்பால என்ன முடிவு வேணாலும் பண்ணிக்கங்க. கொலக்குத்தம் செஞ்சவனுக்குக்கூட கோர்ட்டுல பேச ஒரு வாய்ப்புத் தர்றது தெரியும்னு நினைக்கறேன்.''

சாந்தியின் அப்பா மேல் துண்டால் கண்ணைத் துடைத்துக்கொண்டார். மௌனமானார்.

''நான் அரசியல்வாதி இல்லிங்க. சத்தியமா இன்னும் இல்ல. ஆனா அரசியல்ல சாதிக்கணும்னு ஆசை இருக்குது. ஓர் அடி எடுத்து வெச்சேன். அவ்ளோ தான். இந்த நிமிஷம் வரைக்கும் ஸ்பீக்கர் கட்டி, போஸ்டர் ஒட்ற ஜாதிலதான் இருக்கேன். எடுத்து வெச்ச ஒரு அடிக்குக் கிடைச்சிருக்கற கூலி இது. சொன்னா வெளங்குங்களா உங்களுக்கு? நாளைக்கு எம்.எல்.ஏ. ஆவேன்னு நீங்களாச்சும் நம்புறிங்க. எனக்கு இன்னும் அந்த நம்பிக்கை கூட வரலிங்க. ஆனா எம்.எல்.ஏ. என்ன, மினிஸ்டரே ஆவணும்னு கனா இருக்குது. வெறும் கனாதாங்க. உங்க பொண்ணாண்ட நான் என்னா கேட்டேன்னு கேட்டுப் பாருங்க. என் கனவ அவ இண்டல் பண்ணாம கேட்டுக்கிட்டா போதும்னுதான் எதிர் பாத்தேன். செலருக்கு பீடி, சிகரெட்டு. செலருக்குத் தண்ணி. எனக்கு அரசியல் டான்னு எங்கப்பா சொல்லுவாரு. எனக்கு அது பீடி, சிகரெட்டு இல்லிங்க. நீங்க சொன்ன இரண்டு வேளை சோறே அதான். சின்ன வயசுலேருந்து பளகிருச்சி. என் தப்பில்லிங்க. எங்க குடும்பம் அப்படி. அத்தினி பேரும் அரசியல்ல தோத்தவங்க. யாரும் ஜெயிச்சதில்ல. அவங்க விட்டத நான் எடுக்கணும்னு ஆசைப்பட்டேன். தப்பா?''

''அதெல்லாம் வேணாம் தம்பி. நீங்க பாளையங்கோட்டை போனிங்களா இல்லியா?''

''போனேங்க. உங்க பொண்ண கேட்டுப்பாருங்க. சொல்லிட்டுத்தான் போனேன். ஒரு வேலையா போனேன். கட்சி வேலை. எம்.எல்.ஏ. அனுப்பினாரு. வேணா என்னோட வாங்க. எம்.எல்.ஏ.வையே சொல்லச் சொல்றேன்.''

அசுவாரசியமாகச் சூள் கொட்டினார் அவர்.

''இதுதாங்க உண்மை. நம்பறதும் நம்பாததும் உங்க இஸ்டம். ஆனா ஒண்ணு. அரசியல்ல பிரச்னைங்க வரும்னு தெரிஞ்ச

# ரீடர்ஸ் கார்னர்!



என் அலுவலகத்தில் பணிபுரியும் சக நண்பர் வேலை விஷயமாக வெளியூருக்குச் சென்றிருந்தார். ஊர் திரும்புகையில் பஸ் நிலையத்தில் அவரது பர்ஸ் எப்படியோ தொலைந்து விட்டது. கண்ணெதிரே ஏடிஎம் இருந்தும் பயனில்லை. காரணம் அவரது ஏடிஎம் கார்டை அதே பர்ஸில் வைத்திருந்தார். பிறகென்ன? அங்குள்ள அலுவலகச் சம்பந்தப்பட்டவரைச் சந்தித்து, பணம் பெற்று திரும்பினார். புதிய ஏடிஎம் கார்டும் வாங்கி விட்டார். இப்போது கார்டையும், பணத்தையும் தனித் தனியாக வைக்கிறார். இக்கட்டான சமயத்தில் ஒன்று போனாலும் ஒன்று கை கொடுக்குமல்லவா! நீங்க எப்படி? பர்ஸிலேயே ஏடிஎம் கார்டையும் வைக்கும் நபரா? இடத்தை மாற்றலாமே!

- கோபி, திருச்சி

வன்தான் நான். இந்த மாதிரி ஒண்ண எதிர்பாக்கலிங்க. இன்னொண்ணும் சொல்லுறேன். எவனோ சொன்னான்னு கேட்டுக்கிட்டு சட்னு ஒரு செகண்டுல எம்மேல உங்களுக்குச் சந்தேகம் வந்திரிச்சி. தீக்குளிச்சாங்க நிரூபிக்க முடியும்? பேசுனா, அரசியல்வாதிக்குப் பேச சொல்லித் தரணுமான்னுவிங்க. பேசாம திரும்பிப் போனா திமிரப்பாருன்னுவிங்க. நொந்துபோன மனச, அனுமாரு போட்டோமாதிரி பொளந்து காட்டத் தெரியலிங்க எனக்கு. நான் வரேன்...''

கண்ணீரைக் கட்டுப்படுத்திக்கொண்டு வெளியே வந்தான். அப்போதும் சாந்தி நின்ற இடத்திலேயே நின்றாள். ஒரு வார்த்தை அவளிடம் கேட்கலாம் என்று நினைத்தான். வேண்டாம் என்றும் உடனே தோன்றியது. என்ன இது, என்ன இது என்று திரும்பத்திரும்ப மனத்துக்குள் ஒரு பறவையின் சிறகு அடித்துக் கொண்டே இருந்தது. வியப்பாகவும் அதிர்ச்சியாகவும் மாறிமாறித் தோற்றமளித்தது. சாந்திக்குமா புரிந்திருக்காது? அவள் பேசியிருக்க மாட்டாளா? புரியவில்லை! குழப்பமாக இருந்தது. வெளியேறியவனை அவர்கள் திரும்ப அழைக்கவில்லை என்பதும் உறுத்தியது.

ஏன் இப்படி ஆகிப்போனது? சிங்கார வேலு அண்ணனா இதெல்லாம் செய்தது? அவரைத் தவிர வேறு யாராக இருக்க முடியும்? அப்படி என்ன விரோதம் வந்துவிட்டது? எம்.எல்.ஏ. கூப்பிட்டாரென்று போனதற்காகவா? கடவுளே! இன்னும் என்னென்ன இடங்களில் எத்தனை எத்தனை தோண்டி வைத்திருக்கிறாரோ? ஆத்திரமாக வந்தது. அடக்கிக் கொண்டான்.

வீட்டுக்குப் போவதைக் காட்டிலும் நேரே எம்.எல்.ஏ.விடம் போகலாம் என்று தோன்றியது. அவருக்கு ஏதாவது தோன்றலாம். ஏதாவது உபாயம் சொல்லலாம். அல்லது பிரச்னைக்கு ஒரு தீர்வு. அங்கே பேசியதுபோல எம்.எல்.ஏ.வே சாந்தி வீட்டுக்கு வந்து விளக்கினால் ஒருவேளை புரியலாம்.

பசித்தது! எரிச்சலாக இருந்தது. எதுவும் சாப்பிடத் தோன்றாமல் ஒரு பாக்கெட் தண்ணீர் வாங்கிக் குடித்து, முகம் கழுவினான். பைக்கை உதைத்து நேரே வேளச்சேரி போனான். எம்.எல்.ஏ. வீட்டு வாசலில் புதிதாக இரண்டு கார்கள் நின்று கொண்டிருந்தன. யாரோ வந்திருக்கிறார்கள். காவலாளியிடம் சொல்லிவிட்டுக் காத்திருந்தான்.

பத்து நிமிடத்தில் வரச்சொல்லி அனுப்பினார். அதே மேல் மாடி. அதே அலங்கார அறை. எம்.எல்.ஏ. இருந்தார். பாளையங்கோட்டைக்காரர் வந்திருந்தார். முத்துராமன் சற்றும் எதிர்பாராவிதத்தில் சிங்காரவேலுவும் அங்கே இருந்தார். கையில் மதுக்கோப்பையோடு. அவனைப் பார்த்ததும், ''வாய்யா, ஜேம்சு!'' என்றார் அட்டகாசமாகச் சிரித்தபடி.

**(தொடரும்)**

# • கதிர்பாரதி

ஒற்றுமைக்கு
உதாரணம் சொல்வோர்
உணர்ந்திருக்க நியாயமில்லை
உணவுக்கு அடித்துக்கொள்ளும்
காக்கைகள் குறித்து!





காக்கைகளுக்காய்

காக்கா பிடித்து

கைவரிசைக் காட்டும்
காக்கைகள்
உழைக்காது சுற்றி வருகின்றன
ஊர்ப்புறத்தே

லாபமாயின்
பிணங்களைக்கூட
பங்கிட்டுக்கொள்ளும்
அரசியல்வாதிகளில்
அவ்வப்போது பார்க்கலாம்
அண்டங் காக்கைகளை!

கசந்துருகும்
குழந்தைகள் அறியுமா
பாட்டியின் சோகம்?

வடகம் திருடும்
காக்கையைச் சாக்கிட்டும்
வசைபொழியும்
வசந்தாவின் பேச்சில்
பக்கத்து வீடு
காயப்படும் எப்போதும்!

காக்கைகளைக்கூட
மன்னிக்கலாம்

என்ன சொல்வது?

எது எப்படியாயினும்
இருக்கத்தான் செய்கின்றன

திருமண வீடு
கருமாதி வீடு
பேதமறியாது
எச்சிலைக்கு
ஏங்கித் தவித்தபடி
சில காக்கைகள்

# காக்கைகள்...



**சர்வஜித் போட்டி எண் 4-க்கு வந்த கருத்துச் சிதறல்களுள் இசையமைப்பாளர் பரத்வாஜால் தேர்ந்தெடுக்கப்பட்ட பதில்கள் கீழே உள்ளன. இவர்களுக்கு ஆடியோ சிஸ்டம் பரிசாக அளிக்கப்படுகிறது.**

# படிக்கும் வயதில் காதலிக்கலாமா?

### உற்சாக டானிக்!

கண்டிப்பாகக் காதலிக்க வேண்டும் - படிக்கும் படிப்பை, கற்கும் கலைகளை, ஆர்வமுள்ள விளையாட்டுகளை. நம் முழு கவனமும் அதில் தான் இருக்க வேண்டும்.

ஒருவேளை நம்முடன் பயில்பவர் (அ) சந்திப்பவருடன் இது வெறும் எதிர்பால் ஈர்ப்பல்ல; உண்மையான நேசம்தான் என மனம் 'உரைகல்'லாய் உறுதிச் சொன்னாலும், அதை நம் இலட்சியம் நிறைவேறும் வரை ஒத்திப் போட வேண்டும்.

நமது இலட்சிய வெற்றிக்கு காதல் 'உற்சாக டானிக்' தருமென்றால் மட்டும் எப்போதாவது சந்திக்கலாம். மற்றபடி பீச், பார்க் எனச் சுற்றுவது, அரட்டை, உருகுதல் வெறும் நேர விரயங்கள். முன்னேற்றத்துக்கு முட்டுக் கட்டை.

ஒருவர் வெற்றிக்கு மற்றவர் உதவுவது தான் 'உண்மைக் காதல்'. வாழ்வில் வென்றபின் இருவருக்கும் அந்தக் காதல் இனிக்கும்!

என்ன பரத்வாஜ் சார்! என் பதில் உங்களுக்குத் திருப்தியா?

- எஸ்.கௌரி,
சென்னை

### எத்தனைக் காதல்?

படிக்கும் வயதில் காதலிக்கலாமே! எப்படின்னு கேளுங்க?

★ முதல்ல நாம நம்மைக் காதலிக்கணும்; அப்போதுதான் நம்பிக்கை கூடும்.

★ பெத்தவங்களைக் காதலிக்கணும்; அப்பதான் மதிப்பு கூடும்.





★ பரத்வாஜ்

★ பெரியவங்களைக் காதலிக்கணும்; அப்பதான் உயர்வு கூடும்.

★ புத்தகங்களைக் காதலிக்கணும்; அப்பத்தான் அறிவு கூடும்.

★ குழந்தைகளைக் காதலிக்கணும்; அப்பதான் பாசம் கூடும்.

★ இசையைக் காதலிக்கணும்; அப்பதான் நிம்மதி கூடும்.

பாய் ஃபிரண்ட்ஸ்"னு சொல்லிட்டு, காதலை அவமானப் படுத்தும் கேவலம் மட்டும் வேண்டாமே!

– பி.வைஷ்ணவி,
சென்னை - 7




★ பி.வைஷ்ணவி



★ எம்.ஏ.உத்தரா



★ முகமது ரிஸ்வான்



★ எஸ்.கௌரி

## காதல் கப்பல்!

'கடல்நீர் கப்பலுக்குள் புகாத வரை கப்பல் மூழ்குவதில்லை.' மாணவப் பருவத்தில் 'மனம்' என்ற கப்பலுக்குள் 'காதல்' என்ற ஓட்டைகள் ஏற்படாத வரை, பல ஆக்கபூர்வமான சாதனைகள் நிகழ்த்தலாம். பண்பட்ட மனத்தில் 'கல்வி' விதையை விதைத்தால் காலத்தை வெல்லலாம்! 'காதல்' விதையை விதைத்தால் காலத்தை அழிக்கலாம்! சாதனை புரிந்த 'காதல்' திரைப்படத்தில் மெக்கானிக்குடன் ஓடிப் போய் காதல் மணம் புரிந்த நாயகி, 'தனது எதிர்கால லட்சியம் ஐ.ஐ.டி.யில் படிப்பது' என்று கூறுவது நடைமுறைக்கு சாத்தியமா? மாணவப் பருவத்தைத் திசை திருப்பும் சமூக மாயைகளைக் களைந்தால், காதலுக்குக் கண்டிப்பாக ஒரு ஜே போடலாம். ஆனால், அது மாணவப் பருவத்தில் அல்ல!

– எம்.ஏ.உத்தரா,
கோவை

## காதலிக்கலாம். எப்போது?

★ படிப்புதான் first காதல் next என்ற மன உறுதி இருந்தால்,

★ நட்பு - பற்றிக் கொள்ளாத பஞ்சும் நெருப்புமாக இருந்தால்,

★ சுயமாகக் கால் ஊன்றிய பின்னே திருமணம் என்ற எண்ணம் இருந்தால்,

★ காதல் என்பது கடலை போடுவது மட்டும் என மட்டமாக எண்ணாதிருந்தால்,

★ குறும்புகள் வரம்பு மீறாது இருந்தால்,

★ எதிர் விளைவுகளைச் சமாளிக்கும் துணிவு இருந்தால்.

– முகமது ரிஸ்வான்,
நாகர்கோவில்



# ஒளி படைத்த

தமிழ்நாட்டில் தமிழர்களிடையில், நல்லதும் உயர்ந்ததும் மேன்மையானதுந்தான் நிலைத்து நிற்கும்.

பழந்தமிழ் நாடு பலவகையிலும் சிறப்புற்றிருந்தது. உழவிலும், தொழிலிலும், கலையிலும், கல்வியிலும், பண்பாட்டிலும், இறைவழிபாட்டிலும், இலக்கியச் சிறப்பிலும், ஈகைக் குணத்திலும் பழந்தமிழ்நாடு இணையற்று விளங்கியது.

ஆயிரமாயிரம் ஆண்டுகள் பழந்தமிழ் நாடு இவ்வாறு சிறப்புற்று விளங்கியது. சேர, சோழ, பாண்டியர்களில் ஒருவர் முதன்மை பெற்று, அவர்களுடன் மற்ற குறுநில மன்னர்கள் ஒத்துழைத்த காலங்களில் தமிழகம் பேரரசாக விளங்கி, தமிழகத்துக்கு வெளியிலும் தன் ஆதிக்கத்தைச் செலுத்தியது. காஞ்சியில் சோழ குலத்தின் கிளை வம்சத்தவராகிய பல்லவத் தொண்டைமான்கள் பேரரசாகப் பல நூற்றாண்டு ஆட்சி புரிந்தபோது தமிழ்நாடு அரசியல் மேன்மையின் சிகரத்தை அடைந்திருந்தது.

பதினான்காம் நூற்றாண்டுக்குப் பின்னர் சுமார் அறுநூறு ஆண்டுக்காலம் தமிழகத்தின் இருள் சூழ்ந்த காலமாகும். இந்த நீண்ட இடைவெளியில் தமிழகம் அரசியலில் போலவே மற்ற எல்லாத் துறைகளிலும் பின்னடைந்து மங்கியிருந்தது. தமிழர்கள் தங்கள் பழம்பெருமைகளையெல்லாம் மறந்து எடுப்பார் கைப்பிள்ளைகளாக ஏனோதானோ வென்று காலந்தள்ளி வந்தார்கள்.

சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் பாரத நாடெங்கும் பரவித் தழைத்து வந்த சுதந்திர ஆவேசக் கனல் தமிழகத்தையும் தொட்டது; தமிழ்நாட்டில் நீண்ட நாளாக மங்கியிருந்த ஒளியைத் தூண்டிவிட்டது; தமிழகம் புத்துயிர் பெற்றது.

## ஆசிரியர்கள் படும் பாடு!



கல்கி 10.6.2007 இதழில் வெளியான அமரர் கல்கியின் 'என்ன கேடு நேரப் போகிறதோ?' கட்டுரையைப் படித்தேன். அவர் எழுதிய வார்த்தைகள் 'அட்சரலட்சம்' பெறும். சுமார் 58 ஆண்டுகளுக்கு முன்பு, அவர் அஞ்சிய நிலை இன்றும் தொடர்கிறது.

கடந்த மாதம் தமிழகக் கல்வி அமைச்சர் முன்னிலையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில், மாநிலக் கல்வி உயர் அதிகாரி ஒருவர், 'கடந்த ஜூன் ஆய்வின்படி 'ஐந்தாம் வகுப்புவரை படித்த மாணவர்களில் பாதிப் பேருக்கு எழுதப் படிக்கத் தெரியவில்லை' என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது' என்று சொன்னார்! தூக்கிவாரிப் போட்டது...

**ரீடர்ஸ் கார்னர்!**

# கண்ணினாய்...

அமரர் கல்கி

அந்தப் புத்துயிரின் சின்னமாக வ.உ.சிதம்பரனாரும், பாரதியாரும் விளங்கினார்கள். சிதம்பரனார் செயலினாலும் பாரதியார் தமது தெய்வத் தமிழ்ப் பாடல்களினாலும், புத்துயிர் பெற்ற தமிழ்நாட்டைப் பல துறைகளிலும் தழைத்தோங்கச் செய்ய முயன்றார்கள். எல்லா முன்னேற்றங்களுக்கும் அடிப்படையானது நல்ல அரசியல். ஆதலின், முதலில் அரசியல் சுதந்திரம் பெறுவதில் கவனம் செலுத்தினார்கள். சுதந்திர பாரத நாட்டில் தமிழ் நாடு பல துறைகளிலும் மேன்மையுற வேண்டுமென்பதே அவர்களுடைய ஆதர்சமாக இருந்தது. அவர்களுடைய செயல்கள், சொற்கள் எல்லாவற்றிலும் இந்தச் சிறந்த இலட்சியம் சுடர்விட்டு ஒளிர்வதைக் காணலாம்.

வ.உ.சிதம்பரனாரும், பாரதியாரும் எந்த இலட்சியத்துக்காகப் பாடுபட்டு உயிர்நீத்தார்களோ, அந்த இலட்சியம் நிறைவேறும் பொருட்டு ஆயிரக்கணக்கிலும் லட்சக் கணக்கிலும்



இத்தனைக்கும் அவர், 'அனைவர்க்கும் கல்வித் திட்டத்'தின் மாநில உயர் அதிகாரி.

அந்தக் காலத்தில் ஐந்தாம் வகுப்பு வரை ஐந்தாண்டுகள் திண்ணைப் பள்ளி படித்தவர்கள். இன்றைய பட்டதாரிக்கு ஈடானவர்கள் எனப் போற்றப்பட்டார்கள்! ஏன்? எப்படி?

அன்று மாணவர்களிடம், 'கற்கும் ஆற்றல்' பெருகியது. காரணம், கற்பித்த ஆசிரியர்களிடம் 'ஆர்வம்' இருந்தது. காலம் செல்லச் செல்ல கற்பிக்கும் ஆசிரியர்களிடம் 'ஆற்றல்' வளர்ந்தது. ஆனால், மாணவர்களிடம் கற்கும் 'ஆர்வம்' குறைந்தது. ஏன்?

கற்பிக்கும் முறையில் ஏகப்பட்ட குளறுபடிகள் ஏற்பட்டதால்தான்!

வகுப்பறைக்குச் சென்று ஒருநாள்கூடப் பாடம் நடத்தி, மாணவர்களின் 'மனநிலையை' அறியாதவர்கள், கல்வித் துறை உயர் அதிகாரிகள் ஆனார்கள். ஒவ்வோர் ஆண்டும் பாடத் திட்டத்தை மாற்றினார்கள். ஆசிரியர்கள் இப்படித்தான் கற்பிக்க வேண்டும் என்று பயிற்றுவிக்கும் முறையை (Teaching method) மாற்றி உத்தரவிட்டார்கள். அது மட்டுமின்றி, பள்ளிகளில், மாணவர்களுக்குத் தொடர்ந்து பாடம் கற்பிக்க இயலாதவாறு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, வாக்காளர் தகவல்

* வ.உ.சிதம்பரனார்





* பாரதியார்

தமிழ்நாட்டு மக்கள் சென்ற ஐம்பது ஆண்டு காலத்தில் முன் வந்தார்கள். பாரத நாடு சுதந்திரம் அடையவும் செந்தமிழ் நாடு மேன்மையுறவும் பாடுபட்டார்கள். எத்தனையோ கஷ்டங்கள் அனுபவித்தார்கள், எவ்வளவோ தியாகங்களைச் செய்தார்கள்.

அவர்களுடைய இலட்சியம் பரிபூரணமாக நிறைவேறுவதைக் காணாமலே அவர்களில் பலர் மாண்டு போனார்கள்.

சுதந்திர பாரத நாட்டிற்குள் தமிழ்நாடு தனி இராஜ்யமாக உருவெடுத்திருக்கிறது.

ஒளி படைத்த கண்ணும், உறுதி கொண்ட நெஞ்சும் உள்ளவர்கள், எளிமை கண்டு இரங்குகிறவர்கள், சிறுமை கண்டு பொங்குகிறவர்கள், பழந்தமிழ் நாட்டின் பெருமையை நினைத்தவர்கள், இடைக்காலத்தில் சேர்ந்த இழிதகைமைகளை மறந்தவர்கள், பார்த்தனையும் மாமல்லனையும் நிகர்த்தவர்கள், வள்ளுவரையும் கம்பரையும் போற்றுகிறவர்கள், பாடிய வாய்த் தேனூறும் பாரதி பாடல்களைப் பாடிக் கொண்டு காந்திமகான், வகுத்த பாதையில் நடப்பவர்கள் - இத்தகைய தமிழர்கள் புதிய தமிழ்நாட்டில் பல்கிப் பெருக வேண்டுமென்று விரும்புகிறோம்.

- 3.1.1954
கல்கி
இதழிலிருந்து...

சேகரிப்பு, உணவுப் பங்கீட்டு அட்டை தேர்தல் பணிகள் போன்றவற்றில் ஈடுபடுத்திவிட்டனர்!

'இவை யாவுமே தேசியக் கடமை; - தவறினால் தண்டனை' என்று உத்திரவிட்டதால், இதையே சாக்காக வைத்துச் சில ஆசிரியர்களும், மாணவர்களை மறந்தனர். கல்வித்தரம் நாளுக்குநாள் நலிந்தது. இந்த நிலை மாற வேண்டும்.

- மாணவர்களுக்கு 'உரக்க வாசிக்கும் (Reading aloud) பயிற்சி
- பார்க்காமல் எழுதும் 'சொல்வது எழுதுதல்' (டிக்டேஷன்), மனக்கணக்கு போன்றவற்றை மீண்டும் கட்டாயமாக்க வேண்டும்.
- தாமே சுயமாகச் சிந்தித்து, ஒரு நிகழ்ச்சியைப் பற்றிச் சுருக்கமாகவும், தெளிவாகவும் எழுதிப் 'படைப்பார்வத்தை' உருவாக்கும் பயிற்சி தர வேண்டும். பள்ளி நூலகங்களைத் தினமும் பயன்படுத்துவது மட்டுமின்றி, அருகிலுள்ள நூலகங்களுக்கும் வார விடுமுறையில் மாணவர்கள் சென்று படிக்க வேண்டும். ஒன்பதாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை துணைக் கைத்தொழில்கள் கற்பிக்கப்பட வேண்டும்.
- அரசு, ஆசிரியர், மாணவர், பெற்றோர் ஆகிய நால்வகையினரும் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும்.

- மு.முரளீதரன்,
சென்னை

# கடன் பட்ட நெஞ்சம்!

முத்துராஜன்



"வணக்கம் சார்" வேட்டி சட்டையும், நெற்றியில் விபூதிக் கீற்றுமாய் அம்சமாய் வந்து நின்றான் மயில்சாமி.

"உள்ளே வா மயில்சாமி" என்று வரவேற்றேன்.

கோவை சி.ஐ.டி.யில் இன்ஜினியரிங். திருச்சி ஆர்.இ.சி.யில் முதல் ரேங்கில் எம்.டெக். இங்கே பெங்களூரிலுள்ள முன்னணி மென்பொருள் நிறுவனம் ஒன்றில் கடந்த இரண்டு வருஷமாக உத்தியோகம். வந்த நாளிலிருந்து கோரமங்கலாவிலுள்ள என் வீட்டு மாடியில் வாடகைக்கு வாசம். இதுதான் நான் அறிந்த மயில்சாமி.

ஒரே வார்த்தையில் சொல்வதானால் பையன் தங்கக் கம்பி. பெண்ணைப் பெற்றவர்கள் தயக்கமின்றி மாப்பிள்ளையாக்கிக் கொள்ளலாம். நன்னடத்தைக்கு நான் கியாரண்டி!

ஆனால், இந்த மயில்சாமி விஷயத்தில் எனக்கு விளங்காதது ஒன்று உண்டு. தேவைக்கு அதிகமாகவே கல்வித் தகுதி, தொழிலில் போதிய அளவு அனுபவமும் பெற்றாகிவிட்டது. படிப்பு முடிந்ததுமே, பையன்கள் அடித்துப் பிடித்து விசா வாங்கி வெளிநாட்டுக்குப் பறக்கிற காலம் இது. ஆனால், இவன் என்னடாவென்றால் இன்னமும் இந்தியாவிலேயே ஒட்டிக் கொண்டிருக்கிறானே..! படிப்பில் இருந்த கெட்டிக்காரத்தனம் மற்றதில் இல்லையோ? புத்தகப் புழுவாய் இருப்பார்கள். சிலர் மதிப்பெண் வாங்கிக் குவிப்பார்கள். ஆனால், முட்டி மோதி முன்னுக்குப் போகத் தேவையான அந்த வெறி, வேகம் இருக்காது. இதெல்லாம் என் சொந்த அனுபவத்தில் நான் தெரிந்து



**கடன் பட்டிருக்கிறேன் சார். அதையெல்லாம் கட்டி முடிக்க வேண்டியிருக்கிறதே. உதட்டோரம் மென்சிரிப்புடன் சொன்னான்.**

கொண்ட யதார்த்தங்கள்.

எனக்குப் பிறந்த இரண்டு பிள்ளைகள் இப்போது இருப்பது அமெரிக்காவில். கை நிறையச் சம்பாதிக்கிற நல்ல வேலைகளில். இருவருமே ஆரம்பத்திலிருந்து படிப்பில் சுமார் ரகம்தான். நிறைய திட்டும் அடியும் வாங்கியிருக்கிறார்கள் என்னிடம்.

ஆனால் ஒன்று, படிப்பில் கொஞ்சம் முன் பின்னாக இருந்தாலும் வெட்டிக் கொண்டு வரச் சொன்னால் கட்டிக் கொண்டு வருகிற ரகம். படிப்பு முடிந்து அடுத்தடுத்த வருஷங்களில் வெளிநாடு கிளம்பி விட்டார்கள். 'போதும்டா திரும்பி வாங்க' என்று முறையிட்டுக் கொண்டிருக்கிறேன் நான். ''இதோ, கிரீன் கார்டு வரட்டும்; சிட்டிஸன்ஷிப் கிடைக்கட்டும்'' என்று எனக்குப் போக்குக் காட்டிக்கொண்டு இருக்கிறார்கள். இங்கே நானும் என் மனைவியும் முகத்தை முகத்தைப் பார்த்துக் கொண்டு நாட்களை ஓட்டிக்கொண்டிருக்கிறோம். வங்கிக் கணக்கில் சேர்ந்து வரும் டாலர் பணம் சீந்துவாரின்றிக் கிடக்கிறது. எனவே, மயில்சாமி மாதிரி பிள்ளைகளைப் பார்க்கிறபோது தானாக ஒரு பிரியம்...

இன்று தமிழ் வருடப் பிறப்பு. கண்டிப்பாக இங்கேதான் சாப்பிட வேண்டுமென அழைத்திருந்தேன். வடை சாம்பார் அவர்கள் ஊர் கௌரி சங்கர் ஓட்டல் மாதிரி பிரமாதம் என்று பாராட்டி, என் மனைவியைக் குளிர வைத்தான். என் பிள்ளைகள் பற்றி அவர்கள் பணி செய்கிற நிறுவனங்கள் பற்றி என்று இயல்பாகப் பேச்சுத் திரும்பியது. பேச்சுவாக்கில் ''ஏன் தம்பி நீ வெளிநாட்டு வாய்ப்புகளுக்கு முயற்சிக்கவில்லையா?'' என்று கேட்டேன்.

''வாய்ப்புகள் வந்தன. விசா கூடத் தயாராக இருந்தது. என்னால் தான் ஏத்துக்க முடியலை சார்.''

''ஏன், அப்படி என்ன பிரச்னை?''

''கடன் பட்டிருக்கிறேன் சார். அதையெல்லாம் கட்டி முடிக்க வேண்டியிருக்கிறதே.'' உதட்டோரம் மென் சிரிப்புடன் சொன்னான்.

நினைத்தேன்! பையன் அப்படி ஏதோ ஓர் இக்கட்டில் மாட்டிக் கொண்டிருக்கிறான். அதுதான் அவனை இங்கேயே கட்டிப் போட்டிருக்கிறது.

நான் அவன் முகத்தைப் பார்க்க, காபியைக் குடித்து முடித்து விட்டு அவனே தொடர்ந்தான்.

''ஆமாம் சார், நிறையக் கடன்பட்டிருக்கிறேன். முதலில் மூணு ஏக்கர் காட்டில் ராப்பகலாக உழைத்து, என்னைப் படிக்க வைச்ச ஆளாக்கிய பெற்றோருக்கு. அடுத்து அரசினர் கல்லூரியில் இலவசமாக இடம் தந்து என்னை இன்ஜினீயர் ஆக்கிய நம்ம அரசாங்கத்துக்கு. அப்புறம் ஆர்.இ.சி. மாதிரி உன்னதமான அமைப்பில் என் மேற்படிப்புக்கு வாய்ப்புத் தந்த நம்ம தேசத்துக்கு. கடைசியா, தாராளமான சம்பளத்துடன் எனக்கு வேலை தந்து, என் திறமைகளை வளர்த்திருக்கிற என் கம்பெனிக்கு. இதெல்லாம் கடன்தானே சார். இதையெல்லாம் கட்டித் தீர்க்க வேணுமில்லையா?'' பேசி முடித்து விட்டு என்னைப் பார்த்துச் சிரித்த அவன் குசும்பை நான் ரசித்தேன்.

பயல் கெட்டிக்காரன்தான்; படிப்பில் மட்டுமில்லை. பக்குவத்திலும்!

> பரத்வாஜ் பதில்கள் <

● என் மகனின் திருமண வாழ்க்கையும், தொழில் வாழ்க்கையும் எப்படி அமையும்?

- ஏ.பி.ராமமூர்த்தி, பெங்களூர் - 54

உங்கள் பையனுக்குச் சுக்ரதசை 38 வயது 3 மாதம் வரை நடக்கும். சூரிய தசையில் இல்லற வாழ்வு நன்றாக அமையும். படித்த, பண்புள்ள, நல்ல வேலையில் உள்ள பெண் அமைவாள். பரிகாரம் தேவையில்லை.

● என் மகளுக்கு எப்போது வரன் அமையும்?

- ஏ.சுந்தரமூர்த்தி, நாகர்கோவில்

உங்கள் மகளுக்கு குருபுத்தி நடக்கிறது. படித்த, பண்புள்ள பையன் அமைவான். 2007-க்குள் திருமணம் நடக்கும்.

# நடக்குமென்பார்;

**மேஷம்:** இல்லற வாழ்வில் இருந்து வந்த கசப்புகள் சீராகும். வீடு / வாசல் வழியில் இருந்து வந்த சிக்கல் மாறி, பாகப் பிரிவினை ஏற்படும். சிலருக்கு வேலை மாற்றம், புதிய வேலை வாய்ப்பு வந்து சேரும். குழந்தைகள் வழியில் சுபநிகழ்ச்சி கைகூடும். வியாபாரத்தில் சற்று முற்போக்கான சூழ்நிலை உண்டாகும். சனி / குரு / ராகு / கேது வழிபாடு நன்மை தரும்.

**ரிஷபம்:** குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். வேலையில் நற்பெயர் கிட்டும். திருமணம் கைகூடும். படிப்பில் நல்ல மேன்மை உண்டாகும். உடல் ஆரோக்கியம் பாதிக்காது. உத்தியோகத்தில் சிலருக்கு இடமாற்றம் ஊதிய உயர்வுடன் கிடைக்கும். ராகு / கேது வழிபட்டு வந்தால் சங்கடங்கள் தீரும்.

**மிதுனம்:** படிப்பில் எதிர்பார்த்தபடி சீட் கிடைக்கும். மகான்களின் சந்திப்பு கிட்டும். உடல்நிலை சீராகும். வராத கடன்கள் வசூலாகும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் காண்பீர்கள். குரு / சனி வழிபாடு செய்து வர நற்பலன் கிடைக்கும்.

**கடகம்:** திருமணக் காரியம் கைகூடும். வீடு / மனை வாங்க தகுந்த நேரம். சிலருக்கு வீடு மாற்றம் ஏற்படும். உடல் நிலையில் போதிய கவனம் செலுத்தவும். யாரிடமும் வாக்குவாதம் தவிர்க்கவும். குடும்ப வாழ்வில் அனுசரணையாக நடந்து கொள்வது நற்பலனைத் தரும். யாருக்கும் ஜாமீன் போடக் கூடாது. குழந்தைகள் வழியில் மனமகிழ்ச்சி ஏற்படும். ராகு / கேது / சனி வழிபாடு செய்துவர சங்கடங்கள் தீரும்.

**சிம்மம்:** திடீர் தனயோகம் கிட்டும். வீடு மற்றும் தொழில் மாற்றம் நிகழும். இல்லற வாழ்வில் விட்டுக்கொடுத்து போவது நற்பலனைத் தரும்.



செலவுகள் சுபமானதாக இருக்கும். வழக்கு வெற்றி பெறும். பணக் கஷ்டம் தீரும். புதிய முயற்சிகள் கைகூடும். ராகு / கேது / குரு / சனி வழிபாடு நற்பலனைத் தரும்.

**கன்னி:** அற்புதங்கள் நிகழும் வாரம். தொழில் மூலம் ஆதாயம் கிட்டும். படிப்பில் நல்ல மேன்மை கிட்டும். புதிய வியாபார முயற்சி நற்பலனை அளிக்கும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். திருமணக் காரியம் கைகூடும். மகப்பேறு பாக்கியம் கிட்டும். நீண்டகால கடன் தொல்லை தீரும். குருவை வழிபட்டு வந்தால் நன்மை உண்டாகும்.

**துலாம்:** பூர்வீக சொத்துக்கள் வந்து சேரும். நீண்ட நாள் முடிவு பெறாத வழக்கு பைசல் ஆகும். வேலையில் மாற்றம் புதிய வேலைவாய்ப்பு வந்து சேரும். வியாபாரத்தில் நல்ல மாற்றம் ஏற்படும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். ராகு / கேது / சனி வழிபாடு

# தஞ்சை பரத்வாஜ்

# நடக்கும்!

**17.6.2007 முதல் 23.6.2007 வரை**




சங்கடங்களைத் தீர்க்கும்.

**விருச்சிகம்:** மனதுக்கு பிடித்த சம்பவங்கள் நடக்கும். கணவன் / மனைவி இடையே உறவு நன்றாக இருக்கும். வேலையில் ஊதிய உயர்வு, இடமாற்றம் வரும். வீடு / மனை வாங்க உகந்த காலம். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். ராகு / கேது / குரு வழிபாடு செய்து வர, சங்கடங்கள் தீரும்.

**தனுசு:** உடல் ஆரோக்கியம் சீராகும். திருமணத் தடைகள் விலகும். தெய்வ அனுகூலம் கிட்டும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். நீண்ட கால வழக்கு வெற்றி பெறும். குடும்ப உறவு நன்றாக இருக்கும். வேலையில் நற்பெயர் கிட்டும். சனி / குரு வழிபாடு செய்துவர நற்பலன் உண்டாகும்.

**மகரம்:** பொறுப்பான பதவிகளில் உள்ளவர்கள் கவனமுடன் இருக்க வேண்டும். குடும்ப வாழ்வில் விட்டுக்கொடுத்துப் போவது நல்லது. திருமணக் காரியம் கைகூடும். வீடு / மனை மூலம் ஆதாயம் கிட்டும். வழக்கு வெற்றி பெறும். வண்டி வாகனத்தில் செல்லும்போது உஷார். கல்வி வளம் மேலோங்கும். ராகு / கேது / சனி வழிபாடு செய்து வர நற்பலன் உண்டாகும்.

**கும்பம்:** நீண்ட கால கடன் தொல்லை தீரும். குடும்ப வழியில் அனுசரித்து போவது நல்லது. புதிய வேலைவாய்ப்பு வந்து சேரும். உடல் ஆரோக்கியம் சீராகும். நண்பர் / உறவினர்கள் மூலம் ஆதாயம் கிட்டும். புதிய தொழில் முயற்சி கை கொடுக்கும். ராகு / கேது / குரு வழிபாடு செய்து வர நற்பலன் உண்டாகும்.

**மீனம்:** வீடு / மனை வாங்க நல்ல நேரம். புண்ணிய ஸ்தலம் சென்று மகானை தரிசிக்கும் வாய்ப்புக் கிட்டும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். குழந்தைகள் பற்றின கவலை தீரும். உடல் நிலை நன்றாக இருக்கும். உத்தியோகத்தில் பதவி உயர்வு ஏற்படும். எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். ஆஞ்சநேயர் வழிபாடு செய்து வர நற்பலன் உண்டாகும். ●

## மதனராஜன்

'யப்பா மதனராஜா, காதல் நந்தவனத்துக்கு இரண்டு பக்கம்னுதான் கணக்கு. ஆனா ஒண்ணரைப் பக்கத்துக்கு நீயே 'வளவள'ன்னு பேசறே! இதுக்குப் பேரு 'காதல் நந்தவனம்' இல்லே, மதனராஜன் நந்தவனம்'- இப்படி ஒரு வாசகர் கடிதம் போட்டிருக்கார். நல்ல மாட்டுக்கு ஒரு சூடு; நல்ல






பத்திரிகையாளனுக்கு ஒரு போஸ்ட் கார்டு! இனிமே முதல் பாராவைத் தவிர வேற எங்கேயும் தலை நீட்டறதில்லைன்னு முடிவெடுத்துட்டேன். ஓகேவா?

கல்கியில் இரண்டு வருடங்களுக்கு முன்பு வெளியான 'காதல் சிறகுகள்' பகுதியில் பிரபலங்களின் காதல் உருகல்களின் சில துளிகள் மீண்டும் இங்கே:

அண்ணாந்து பார்க்கும்
உயரத்தில் இருப்பதால்
நீ நிலவுதான்.
ஆனாலும், உன்னை நீ
உற்றுப் பார்க்கவும்
என்னிடம்தான் வர வேண்டும்
ஏனெனில்
கண்ணீரால் நிறைந்த குளம்
நான்.

– கவிஞர் யுகபாரதி



தினமும் ஒருமுறை தூக்கத்தில் கனவு காண்கிறேன். அதில் கடற்கரையோரம் ஏங்கிக் கிடக்கிறேன்; காதலுக்காக. ஒரு குதிரை என்னை நோக்கி வருகிறது. அதில் ஒரு ராஜகுமாரன். எனக்குப் பிடித்த உடையில், என்னை வசீகரிக்கும் அழகில், என் இளமை பூக்கும் சம்பிரத்தில்... என்னை அள்ள வருகிறான். அவன் முகம் தேடி அலைகிறேன். அது மட்டும் இருட்டாக இருக்கிறது. முகம் தெரியாத அந்த மன்மதனுடன்தான் தினமும் காதலித்துக் கொண்டிருக்கிறேன்.. யார் அந்த முகத்துக்காரன் என்பது இன்னமும் எனக்குத் தெரியவில்லை.

காலம் அவனை எனக்கு அடையாளம் காட்டும் தினத்துக்காக நிமிடந்தோறும் தவமிருக்கிறேன்.

- நடிகை சினேகா

# காதல் நந்தவனம்!

ஆண் பெண் என்பதெல்லாம் வெறும் தோற்றம் மாத்திரம்தான். இதை உணரும் ஞானமே, காதல். காதல், அவஸ்தை இல்லை. அவஸ்தையிலிருந்து விடுபடல். மனித வாழ்வின் தாத்பர்யம், சுதந்திரம் என்றால், காதல் சுதந்திரத்துக்கான பத்தாம்படி. மறைத்து வைக்கப்பட்ட ரகசியச் சிறகுகளை மனிதர்களுக்கு வழங்குகிறது காதல்.

- எழுத்தாளர் பிரபஞ்சன்



ஒன்பதாவது படிக்கும்போது ஒரு பெண்ணுக்கு வரும் கனவு என்னவாக இருக்க முடியும்? நன்றாகப் படிக்க வேண்டும்... பத்தாவது பரீட்சையில் நன்றாக ஸ்கோர் பண்ண வேண்டும்... புது சுடிதார் போட வேண்டும்... எல்லார் கண்ணும் நம் மீதே இருக்க வேண்டும்... அழகு ராணியாகத் திகழ வேண்டும்... இவை எல்லாவற்றையும் விடவும் பாதல்மலீக் என்பவன் மீது என் கனவு காதலாகப் படர்ந்தது. அவனது ஒவ்வோர் அசைவையும் விரும்பினேன். எப்படி அவன் எனக்குள் வீணை மீட்டினான் என்று இந்த நிமிடம் வரை தெரியவில்லை.

- சின்னத்திரை நடிகை மாளவிகா

# அட்மிஷன் பிரச்னை

இன்று தனியார் தொழில் கல்லூரிகளை நடத்துபவர்கள் கல்விக் கடவுளான சரஸ்வதியை வெள்ளைத் தாமரையிலிருந்து கொள்ளைத் தாமரை மீது கொண்டுபோய் அமர்த்தி விட்டார்கள் என்றால் துளியும் மிகையில்லை. பெற்றோர்களிடமும், மாணவர்களிடமும் பி.ஏ., பி.எஸ்ஸி பட்டப் படிப்புகளெல்லாம் வேஸ்ட் என்கிறார்போல



ஓர் எண்ணம் வந்துவிட, எல்லோரும் 'பொறி'யியல் கல்லூரி என்னும் பொறிக்குள் போய்ச் சிக்கிக் கொள்கிறார்கள்.

கல்லூரிகளில் அடிப்படை வசதிகளே இல்லை; தகுதியான ஆசிரியர்கள் இல்லை; கல்லூரிக்கு அங்கீகாரம் ரத்து; இப்படி எல்லாம் அவ்வப்போது செய்திகள் வந்து கொண்டிருந்தாலும் கூட, இந்த வருடம் எல்லா பொறியியல் கல்லூரிகளிலும் திருப்பதி கணக்காய் க்யூ. பெற்றோர்களும், பிள்ளைகளும் படும்பாடு சொல்லி மாளாது.

அப்ளிகேஷன் ஃபாரமே பிரச்னைகளின் பிள்ளையார் சுழி. ஒவ்வொரு கல்லூரியும் அப்ளிகேஷன் பாரங்களுக்கு நிர்ணயித்துள்ள விலையைக் கேட்டாலே மயக்கம் வந்துவிடும். அறுநூறு ரூபாயில் ஆரம்பித்து ஆயிரம் ரூபாய் வரை விலை வைத்திருக்கிறார்கள்.

கடந்த ஆண்டுகளைவிட இந்த ஆண்டு தனியார் பொறியியல் கல்லூரிகளின் மேனேஜ்மெண்ட் கோட்டாவுக்கு ஏக டிமாண்டு! எல்லாம் நுழைவுத் தேர்வை ரத்து செய்ததால் வந்த வினை. ''நுழைவுத் தேர்வு இல்லை என்பதால், பிளஸ் டூ மார்க் அடிப்படையில்தான் அட்மிஷன் வழங்கப்படும். இந்த ஆண்டு ஸ்டேட் போர்டு மாணவர்களில் ஆயிரக்கணக்கானவர்கள் மிக நல்ல மார்க் எடுத்திருப்பதால், அண்ணா பல்கலைக்கழக கவுன்செலிங் மூலம் நல்ல பொறியியல் கல்லூரியில், நமக்கு வேண்டிய கோர்ஸ் கிடைப்பதற்கு வாய்ப்புகள் குறைவு என்று பரவலாக பல பெற்றோர்கள் நினைத்து, தனியார் கல்லூரிகளுக்குப் படை எடுக்க ஆரம்பித்து விட்டார்கள்.

தமிழ்நாட்டில் கோடை வெயில் கொளுத்தினாலும் தனியார் பொறியியல்

கல்லூரி நிர்வாகிகள் காட்டில் பண மழை தான். கம்ப்யூட்டர் சயின்ஸ் வேணுமா? எட்டு லட்சம் எடு! 'ட்ரிபிள் ஈ' வேணுமா? ஏழு லட்சம் கொடு! மெக்கானிகல் இன்ஜினீயரிங் என்றால் ஆறு லட்சம்! என்று ரேட் நிர்ணயித்து விட்டார்கள்.

அந்தக் கல்லூரியின் நிர்வாகி ஒரு பெண்மணி. அவரைச் சந்திக்கச் சென்ற போது, மரியாதைக்காக 'உட்காருங்கள்' என்று கூடச் சொல்லவில்லை. என்ன கோர்ஸ்? என்று கேட்டார். சொன்னவுடன், ''எட்டு லட்சம் ஆகும்'' என்றார். ''எனக்கு அவ்வளவு வசதி இல்லை'' என்றவுடன், ''உங்க வசதிக்கேற்ப வேற காலேஜ் பார்த்துக்கங்க'' என்று முகத்திலடித்தாற் போல சொல்லிவிட்டு, அடுத்தவரை வரச் சொல்லி காலிங் பெல்லை அழுத்தினார்'' என்கிறார் ஒரு அப்பாவி தந்தை.

# பொறியியல் கல்லூரிகளில் பண மழை!

மைனாரிடி மத, இன கல்வி நிறுவனங்கள் என்று சொல்லி அனுமதி வாங்கி இருப்பவர்கள், தங்கள் மதத்தவர்களுக்கும் இனத்தவர்களுக்கும் இலவசமாக இடம் கொடுப்பதில்லை. தங்கள் மத, இனத்தவர்களுக்கு இன்ன ரேட் என நிர்ணயித்துவிட்டு, மற்றவருக்கு அதைவிட அதிகமான ரேட் வாங்கிக் கொள்கிறார்கள். அவ்வளவுதான்! அயல்நாட்டு இந்தியருக்கான கோட்டாவில் கண்ணாமூச்சி ஆடும் கல்லூரிகளும் இருக்கின்றன.

இன்னும் பல கல்லூரிகளில் வேறு விதமான அக்கிரமம் நடக்கிறது. அட்மிஷன் முடிந்து பணத்தைக் கட்டியபின், அதைவிட வேறு நல்ல கல்லூரியில் இன்னும் நல்ல படிப்புக்கு இடம் கிடைத்து, அங்கே போகும்போது, ஏற்கெனவே பணம் கட்டிய கல்லூரியில் பணத்தைத் திரும்பக் கேட்டால் தருவதில்லை.

''வேலூரில் மட்டும் என்ன நடக்கிறதாம்? எழுபத்தைந்தாயிரம் ரூபாய்க்கு டி.டி. இல்லாவிட்டால் கவுன்செலிங்கில் பங்கேற்கவே அனுமதிப்பது கிடையாது. அட்மிஷன் கிடைத்த மாணவர், அதன் பின் சீட் வேண்டாம் என்று சொன்னால், அந்த வருடத்து பீஸ் மட்டுமில்லாமல், நான்கு வருடத்துக்கான



பீஸையும் கட்டித்தீர வேண்டும் என்று விண்ணப்ப பாரத்துடன் தரப்படும் கையேட்டிலேயே அச்சிட்டு இருக்கிறார்கள்!

இதில் வேடிக்கை என்னவென்றால், நாட்டில் உள்ள அனைத்து பொறியியல் கல்லூரிகளையும் கட்டுப்பாடில் வைத்திருக்கும் அகில இந்திய டெக்னிகல் எஜுகேஷன் கவுன்சில், ஓர் ஆணையை வெளியிட்டிருக்கிறது. அதன்படி ஒரு மாணவருக்குக் கல்லூரியில் இடம் கிடைத்து அவர் கட்டணம் கட்டியபின், வகுப்புகள் தொடங்



✱ பி.வி.பக்தவச்சலம்

**“வசதியானவர்கள் பணம் போனால் போகட்டும் என்று சும்மா இருந்து விடுகிறார்கள் மத்திய தர குடும்பத்தினர் கல்லூரி நிர்வாகங்களை எதிர்த்து கோர்ட்டுக்குப் போகப் பயப்படுகிறார்கள்.”**

குவதற்கு முன்பாக, கல்லூரியிலிருந்து விலக விரும்பினால் கட்டிய தொகையிலிருந்து 'பிராசசிங் கட்டணமாக வெறும் ஆயிரம் ரூபாய் மட்டுமே பிடித்துக் கொண்டு, மீதியைத் திருப்பித்தரவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. மேலும், வகுப்புகள் ஆரம்பித்த பிறகு விலகினால், விகிதாசார முறையில் பிடித்துக் கொண்ட மீதியைத் திருப்பித் தர வேண்டும் என்றும் விதி உள்ளது.

கல்லூரிகள், மாணவர் சேர்க்கையின் போதே அவர்களுடைய ஒரிஜினல் மார்க் ஷீட், இதர சான்றிதழ்களை வாங்கி வைத்துக் கொண்டு, அவற்றையே துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தி மாணவர்களிடமிருந்து பணம் கறக்கின்றன. இதையும் அகில இந்திய டெக்னிகல் எஜுகேஷன் கவுன்சில், கடுமையாகக் கண்டிக்கிறது.

“இன்று கல்வி, குறிப்பாக தொழிற் கல்வி எந்த அளவுக்கு வணிகமயமாகி விட்டது என்பதற்கு இது ஓர் உதாரணம். இப்படிச் செய்வது சட்டப்படி தவறு. இது எல்லா கல்லூரி நிர்வாகத்தினருக்கும் தெரியும். ஆனாலும் இந்த அக்கிரமங்கள் தொடர்கின்றன என்றால், அவர்கள் தங்களுக்கு இருக்கும் அரசியல் அதிகார, பண பலத்தால் எந்த பிரச்னையானாலும் சமாளித்து விடலாம் என்று நினைப்பதுதான் காரணம். இத்தகைய கல்வி நிறுவனங்கள் மீது கேஸ் போட்டால், மிகச் சுலபமாக ஜெயிக்க முடியும். வசதியானவர்கள், பணம் போனால் போகட்டும் என்று சும்மா இருந்து விடுகிறார்கள். மத்திய தரக் குடும்பத்தினர் கல்லூரி நிர்வாகங்களை எதிர்த்து கோர்ட்டுக்குப் போக பயப்படுகிறார்கள் அதனால்தான் இந்தக் கொடுமைகள் தொடர்கின்றன'' என்கிறார் பிரபல மனித உரிமை வழக்கறிஞரான பி.வி.பக்தவச்சலம்.

தனியார் பொறியியல் கல்லூரிகள்தான் அப்பாவி மக்களை இப்படிப் படுத்துகின்றன என்று பார்த்தால், இந்த வருடம் அண்ணா பல்கலைக்கழகமும் தன் பங்குக்கு மாணவர்களையும், பெற்றோர்களையும் வதைக்கிறது. கடந்த ஆண்டு வரை தமிழகத்தில் பொறியியல் கல்லூரி அட்மிஷன்களுக்கான கவுன்செலிங் சென்னை, மதுரை, திருச்சி, கோவை என்று நான்கு இடங்களில் ஒரே நேரத்தில் வெற்றிகரமாக நடந்தது. தமிழகமெங்கும் இருந்து மாணவர்களும் பெற்றோர்களும் தங்களுக்கு அருகிலிருக்கும் கவுன்செலிங் மையத்துக்குச் சென்று அட்மிஷன் பெற்றார்கள். ஆனால் இந்த ஆண்டு நுழைவுத் தேர்வு ரத்து என்பதைக் காரணம் காட்டி, சென்னையில் மட்டுமே கவுன்செலிங் என்று அரசு முடிவு எடுத்துள்ளது. இதனால் சென்னை வந்து போகும் பயணக் கட்டணம், தங்குமிடம், உணவு செலவுகள் எல்லாம் அதிகம்தானே! இதுவே, நான்கு இடங்களில் கவுன்செலிங் என்றால், செலவு மிச்சமாகுமல்லவா?

'கவுன்செலிங் கட்டணம் ரத்து, கவுன்செலிங் வரும் மாணவருக்கு ஐம்பது சதவிகித பஸ் கட்டணங்களுக்குச் சலுகை' என்றெல்லாம் அமைச்சர் பொன்முடி சமாளித்தாலும் திண்டாட்டம் என்னவோ மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் தான்!

- எஸ்.சந்திரமௌலி

# அமரர் கல்கி நினைவு

## ஏழை மாணவ மணிகளுக்கு



சென்ற ஆண்டை விட நடப்பு கல்வி ஆண்டுக்கு (2007 - 2008) ரூ.10,000/- அதிகரித்து, ரூ.2,85,000/- உதவித் தொகைகளாக விநியோகமாகும்.

* ஒருவருக்கு ரூ.3000/- வீதம் எட்டு பட்டமேற் படிப்பு அல்லது ஆராய்ச்சி மாணவர்களுக்கு ரூ. 24,000/-
* ஒருவருக்கு ரூ.2000/- வீதம் 67 பட்டப்படிப்பு மாணவர்களுக்கு ரூ.1,34,000/-
* ஒருவருக்கு ரூ.1200/- வீதம் 85 மேல்நிலைப் பள்ளி அல்லது பாலிடெக்னிக் மாணவர்களுக்கு ரூ.1,02,000/-
* ஒருவருக்கு ரூ.5000/- வீதம் சிறப்புக் கல்விப் பயிற்சி தேவைப்படும் ஸ்பாஸ்டிக், டிஸ்லெக்ஸிக், ஆட்டிஸ்டிக் போன்ற பாதிப்புக்கு உட்பட்ட மாணவர்கள் ஐந்து பேருக்கு ரூ.25,000/-
* இவற்றுள் அமரர் கல்கி படித்த மூன்று பள்ளிகளில் மூன்று மாணவர்களுக்கு மூன்று உதவித் தொகைகள் ஒதுக்கப்படுகின்றன. மீதமுள்ள உதவித் தொகைகளைப் பெற மாணவ மாணவியர் விண்ணப்பிக்கலாம்.

முக்கிய நிபந்தனைகள் :

* விண்ணப்பங்களை மாணவர்கள் தங்கள் கைப்பட எழுத வேண்டும் தட்டச்சு, கம்ப்யூட்டர் கடிதங்கள் நிராகரிக்கப்படும். பார்வையற்ற மாணவர்கள், பிறர் எழுதித் தர கைநாட்டு பதிக்கலாம். சிறப்புக் கல்விப் பயிற்சி தேவைப்படும் (ஸ்பாஸ்டிக் போன்ற) மாணவர்கள் சார்பில் பெற்றோர் விண்ணப்பிக்கலாம்.
* விண்ணப்பத்துடன் பின் வருவனவற்றை உறுதி செய்து, கல்வி நிலையத்தின் முதல்வருடைய முத்திரை, கையெழுத்துடன் சான்றிதழ் தேவை:

(அ) அரசு அங்கீகாரம் பெற்ற கல்வி நிலையத்தில் சேர்ந்து படிக்க அனுமதி பெற்றுள்ளது குறித்து (தாற்காலிக அனுமதி செல்லாது).

(ஆ) படிப்பில் சிறந்து விளங்கி,

# அறக்கட்டளை

# உதவி: ரூ. 2,85,000



பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவர் / மாணவி என்பதற்கு.

(இ) உடல் ஊனமுற்றவர் எனில் அது பற்றிய விவரம்.

(ஈ) சென்ற ஆண்டின் இறுதித் தேர்வில் பெற்ற மதிப்பெண் நகல் - முதல்வரின் முத்திரை, கையெழுத்துடன்.

தபால் மூலம் மட்டுமே விண்ணப்பங்களை அனுப்பவும். கூரியர் கூடாது. நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தேவையற்ற சான்றிதழ்களை அனுப்புதல் விண்ணப்பதாரருக்குப் பின்னடைவாகிவிடும்.



தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு விவரம் தெரிவிக்கப்படும். கடிதப் போக்குவரத்து ஏதும் கிடையாது. சான்றிதழ்கள் - நகல்கள் திருப்பி அனுப்ப இயலாது.

உதவித் தொகை பெற தகுதி உடையவர்களைத் தேர்வு செய்வதில் அறங்காவலர்களின் முடிவே இறுதியானது.

**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:**

நிர்வாக அறங்காவலர்,
கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளை,
புது எண் 14, நான்காவது பிரதான சாலை,
கஸ்தூர்பா நகர், அடையாறு,
சென்னை - 600 020

**விண்ணப்பங்கள் வந்து சேர கடைசி தேதி: ஜூலை 31, 2007**

# வளம் தரும் கோயில் - 11

## கோவூரில் உறையும் புதன்

"கோவூர் சுந்தரேஸ்வரரைத் தேடி வாருங்கள். உங்கள் கோரிக்கைகள் ஈடேறும்" (கோரி ஸேவிம்ப ராரே கோரிகலு ஈடேற) என்று உத்தரவாதம் அளிக்கிறார் தியாகராஜ ஸ்வாமிகள். கோவூர் ஈசன் பேரிலும் அவர் பஞ்சரத்ன கீர்த்தனைகள் இயற்றியிருக்கிறார்.

போரூரில் இருந்து குன்றத்தூர் செல்லும் சாலையில் பைபாஸ் ரோடைக் கடக்கும் இடத்திலிருந்து சிறிது தூரம் சென்று, வலப்புறம் திரும்பினால் கோவூர் சுந்தரேசுவரர் கோயில் தேரடியை அடையலாம்.

கோயில் வளாகம் மிகப் பெரியது. விசாலமான இரண்டு பிராகாரங்களுடன் கட்டப்பட்ட இக்கோயில், அந்தக் காலத்தில் மிகுந்த செல்வச் செழிப்புடன் விளங்கியிருக்கிறது.

மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் புதன் தலமாக விளங்குவதைப் போல, சுந்தரேஸ்வரர் என்ற பெயருடன் ஈசன் அருள்பாலிக்கும் இக் கோயிலும், தொண்டை நாட்டு நவ கிரஹ தலங்களுள் புதனுக்கு உரிய தலமாகக் கொள்ளப் படுகிறது.

நவ கிரஹ வழிபாடு என்பது பிற்காலத்தில் உருவானது என்பதை ஏற்கிறோம். ஆதி காலத்துக் கோயில்களில் நவ கிரஹ சன்னிதிகள் இருக்கவில்லை.

இவ்வாறிருக்க, மதுரை மீனாக்ஷி கோயில் புதனுக்கு உரிய க்ஷேத்திரமாகப் பிரசித்தி பெற்றதும்கூட பிற்காலத்தைய நிகழ்வாகத்தான் இருக்க வேண்டும்.

புதன் கல்விக்கும் ஞானத்துக்கும் அதிபதி. ஜோதிட சாஸ்திரப்படி, கணிதம், மருத்துவம், விஞ்ஞானம் முதலான கல்விகளில் சிறக்கவும், சித்திரம் சிற்பம் போன்ற நுண்கலைகளில் வல்லமை பெறவும் புதனுடைய அருள் இருக்க வேண்டும்.



✱ வெள்ளீசுவரர் கோயில்

திடச் சித்தத்தை - கலங்காத மனத்தை - அருள்பவரும் இந்தப் புதன்தான். - இந்தக் குணங்கள் யாவும் மதுரை மீனாக்ஷிக்கும் அவள் குடி கொண்டுள்ள கோயிலுக்கும் உரியவைதானே? சிறுமி மீனாக்ஷி போர்க் கோலம் பூண்டு மூவுலகையும் வென்று வர புறப்பட்டவள் ஆயிற்றே! நமது சிற்ப, சித்திரக் கலைகளின் நிரந்தர ஆவணம் மதுரை மீனாக்ஷி கோயில். - அதுவே புதன் கிரஹத்தின் ஆதிக்கம் மிக்க கோயிலாக விளங்குவதும் பொருத்தம்தான். இதே காரணங்களுக்காகக் கோவூர் சுந்தரேசுவரர் - சௌந்தர்யநாயகி கோயிலும் புதன் வழிபாட்டுக்குரியதாகிறது.

உட்பிராகாரத்தில் பேரமைதி குடி கொண்டிருக்கிறது. சற்று உயர்ந்த கருவறையில் சுந்தரேஸ்வரர் கிழக்கு நோக்கிய சிவலிங்கத் திருமேனியாய் எழுந்தருளி இருக்க, வலப்புறம் அன்னை சௌந்தராம்பிகை தனிச் சன்னிதியில் இருந்து அருள் பாலிக்கிறாள்.

கருவறைச் சுவர் முழுவதும் கோவூரின் பழைமையை விளக்கும் சரித்திரச் சான்றுகளாய் கல்வெட்டுகள் நிறைய காணப்படுகின்றன. நந்தவனத்திடையே ஸ்தல

# சென்னையைச் சுற்றியுள்ள நவ கிரஹ தலங்கள்!

த.கி.நீலகண்டன்

விருக்ஷமான, ஒன்பது தளங்களை, உடைய மகாவில்வம் இருக்கிறது. மகாவில்வம் ஓர் அபூர்வமான மரம். அதைப் பாதுகாப்பதாக எண்ணிக்கொண்டு, மரத்தைச் சுற்றிலும் உயர்ந்த சிமெண்ட் மேடையை எழுப்பி விட்டிருக்கிறார்கள். மரம் தண்ணீர் இன்றி தவிப்பது அதன் இலைகளில் தெரிகிறது.

வெகு காலத்துக்குப் பிறகு தற்போது கோயில் புதுப்பிக்கப்பட்டு வருகிறது. சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன் இனிய பொழில்களும் நெடிய வயல்களுமாய் கண்ணுக்கெட்டிய தூரம் வரை பச்சைப் பட்டு அணிந்திருந்த கோவூர், இன்று ஆங்காங்கே கூறு போடப்பட்டு கான்கிரீட் காடாக மாறத் தொடங்கிவிட்டது கும்பாபிஷேகம் முடிவதற்காகக் காத்திருக்காமல் இப்போதே போனால் மிச்சமிருக்கும் பச்சை வயல்வெளிகளையும் பார்த்த மாதிரியும் இருக்கும். புத பகவானுக்கு உரிய நிறமும் பச்சைதானே!



கோவூர்

## போரூர் அமர்ந்த குரு (வியாழன்)


**போ**ரூர் ஜங்ஷனின் இரைச்சலிலிருந்து தப்பி குன்றத்தூர் சாலையில் திரும்புங்கள். இருநூறு அடிக்கு முன்பே இடப்புறம் ஓர் அலங்கார வளைவு, 'பால முருகன் கோயிலுக்கு வருக' என்று வரவேற்கும்! அதில் நுழைந்து பாலமுருகன் கோயிலைத் தாண்டிப் போனால், (நேரமிருந்தால் பாலமுருகனையும் பார்த்துவிட்டு) இடப்புறமாக வளைந்து நெளிந்து செல்லும் தெருவில், ஒரு கோடியில் வெள்ளையும் காவியும் தீட்டப்பட்டு, கோபுரம் இல்லாத மொட்டை வாசல் தென்படும். உள்ளே நுழைந்தால் பெரிய நந்திகேஸ்வரர் நம் தேடலுக்கு முற்றுப்புள்ளி வைப்பார்! கருவறை உள்ளே, அத்தனை இடத்தையும் ஆக்கிரமித்துக் கொண்டு கம்பீரமாகக்

காட்சி தருகிறார் இராமநாதர். பக்கத்தில் நின்று பூஜை செய்யும் அர்ச்சகர் சற்றே எம்பிதான் அவருக்கு மாலை சாத்த வேண்டியிருக்கிறது என்றால் லிங்கத் திருமேனியின் அளவை ஊகித்துக் கொள்ளுங்களேன்!

இராமன், சீதையைத் தேடி வந்த சமயம், இலுப்பை வனமாக இருந்த இந்த இடத்தில், உள்ளம் சோர்ந்து உட்கார்ந்து விட, இங்கு சுயம்புவாய் எழுந்த லிங்கத் திருமேனியை வழிபட்டு, அதிலிருந்து வெளிப்பட்டு அருள் புரிந்த ஈசனை ஞான குருவாக ஏற்று, ஞானோபதேசம் பெற்று தன் வாட்டம் நீங்கப் பெற்றதால், இந்தத் தலம் குருஸ்தலம் என்று விளங்குவதாகக் கூறப்படுகிறது.

ஆலயம் மிகப் புராதனமான கருங்கல் திருப்பணியால் ஆனது. கஜபிருஷ்ட விமானத்துடன், குலோத்துங்க சோழானால் எழுப்பப்பட்ட 108 சிவாலயங்களில் இதுவும் ஒன்று. அம்பிகை சிவகாமசுந்தரியாக தனிச் சன்னிதியில் தெற்கு நோக்கி நின்ற வண்ணம் பக்தர்களை வரவேற்கிறாள். சிறிய திருவுருவம் ஆனாலும் திருத்தமாக இருக்கிறது.

ராமநாதர் சன்னிதியின் கோஷ்டத்தில் உள்ள தட்சிணாமூர்த்தியே குருஸ்தலத்துக்குரிய பூஜைகளை ஏற்கிறார்.



* புதன்



* குரு

குரு பகவான் (வியாழன்) அறிவுக்கும் ஆற்றலுக்கும் அதிபதி. செல்வம், புகழ், சந்ததி - சகோதர பந்தம் போன்றவற்றை அருள இவரிடம் வேண்டிக் கொள்கிறார்கள். 'வேறு எதையாவது வேண்டிக்கொண்டால் தர மாட்டேனா? என்ன!' என்பது போல் அவர் முகத்தில் அமைதிப் புன்னகை தவழ்கிறது!

கோயிலின் ஆதாரபூர்வமான வரலாற்றை விளக்கும் கல்வெட்டுகள், ஒரு மூலையில் ஒதுக்கப் பெற்று, அதன் மேல் குப்பை கொளுத்திக் கொண்டிருக்கிறார்கள். நம் சரித்திரப் பெருமையின் மீது நம் மக்களுக்கு

இருக்கும் அக்கறையை நினைத்து வருந்தாமலிருக்க முடிகிறதா! இராமபிரானுக்கு குருவாக இருந்து ஞானோபதேசம் செய்த இராம நாதர், இத்தகைய பொக்கிஷங் களைப் பாதுகாக்கும் பொறுப் புணர்வை நம் மக்களுக்கு உப தேசிக்கட்டும் என்று பிரார்த்தனை செய்து விடைபெறுவோம்.

## சுக்கிரனுக்குக் கண் கொடுத்த வெள்ளீஸ்வரர்!

**வா**மன மூர்த்தியாய் வந்து மாவலியிடம் மூன்றடி மண் யாசித்தார் மகா விஷ்ணு. இது தேவர்களின் சதியென்று உணர்ந்து கொண்ட அசுர குரு சுக்ராச்சாரி யார், தாரை வார்த்துக் கொடுக்கும் கமண்டலத் துவாரத்தை வண்டு உருவில் சென்று அடைத் துக் கொள்ள, வாமனர் ஒரு தர்ப்பைப் புல்லால், அடைத்த துவாரத்தைக் குத்திக் கிளற, சுக்கிராச் சாரியார் ஒரு கண்ணை இழந்தார்! இழந்த கண்ணை மீண்டும் பெறுவதற்காக ஒரு சிவலிங் கம் ஸ்தாபித்து சுக்ராச்சார்யார் பூஜை செய்த இடமே இன்று மாங்காடு வெள்ளீசுவரர் ஆலயம். தொண்டை நாட்டு நவ கிரஹத் தலங்களில் சுக் கிரனுக்கு உரிய தலம்.


✱ சுக்கிரன்

அம்பிகை இந்த தலத்திலுள்ள மாமரக் காட்டில் பஞ்சாக்னி நடுவே தவமியற்றியபோது இந்த வெள்ளீசுவரரைத் தினமும் வணங்கிச் செல் வாளாம். சுக்கிரன் செய்யும் பூஜைக்குத் தடையாய் இருக்க வேண்டாம் என்று, நந்தி தேவருக்கு அரு கிலேயே நின்று தரிசனம் செய்து திரும்பியதால், அம்பிகையின் பாதச்சுவடு நந்தி தேவருக்கு அரு கில் பதிந்திருக்கிறது என்று கோயில் தல புராணம் தெரிவிக்கிறது.

மாங்காடு காமாக்ஷி அம்பிகை கோயிலின் இராஜகோபுரம் வழியாக வெளியே வந்து, எதிரில் உள்ள சன்னிதி தெருவில் சிறிது தூரம் சென்று, வலப்புறம் திரும்பிச் செல்லும் ஒரு தெருவில் சில நூறு அடிகள் கடந்தால், வெள்ளீசுவரர் ஆலய விமானம் ஒரு தெருவளைவில் கண்ணுக்குத் தெரிகிறது. பெரிய மதிற்சுவருடன் ஒரு மொட்டை கோபுர வாயிலில் நுழைந்து நிமிர்ந்து பார்க் கிறோம். எதிரே ஓங்கி நிற்கும் கோயில் விமா னமும் அதன் பின்னணியில் நீல வானமும் அதில் அங்கொன்றும் இங்கொன்றுமாய் வெண் மேகப் பொதிகளும் ஒரு வண்ண ஓவியமாய் நம் மனத் தில் பதிந்து விடுகிறது. போன வருஷம் இக் கோயி லைத் தேடி வந்தபோது முட்புதர்களும், காலில் குத்தும் நெருஞ்சி முட்களுமாய் சுதையில் எழுப் பப்பட்ட விமானம் இடிந்து, ஆள் அரவமற்று பரிதாபமாய்க் காட்சியளித்தது. இன்று சுத்தம்

**'இழந்த கண்ணை மீண்டும் பெறுவதற்காக ஒரு சிவலிங்கம் ஸ்தாபித்து சுக்ராச்சார்யார் பூஜை செய்த இடமே இன்று மாங்காடு வெள்ளீசுவரர் ஆலயம்.'**

செய்யப்பட்டு பலிச் சென்றிருக்கிறது.

மேற்கு வாசல் வழியே நுழைந்தவுடன் நந்திதேவர் காட்சி தருகிறார். மெலிந்த உடல் கொண்ட அந்த ரிஷபத்தின் முகத்தில் புன்னகை! ஆனந்தப் பரவசத்துடன் எதிரில் உள்ள சாளரத்தின் துவாரத்தினூடே தெரியும் பெருமானது திருக்கோயிலைப் பார்த்தபடி இருக்கிறார்! நந்தி தேவரைப் போலவே காமாக்ஷி அம்பிகையும் பாதச் சுவடுகளின் ரூபத்தில் அந்த சாளரம் வழியே தரிசனம் செய்து கொண்டிருக்கிறாள்!

உள்ளே மிகுந்த கம்பீரமான தோற்றத்துடன் சன்னிதி முழுவதையும் நிறைத்துக்



* போரூர் ராமநாதீசுவரர்

கொண்டு மிகப் பெரிய அளவில் வெள்ளீசுவரர் காட்சி தருகிறார். நமது பிரமிப்பு நீங்க சில நிமிஷங்கள் ஆகின்றன!

**கா**ஞ்சிபுரத்தைப் போலவே, இந்த ஊரிலுள்ள எந்தச் சிவன் கோயிலிலும் அம்பிகைக்குத் தனிச் சன்னிதி கிடையாது. மாங்காடு காமாக்ஷி ஆலயமே இந்த ஆலயத்தின் அம்பிகை சன்னிதி. பிராகாரத்தை வலம் வருகையில், சுவாமி சன்னிதியின் இருபுறத்திலும் நேர்த்தியான பல்லவர் காலச் சிற்பங்கள் பிரமிப்பூட்டுகின்றன.

கோயிலை வலம் வந்தாயிற்று. மீண்டும் ஒருமுறை பெருமானை தரிசிக்க ஆவல் மேலிடுகிறது. மறுபடியும் சன்னிதிக்குள் நுழைகிறோம். சட்டென்று ஒரு கணம் ஏமாற்றம். சன்னிதியைத் திரையிட்டு மூடியிருக்கிறார்கள். திரை வழியே எட்டிப் பார்த்து, ''ஒரு இரண்டு நிமிஷம் உட்காருங்கள்'' என்று வேண்டுகிறார் குருக்கள். சன்னிதிக்கு எதிரே உட்காருகிறோம். பார்த்துக் கொண்டிருக்கையிலேயே திரை சட்டென்று விலகி, அபிஷேகத்துக்கு தயார் செய்கிறார்கள். இது வரை கண்ட கோலத்தைக் காட்டிலும் அதிகம்பீரத்துடன், பாலபிஷேகம் ஏற்று, தீபாராதனை முடிந்து நமக்கு விடையளித்துவிட்டு, மீண்டும் அலங்காரத்திற்காக திரையின் பின்பு மறைகிறார் வெள்ளீசுவரர்!

**க**லை, பண்பாடு தழைக்கவும், காதலில் ஜெயிக்கவும், குடும்ப உறவு முறிவுகள் சீர் செய்யப்படவும் நட்பு மீளவும் சுக்ரன் (வெள்ளி) அருள் வேண்டும் என்கிறார்கள். ஆட்சி அதிகாரம், செல்வாக்கு போன்ற உயர்வுகளுக்கும் இல்லற தோஷம் நீக்குவதற்கும்கூட இவரே அதிபதி. 'சுக்ர தசைதான் போ!' என்று நல்லதுக்கு மேல் நல்லது. நடக்கிறபோது சொல்வதுண்டு. அப்படித் தங்களுக்கு நடக்க ஆசை கொள்வோர் இங்கே வேண்டிக்கொள்கிறார்கள்...

ஆனால் பாருங்கள், வெள்ளீசுவரர் தமது சுக்ர தசைக்கு நீண்ட காலம் காத்திருக்க வேண்டியிருந்திருக்கிறது! கும்பாபிஷேகப் பணிகள் தொடங்கி ஐந்தாண்டுகள் கழிக்துக்கான் பூர்த்தியாகியிருக்கின்றன! ◎



## கூடங்குளம் பயங்கரம்

# அணுசக்தி மூலம் மின்சாரம் - பொய்யா?

"பூச்சி மருந்தில்கூட அனுமதிக்கப்பட்ட அளவு என்பது (permissible level) உண்டு. ஆனால், கதிரியக்கத்தைப் பொறுத்த வரை பாதுகாப்பான அளவு (safe dose) என்பதே கிடையாது.'' அணுக் கதிரியக்கத்தின் விளைவுகள் தொடர்பாக ஐ.நா. அறிவியல் குழு இவ்வாறு அறிக்கை அளித்திருக்கிறது.

கூடங்குளம் அணுமின் நிலையப் பிரச்னை மீண்டும் முழு வீச்சோடு தலையெடுத்திருக்கிறது. ஏற்கெனவே, அங்குள்ள இரண்டு அணு உலைகள் போதாதென்று மேலும் நான்கு அணு உலைகள் அமைக்க முடிவெடுத்துச் செயல்படுத்தவும் ஆரம்பித்துவிட்டது மத்திய அரசு.

கூடங்குளம் என்று குறிப்பிடப்பட்டாலும் அதற்கு அருகே உள்ள கிராமமான இடிந்தகரையில்தான் அணுமின் நிலையம் நிறுவப்பட்டிருக்கிறது. ரஷ்யாவின் உதவியுடன் நிறுவப்படும் இந்த அணுமின் நிலையம் கடல் நீரைக் கொண்டு அணு உலைகளைக் குளிர்ப்படுத்துகிறது. இதன் காரணமாகத்தான் கன்னியாகுமரிக்கு அருகிலுள்ள கூடங்குளத்தில் இதை நிறுவியிருக்கிறார்கள்.

கூடங்குளம் பகுதி மக்களின் எதிர்ப்பும் அதிகமாகிக் கொண்டே இருக்க, அரசும் தன் முடிவில் உறுதியாகத்தான் இருக்கிறது. சமீபத்தில் நடைபெற்ற கருத்துக் கேட்புக் கூட்டம் தோல்வியில் முடிவடைந்தது.

"இதெல்லாம் கண்துடைப்பு நாடகம். நான்கு அணு உலைகளுக்குமான அனைத்து திட்டங்களையும் எல்லா ஏற்பாடுகளையும் அரசு செய்துவிட்டது. இதற்கான ஒப்பந்தங்களும் ரஷ்ய அதிகாரிகளுடன் கையெழுத்திடப்பட்டுவிட்டன. பிறகென்ன கருத்துக் கேட்புக் கூட்டம்?'' என்று கொதிக்கிறார்கள் மக்கள்.

இது குறித்துச் சுற்றுப்புற ஆய்வாளரும் லயோலா கல்லூரிப் பேராசிரியரு



* கூடங்குளம் அணுமின் நிலையம்



* டாக்டர் வின்சன்ட்

மான டாக்டர் வின்சென்ட்டைக் கேட்ட போது ''நம் நாட்டில் மின்சாரம் மிக அதிகமாகத் தேவைப்படுகிறது. மரபுசார்ந்த எரிபொருட்கள் (பெட்ரோல், டீசல் போன்றவை) மிக வேகமாகக் குறைந்து வருகின்றன. மரபுசாராத சக்திகள் - காற்றாலைகள், சூரியசக்தி போன்றவை மிக அதிக தயாரிப்புச் செலவு பிடிப்பவை. தவிர பொது மக்களால் இவை முழுமையாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

வளர்ந்து வரும் நாடு என்பதிலிருந்து வளர்ந்த நாடு என்ற நிலைக்கு இந்தியா சென்று கொண்டிருக்கிறது. இந்தச் சூழலில் அணுசக்தியை மாற்றாகப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிப்பது ஏற்கத்தக்கது தான். பாதுகாப்பு உணர்வு, வீண் பொருட்கள் வெளியேற்றம் இந்த இரண்டு விஷயங்களிலும் கவனமாக இருக்க வேண்டும். அவ்வளவுதான். இந்த இரண்டையும் கவனித்து கண்காணிக்கும் அளவுக்குத் தொழில்நுட்பம் வளர்ந்திருக்கிறது. எனவே, கவலை வேண்டாம். அமெரிக்காவிலிருந்து பாகிஸ்தான் வரை அணுசக்தியைப் பயன்படுத்துகிறார்கள். இந்த நிலையில் நம் நாடும் சுயச்சார்போடு விளங்க அணுசக்தி உற்பத்தி அவசியம்தான் என்றார்.

ஆனால், கல்பாக்கம் 'சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு மருத்துவக் குழு'வின் உறுப்பினரான டாக்டர் புகழேந்தி இந்தக் கருத்திலிருந்து வேறுபடுகிறார்.

''தமிழகம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய நேரம் இது. வரவிருக்கும் அணு உலைகளையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் கல்பாக்கம், கூடங்குளம் ஆகிய இரண்டிலுமாகச் சேர்ந்து, மொத்தம் பத்து அணு உலைகள் தமிழகத்தில் செயல்படப் போகின்றன.

''அணுமின் நிலையம் தேவையா? என்பது முதல் கேள்வி. இதனால் பாதிப்பு உண்டா? என்பது அடுத்த கேள்வி.

''அணுசக்தியின் மூலம் மின்சாரம் என்று கூறப்படுவதே ஒரு பொய். அணுகுண்டு தயாரிக்கதான் இந்த உலைகள் உருவாக்கப்படுகின்றன. மின்சாரம் என்பது இதில் ஒரு உபரிப் பொருள், அவ்வளவு தான். தவிர, அணுசக்தி மூலம் மின்சாரம் தயாரிப்பது என்பது அதிக செலவு பிடிப்பது. இதனால் மக்களுக்குப் பயன் இராது.

''மாறாக, கதிரியக்கம் என்பது நாம் எதிர்கொள்ள இருக்கும் பேராபத்தாக இருக்கப் போகிறது.

''2005 ஜனவரி 31 அன்று அமெரிக்காவின் பொது சுகாதாரத் துறை அளித்த அறிக்கையின்படி எக்ஸ் ரே, நியூட்ரான், காமா கதிர்கள் ஆகியவை கார்சினோஜின்கள் என்று அங்கீகரிக்கப்பட்டுள்ளன. கார்சினோஜின் என்பது புற்றுநோயை உண்டாக்கும் காரணி. இதுவரை இவற்றால் புற்றுநோய் உண்டாக வாய்ப்பு உண்டு என்பதுபோல் கூறிக் கொண்டிருந்தார்கள். இப்போது இந்தப் பாதிப்புகள் நிச்சயம் என்று உறுதி செய்திருக்கிறார்கள்.

**●● ''அணுசக்தியின் மூலம் மின்சாரம் என்று கூறப்படுவதே ஒரு பொய். அணு குண்டு தயாரிக்கத்தான் இந்த உலைகள் உருவாக்கப்படுகின்றன. மின்சாரம் என்பது இதில் ஒரு உபரிப் பொருள், அவ்வளவுதான்.'' ●●**

கல்பாக்கத்தில் அறிவியல் பூர்வமான ஒரு சோதனையை மேற்கொண்டோம். 'மல்டிபிள் மைலோமா' என்ற நோய் குறித்த ஆராய்ச்சியை மேற்கொண்டோம். இது கதிரியக்கத்தால் எலும்பு மஜ்ஜையில் உருவாகக் கூடிய ஒரு வகை புற்றுநோய். கல்பாக்கம் பகுதியில் ஒன்றரை வருடங்களுக்கு நடைபெற்ற இந்த ஆராய்ச்சியில் அணு உலைகளில் பணியாற்றிய இரண்டு பேரும், கல்பாக்கம் நகரத்தைச் சேர்ந்த ஒரு பெண்மணியும் இந்தப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு இருப்பது தெரியவந்தது.




சென்னை அடையாறு புற்றுநோய்க் கழகம் 'ஆண்களில் ஒரு லட்சத்தில் 1.7 பேரும், பெண்களில் ஒரு லட்சத்தில் 0.7 லட்சம் பேரும் இதனால் இறக்கிறார்கள்'' என்று சொல்லியிருக்கிறது. அதாவது, ஒரு லட்சத்துக்கு 2.4 நபர்கள்.


ஆனால் கல்பாக்கத்தின் மக்கள் தொகை அதிகபட்சம் 25,000தான். பாதிப்போ மூன்று பேருக்கு - அதாவது, பொதுவான விகிதத்தைவிட நான்கு மடங்கு அதிகம்!

''மேலும் ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளில் இப்படிப் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை அளிப்பார்கள். அமெரிக்காவில் இதற்கெனவே ஒரு (எனர்ஜி எம்ப்ளாயீஸ் ஆக்ட்) சட்டம் உண்டு. இங்கே சட்டமும் கிடையாது. இழப்பீடும் கிடையாது'' என்று குமுறினார்.

இந்த வாதங்கள் பரிசீலிக்கப்பட வேண்டியவை. சோவியத் யூனியனின் (இன்றைய உக்ரைன்) செர்னோபில் அணுமின் நிலைய விபத்தை யாரும் மறந்திருக்க முடியாது. அணுசக்தி இல்லாமலேயேகூட விஷவாயுவின் கோரத் தாண்டவத்தை போபாலில் அனுபவித்திருக்கிறோம். மார்ச் 1999-ல் கல்பாக்கத்தில் கனநீர்க் (heavy water) கசிவு ஏற்பட்டபோது 'அதெல்லாம் அனுமதிக்கப்பட்டுள்ள அளவுக்குள்தான்' என்றனர் அதிகாரிகள்.

'இன்னும் எதையெல்லாம் அனுமதிக்கப் போகிறோம்?' என்பதுதான் அச்சுறுத்தும் கேள்வி.

**- ஜி.எஸ்.எஸ்.**



**மா**யவீரன் தாத்தா பெயரைப் போலவே ஆளும் மாறுபட்டவர்தான். அதென்ன மாயமோ மயிலாள் அவருக்கு மட்டும்தான் கட்டுப்படுகிறாள். அவளைக் கவனித்துக் கொள்வதற்காகவே ஆண்டவன் தனக்கு இன்னமும் நாள் குறிக்காமல் இருப்பதாக மாயவீரன் சொல்வார்.

இவருக்கு ஒண்ணு ஆயிடுச்சுன்னா இவளுக்கு துணையே இல்லாமப் போயிடுமே.

மயிலாள் என்ற பெயரில் உள்ள ஒரு நளினத்தைக் கருதியும், குடும்பத்துக்கே வழிகாட்டியாய் இருந்த, பாட்டியின் அறிவுக் கூர்மையோடும் வருவாள் என்ற எதிர்பார்ப்போடும்தான் சூட்டினார்கள்.

ஆனால், பிறந்து ஆறேழு மாதங்களுக்குப் பிறகும் அவளுடைய கழுத்து நிமிரவில்லை. தவழத் துவங்கியபோது அதில் மழலைக்குரிய வேகமில்லை.

கடவுளின் வஞ்சத்துக்கு கடவுளிடமே மேல் முறையீடு செய்ய கோயில் கோயிலாய்ப் போனார்கள்.

கோயிலைத் தவிர வேறு எங்கே அவளை அழைத்துப் போக முடியும்? அவளுடைய மூளை வளர்ச்சி அவ்வளவுதான் என்று மருத்துவர்களும் சொல்லிவிட்ட தகவல் உறவினர்கள் வட்டாரத்தில் பரவிவிட்டது. பதிமூன்று வயதாகிவிட்ட நிலையில் நடுத்தெருவில் ஜட்டியோடு போய் நிற்கிறாள். சிலநேரங்களில் அதுவும் இல்லாமலே.

''உள்ளவாடி... டிரஸ்சப் போட்டுக்கடி'' என்று என்னதான் கத்தினாலும் கேட்க மாட்டாள். ''ஏண்டி அறிவில்ல உனக்கு?...'' என்று கேட்பதன் அபத்தம் புரியாதவர்களாகக் கேட்டு அடித்து விடுகிறார்கள். அப்புறம் தெருவில் அப்படியே உட்கார்ந்து அழ ஆரம்பித்து விட்டால்,

# மாயவீரன் தாத்தா

அ. குமரேசன்

அவளை அவ்வளவு எளிதில் வீட்டுக்குள் கொண்டு வந்துவிட முடியாது.

''மயிலா... வாம்மா வீட்டுக்குள்ள போகலாம்... உங்கம்மா அடிச்சாளா... அப்புறம் நாமளும் அடிக்கலாம்..'' என்று மாயவீரன் தாத்தா சொல்வார். சட்டென்று அவருடைய கையைப் பிடித்து எழுந்து விடுவாள். கையில் கொண்டு வந்த துண்டையோ பாவாடையையோ அங்கேயே அணிவித்து மெதுவாக நடத்தி உள்ளே கூட்டி வந்து விடுவார்.

என்னதான் சொல்வாரோ, என்னதான் புரிந்து கொள்வாளோ கேட்டுக் கொண்டே அவருடைய மடியில் தலைவைத்துத் தூங்கி விடுவாள். தெருவிலுள்ள வீடுகள் அவருடைய தாத்தாவுக்குச் சொந்தமாக இருந்தன. இப்போது இந்த வீட்டைக்கூட மகன் விற்கப் பார்ப்பது, அவர் சம்பாதித்தபோது நடத்திய ராஜவாழ்க்கை... இப்படிப் பல கதைகளையும் சொல்வார். ஆனால், அவள் என்ன சொல்கிறாள், என்ன கேட்கிறாள் என்பது அவரைத் தவிர வேறு யாருக்கும் புரியாது. தாயாகிய தனக்குக்கூட புரியாத அவளுடைய உணர்வுகள், மாமனாருக்குப் புரிவதில் பரமேஸ்வரி அதிசயப்பட்டிருக்கிறாள்.

குழந்தை இப்படிப் பிறந்து விட்டதற்கு பரமேஸ்வரிதான் காரணம் என்று சுந்தரம் வீட்டுச் சண்டைகளின்போது, ஈவு இரக்கமில்லாமல் குற்றம் சாட்டியிருக்கிறான். அநேகமாய் சண்டையை முடிவுக்குக் கொண்டு வந்து தன்னுடைய வெற்றியை நிலைநாட்டுவதற்கான கடைசி ஆயுதமாக... ''உன் வயித்துல கோளாறு இல்லன்னா என் பொண்ணு இப்படியா பொறந்திருப்பா...'' என்று கேட்டிருக்கிறான். இத்தனைக்கும் குழந்தைப் பருவத்திலிருந்தே சேர்ந்து விளையாடிய சொந்த அத்தை மகன்தான். அதுதான் இந்த மயிலாளை இப்படி பிறக்க வைத்தது என்பதைப் புரிந்து கொண்டவர் தாத்தா.

அந்த உறுத்தல் பாட்டிக்கும் இருந்திருக்கும் போல, ஆறு ஆண்டுகளுக்கு முன் ஆழ்ந்த தூக்கத்திலேயே மூச்சை நிறுத்திக் கொண்டதன் மூலமாகவே அந்த உறுத்தல் முடிவுக்கு வந்தது.

பாட்டியின் குறட்டை மயிலாளிடம் ஒட்டிக் கொண்டிருந்தது. அந்தக் குறட்டையை சகித்துக்கொள்கிற திறன் தாத்தாவிடம் இருந்தது. குறட்டையை மட்டுமா? எதையெல்லாம் அவர் சகித்துக் கொண்டார்.

பல சமயங்களில் அவளைத் தூக்கி நிறுத்தி ஆடை மாற்றுவதோடு தன்னுடைய வேட்டியையும் அவர் மாற்ற வேண்டி வரும்.

''கொடுங்க மாமா... வேட்டியை நான் அலசி காயப் போடுறேன்'' என்பாள் பரமேஸ்வரி. வேண்டாமென மறுத்து தானே துவைத்துக் கொள்வார்.

'நெசமாவே இந்தப் பொறுப்பு நானா ஏத்துக்கிட்டதுதானா? மயிலா மேல எனக்கிருக்கிற பாசத்தைப் பயன்படுத்திக்கிட்டு கொஞ்சம் கொஞ்சமா முழுப் பொறுப்பையும் தலையிலேயே கூட்டிட்டாங்கன்றதுதானே நிசம்? அவ்வப்போது இந்த எண்ணமும் ஏற்படும்! ''சே...சே நம்ம குடும்பம்... நம்ம புள்ள...'' என்று உடனுக்குடன் தலையை உலுக்கிக்கொள்வார்.

''மாமா மட்டும் இல்லன்னா எங்களால ஒரு வேலையும் செய்ய ஏலாது'' என்று

வீட்டுக்கு வருகிறவர்களிடம் பரமேஸ்வரி சொல்வாள். சுந்தரமும் அதேபோல் சொல்வார்.

அப்படி அவர் இல்லை என்கிற ஒரு நாள் வந்துவிடுமே என்ற கவலை. இவர்கள் இப்படிச் சொல்வதில் எதிரொலிக்காமல் இல்லை. அவருக்கே கூட அந்தக் கவலை மனசரித்துக் கொண்டுதான் இருக்கிறது. வயது மூப்பின் தடுமாற்றங்கள் அந்தக் கவலையை விசிறிவிட்டுக் கொண்டிருக்கின்றன.

**"எனக்குப் பின்னால நீங்க என் பேத்திய என்னத்த கவனிக்கப் போறீங்க..."**

அதுவும், மயிலாள் எந்த நாளிலும் வயதுக்கு வந்துவிடுவாள். அப்புறம்? அதற்கேற்ற உடல் வளர்ச்சிகள்... உபாதைகள், பரமேஸ்வரி தன் மனதை அழுத்திக் கொண்டிருந்ததை சுந்தரத்திடம் சொன்னாள்... ''பொறுக்கிப் பசங்களை நினைச்சாதான் பயமா இருக்கு... இப்பவே மயிலாவ அவனுக பார்க்குற பார்வை சரியில்லை. வயசுக்கு வேற வந்துட்டான்னா அவனுக மனசாட்சியே இல்லாம நடந்துக்கிடுவானுங்க.''


''சினிமா... சீரியல்னு பார்த்துட்டு மனசைக் குழப்பிக்காதே'' என்று சொன்னானே தவிர சுந்தரத்தையும் அந்தக் கவலை தொற்றமாலில்லை.

''ஏம்பா சுந்தரு..... மனவளர்ச்சி இல்லாதவர்களுக்குன்னு ஹோம் ஏதாவது இருக்கான்னு விசாரிக்கலாம்ல...?'' மாயவீரன்தான் இந்த ஆலோசனையைச் சொன்னார். கலங்கிய கண்களுடன் அவர் இதைச் சொன்னபோது அவருடைய முகத் தோற்றத்திலிருந்து மன ஓட்டத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை. எனக்குப் பின்னால நீங்க என் பேத்திய என்னத்த கவனிக்கப் போறீங்க... என அவர் கேட்பது போலவும் இருந்தது. தாத்தாவின் கைவிரல்களை மடிப்பதும் விரிப்பதுமாக முனைப்புடன் இருந்த மயிலாளுக்கு அவர் சொன்னதன் பொருள் கொஞ்சமாவது புரிந்திருக்குமா?

**வி**டிந்தும் விடியாத பொழுதில், பழகிப் போன அவளுடைய குறட்டைச் சத்தம் நீண்டநேரம் கேட்காதது செவியில் உறைத்தவராகத் திரும்பிப் பார்த்தார் மாயவீரன் தாத்தா. மயிலாள் கால்களை மடக்கி ஒருக்களித்துப் படுத்திருந்தாள். கோலம் போட, காபி போட என்று எழுந்துவிட்ட பரமேஸ்வரியும் மயிலாள் படுத்திருந்த தோற்றத்தலிருந்த மாற்றத்தைக் கவனித்தவளாக, அடிவயிற்றில் ஓர் உதறல் உணர்வு உந்தித் தள்ள குனிந்து அவளைப் புரட்டினாள்.

பாவாடைப் பிசுபிசுப்பில் சிறுநீர், மலக் கசிவின் நாற்றமில்லை. அது என்னவெனப் புரிந்தவளாக, அருகில் அமர்ந்து தலையைத் திருப்பி 'மயிலா' என்றாள். அவள் கண் திறக்கவில்லை.

பரமேஸ்வரி வெடித்து அழுதாள். சுந்தரம் ஓடி வந்தான். தகவல் பரவி அண்டை வீட்டார், சொந்தக்காரர்கள் சூழ்ந்து கொண்டார்கள். தனியாக வாசலில் கிடந்த பிளாஸ்டிக் நாற்காலியில் மடங்கி உட்கார்ந்து இருமலின் துணையோடு பார்த்துக் கொண்டிருந்தார் மாயவீரன். ○



''நான் க.தி.க.வில் இருந்தபோதும், க.ஜ.பா.வில் இருந்தபோதும், த.க.மு.மு.வில் இருந்தபோதும் கட்சித் தாவலை வன்மையாக எதிர்த்திருக்கிறேன் என்பதைத் தங்கள் கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறேன்...

- எம்.அசோக்ராஜா

கல்கி
நிறுவன வெளியீடு
தரம் நிரந்தரம்

# உங்கள் ஊரில் கல்கி

கல்கி நிறுவனத்திலிருந்து மதிப்பு மிக்க வாசகர்களாகிய உங்களைச் சந்திக்க உங்கள் ஊருக்கே வருகிறது கல்கி ஆசிரியர் குழு. இந்தச் சந்திப்பில் நீங்கள் உங்கள் குடும்பத்தோடு அவசியம் கலந்துகொண்டு, 'கல்கி' வார இதழைப் பற்றிய உங்களுடைய மேலான யோசனைகளையும் கருத்துகளையும் பரிமாறி, ஆக்கபூர்வமான யோசனைகளின் மூலம் கல்கி இதழை மேலும் மிளிரச் செய்ய உதவ வேண்டுகிறோம்.

இதயத்தை இதமாக்கும் 'கலகல' நிகழ்ச்சிகளும், இன்ப அதிர்ச்சியூட்டும் பரிசுப் போட்டிகளும் உண்டு. அவசியம் கலந்துப்பீங்கதானே!

- ஆசிரியர் குழு

## வாசகர் சந்திப்பு

**சனிக்கிழமை - 23.06.07**
**கும்பகோணம்**


இடம்: ஹோட்டல் வெங்கட்டரமணா (மாடி),
டி.எஸ்.ஆர். பெரிய தெரு,
காந்தி பார்க் அருகில்
நேரம்: மாலை 4.25

**ஞாயிற்றுக்கிழமை - 24.06.07**
**திருச்சி**

இடம்: ஹோட்டல் அஜந்தா,
மத்தியப் பேருந்து நிலையம் அருகில்
நேரம்: மாலை 4.25

## உங்களைத் தேடி





# ரா. பார்த்திபன்

## ஜிகினா 11

*கிழக்கின் விளக்கே*
*கலங்கரை விளக்கமே*

*என் திக்கே*
*நான் மறையே - இன்று*
*எண்பத்து நான்கே*
*உம்மைவிட உயர்ந்தவன் நானே!*

*டாக்டர் கலைஞரை*
*பார் மட்டுமே அறியும் - ஆனால்*
*பார்த்திபனை*
*நீரே அறிவீரே! எனவே அக்*
*கர்வத்துடன்*
*கௌரவத்துடன்*
*வாழ்த்துகிறேன் - இன்னும்*
*16-ம் பெற்று பெரு வாழ்வு வாழ்க!*

படுக்கை அருகில் - படிக்கும் விளக்கின் தொப்பியில் மேற்படி கவிதையை எழுதி எடுத்துக்கொண்டு, முதல்வரை சந்திக்கச் சென்றேன்.

இப்படி ஏதாவது தப்பித் தவறி, நான் எழுதித் தொலைத்துவிட்டால், அதைக் கண்டவரிடமெல்லாம் காட்டி கருத்துக் கேட்க விரும்புவேன். ''அவருக்கு இப்ப 84, + அந்த 16ம் பெற்று... புதுப் பொருளோட இருக்கு'' - 100 சதவிகிதம் நல்லாயிருக்கு!'' - இப்படி நாலு + 1 பேராவது சொல்லிவிட வேண்டும். சில வேளைகளில் யாராவது சுட்டிக் காட்டுவதால், இயற்றிய தவறை இயன்றவரை சரி செய்துகொள்ள வேண்டும். இப்படி எனக்கு ஆதங்கம் அதிகம். நாம் எழுதியதை படித்துப் பார்த்து, ஒவ்வொரு para- வுக்கும், ஒரு பாராட்டுக் கூட்டம் நடத்த மனம் பரபரக்கிறதோ? இது அற்பத்தனமோ? பொதுவாக, அடுத்தவரிடம் கேட்பதை விட, தன்னிடமே ஒருவன் கேட்கும் கேள்விகள் ஏராளம்.

*கடல் கம்பளியால்*
*இழுத்துப் போர்த்திக்கொண்டு*

உறங்கும் சூரியனுக்கே, சுடச்சுட Sunrise காபி கொடுத்து எழுப்பி விடும் சேவல் மார்க் அலாரம் - கலைஞர்! அவருக்காகக் காத்திருக்கும் நேரம்கூட சுவாரஸியம். கவியில் பேரரசாக விளங்குபவரும் என்னுடைய அன்றாட ஆச்சர்யம்தான்! அன்று எந்தப் பாட்டைக் கேட்டாலும்- கேட்காமலே சொல்லலாம் - இது வைரமுத்து வரிகள் என்று. ஆனால் இன்று பாடல் எழுதுபவர்களில், பாதிக்கும் மேற்பட்டவர்கள் அவரது பாடல் வரிகளால் பாதிக்கப்பட்டவர்கள். தன் கூரிய விழிகளால் தான் கண்ணுறும் காட்சிகளைக் கூறு போட்டு, தன்மைக்கேற்று புதிய வரிகள் போடும் பொருள் + ஆதார நிபுணர் அவர். கடந்த சில ஆண்டுகளாக தேசிய விருதுக்கு வடிவம் கொடுக்கும்போதே வைரமுத்துவின் பெயரும் கொடுக்கப் படுவது வாடிக்கையாகிவிட்டது. அவரது நண்பராக இருப்பதில் எனக்குக் கர்வமுண்டு. என் பக்கத்தில் இருந்த பெரியவரை அறிமுகப் படுத்தினார், 'இந்திய அளவில் சிமெண்ட் தயாரிப்பில் முக்கியமானவர்' என்று

சினிமா தியேட்டரில் பாட்டுப்புத்தகங்கள் விற்பவர்களைக்கூட எனக்கு அறிமுகம் உண்டு. ஆனால், இந்த லட்ச அதிபதிகளின் கோடி ஈஸ்வரர்களின் அறிமுகம் எனக்கு 'அரி(ய)முகமே! வைரமுத்து அவர்களுக்கு அழைப்பு வரவே, அவர் சென்ற பிறகு, அந்த முதிய தொழிலதிபர் என்னிடம் கேட்டார். ''வாலிங்கறது இவர் இல்லை இல்லேல்ல...? இவர் வைரமுத்து தானே!''

'ஐயையோ!' எனக்கும் பணம் படைத்தவர்களுக்கும் உள்ள தூரத்தைவிட, அவர்களுக்கும், கலைக்கும் உள்ள தூரம் விண்வெளிப் பயணம் போலும்.

முதல்வரின் நேர்முக உதவியாளர் திரு.சண்முகநாதன் என்னை நோக்கி வந்தார். அது எனக்கான அழைப்பென எழுந்து நின்றேன். என் கையில் சில பேப்பர்களைக் கொடுத்து,

''தலைவர் எழுதின கவிதை இது. நாளைய முரசொலியில் வருது உங்களைப் படிச்சுப் பார்த்து எப்படியிருக்குன்னு சொல்லச் சொன்னார்!'' - சொன்னார்!

ஆடிப் போனேன் நான்!

அந்த அறையில் குழுமியிருந்த பணம்-குணம்-திறன் கொண்டவர்கள், என்னை அண்ணாந்து பார்த்ததால், நான் அவர்களைக் குனிந்து பார்க்க

# கலைஞரின் மிரட்டல் டிரெய்லர்!

"எவ்வளவு சிறியவனானாலும் அவனிடமும் கருத்துக் கேட்கும் தன்மைதான், அவரின் உயரம் ஆட்டம் கொள்ளாமல் இருக்கவும், கோடிக்கணக்கான தமிழர்களை ஆட்கொள்ளவும் காரணமாயிருக்கிறதோ?"

வேண்டியது அர்த்தமுள்ளதாகியிருந்தது. அந்தக் கவிதைப் பக்கத்தை வாசிப்பதைவிட, என் பக்கத்திலிருப்பவர்கள் என்னை வாசிப்பதை நான் ஓரக் கண்ணால் கண்டு பெருமை கொண்டேன். இருக்காதா பின்னே?

அவரோ சிற்பக் கலைஞர்.

ஆனால், நானோ அம்மிக் கல்லில் கொத்தும் கலைஞன். என்னிடம் கொடுத்துப் படிக்கச் சொன்னால்...?

நான் அவ்வளவு சிறந்தவன் என அர்த்தமல்ல. எவ்வளவு சிறியவனானாலும் அவனிடமும் கருத்துக் கேட்கும் தன்மைதான், அவரின் உயரம் ஆட்டம் கொள்ளாமல் இருக்கவும், கோடிக்கணக்கான தமிழர்களை ஆட்கொள்ளவும் காரணமாயிருக்கிறதோ?

'ஒரு கோடி கழகக் கண்மணிகளும் ஓர் உருவில் வந்து வாழ்த்தலாகாதோ?'

- இதுதான் அவர் கொடுத்திருந்த தலைப்பு.

அவர் அதிகாலை எழுவதிலிருந்து இந்த எழுபது வருட எழுத்துக்களை மீறி, அவரது பேனாவில் வேண்டுமானால் மை மிச்சமாகயிருக்கலாம். புதிய எண்ணங்கள் கூடவா?

அவரிடமுள்ள சிறந்த ஒரு குணம் என்னிடமும் இருப்பது...எழுதியதை 'ஆஃபீஸ் பாயிடம்கூட படித்துக் காட்டுவது... மகிழ்ச்சி!

ஒரு முதல்வரைச் சந்திக்க வாய்ப்பு கிடைப்பது எவ்வளவு அரிது! அதிலும், தன்னைச் சந்திக்க வருபவர்களை முன் கூட்டியே இனம் பிரித்து, தன்னைச் சந்திக்குமுன், அவரவர்களுக்கான துறையில் ஒரு டிரெய்லர் போட்டுக் காட்டி மிரட்டிய பின் அழைப்பு விடுப்பது எவ்வளவு பெருங்கலை... அதனால்தான் அவர் பெருங்கலைஞர்!

அடுத்து எனக்கும் அவரைச் சந்திக்க அழைப்பு வந்தது. எனக்கென்னவோ அவரைப் போய் சந்திப்பதே அவசியமற்றதாகப்பட்டது. இப்போது, கடலில் குதித்து முத்துக் குளிக்க ஆசைப்பட்டவனுக்கு, கரையிலேயே, கால்கள் அலை தொடும் போதே கைகள் நிறைய முத்துக்குவியல் கிடைத்ததைப் போன்றே அக் கவிதைத் தான் எனக்குப் பட்டது.

அடுத்து அடுத்து எனத் தவ்வி... ஓடி... படியேறி மூச்சிரைக்காமல்.

அந்தந்த க்ஷணத்தில் நின்று, அமர்ந்து, உணர்ந்து, மலர்ந்து, தங்கிப் பார்த்தால், அத்தனையும் அற்புதமே!

**(மின்னும்)**



## நீங்கள் கேட்டவை த ரா சு

# 'அன்புத் தோழி'க்கு ஆபத்து வந்துள்ளதே!

**1. உமரி பொ.கணேசன், மும்பை - 37**

*? ஜெயலலிதாவின் எம்.எல்.ஏ. பதவி பறிக்கப்படுமா?*

! கொடநாடு பங்களா விவகாரத்தைத் தொடர்ந்து, அந்தச் சொத்து விவரம் தேர்தலுக்கு முன் அவரால் அறிவிக்கப்பட வில்லை என்பது தெரிய வந்துள்ளது. இதற்காக அவரது எம்.எல்.ஏ. பதவியைப் பறிக்க முடியாது என்பது சட்ட வல்லு னர்களின் கருத்து. ஆனால், மக்கள் மனத்தில் ஜெ.இமேஜ் மேலும் ஓர் அடி வாங்கியிருப்பதை மறுக்க முடியாது.

**2. ஆர்.சந்திரசேகர், குளித்தலை**

*? பத்திரிகைகள் இலவசம் தருவது நல்ல முன்னேற்றம் இல்லை என்று முன்பு ஒரு தடவை கூறிவிட்டு, இப்போது கல்கியே இணைப்புகளையும் 'டை' போன்ற இல வசங்களையும் தருவது மட்டும் சரியா?*

! இலவசங்களுக்காகப் பத்திரிகைகள் வாங்கப்படும் போக்கைத்தான் கண்டித் தேன். வழங்கப்படும் இலவசங்களின் மதிப்பு பத்திரிகையின் விலையைக் காட்டிலும் பல மடங்கு அதிகமாக இருக் கும்போதுதான் இப்படி நடக்கிறது.



✱ பிரார்த்தனையுடன் வெல்கம்!

**3. மு.செந்தில்குமார், திருச்சி - 102**

*? இருபத்தோராம் நூற்றாண்டிலும் மனிதக் கழிவை மனிதனே அகற்றும் கொடுமை நிகழ்கிறதே?*

! அக்கொடுமையை வேரோடு அறுக்கும் வகையில் போர்க்காலத் திட்டம் வகுப் பதற்கு ஒரு கமிட்டி போடும்படி கம்யூனிஸ்ட் கட்சிக்காரங்க கேட்டாச்சு... எப்படியும் இருபத்திரண்டாம் நூற்றாண்டுக் குள்ள எல்லாம் சரியாயிடும்னு எதிர்பார்க் கலாமுங்க. அப்படியும் நடக்கலைன்னா இன்னொரு கமிட்டி போடுவாங்க.

**4. B.கார்த்திகேயன், சென்னை - 15**

*? கூட்டுறவு சங்கத் தேர்தலைப் புறக் கணிக்கும் அ.தி.மு.க.*



✱ சென்஑ார் பிடியில்...!

❑ ரூ.100/- பரிசுபெறுபவர்:
தி.வி.கிருஷ்ணமூர்த்தி,
மும்பை

★ ரூ.50/- பரிசுபெறுபவர்:
மீனா ரங்கநாதன்,
சென்னை -33

***மதுரை இடைத்தேர்தலில் போட்டியிடுவது முரணாக உள்ளதே?***

! வெற்றி வாய்ப்புகளை எடைபோட்டு கோதாவில் இறங்குவது முரண்பாடு அல்ல; சாணக்கியம்.

**5. எஸ்.கருணையானந்தம், உசிலம்பட்டி**

***? சில்லறை வணிகத்தில் பெரும் நிறுவனங்கள் நுழைவது பற்றித் தங்கள் கருத்து என்ன..?***

! கே மார்ட்போன்ற அந்நிய நிறுவனங்கள் நுழைவதைக் கட்டுப்படுத்த முடியாதபடி பொருளாதாரக் கொள்கை தாராளமயமாக்கப்பட்டுவிட்டது. உடனே உள்நாட்டு நிறுவனங்களும் அந்தச் சந்தை வாய்ப்பைக் கண்டு இந்தப் பிசினஸில் இறங்குகின்றன. இந்நிலையில் எளிய சில்லறை வியாபாரிகளுக்கு மாற்றுத் தொழில் மார்க்கங்களை உருவாக்கித் தருவது அரசின் பொறுப்பு மற்றும் கடமை.

**6. க.நா.இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்**

***? தோற்றவர்கள் ஒன்று சேர்ந்து அமைத்திருப்பதுதானே மூன்றாவது அணி... இது மட்டும் ஜெயிக்கவா போகிறது..?***

! ஜெயிக்காவிட்டாலும் வாக்குகளைப் பிரிப்பதன் மூலம் அச்சுறுத்தலாகத் திகழ முடியும்.

**7.ஆர்.மாதவராமன், கிருஷ்ணகிரி**

***? சென்னையில் விதிமுறைகளை மீறி கட்டப்பட்ட 75,000 கட்டிடங்களை இடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளதாமே?***

! 75,000 கட்டிடங்களை இடிப்பதற்குப் பதிலாகப் பணத்தை வாங்கிக் கொண்டு அவற்றை 'அனுமதித்துவிட' அரசு நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளது. இது ஊழலை நியாயப்படுத்தும் பிரும்மாண்ட ஊழல் என்று சுட்டிக் காட்டிய ஒரே அரசியல்வாதி ராமதாஸ்.

# வாசகதராசுகளே!

**வாசக தராசுகளே!**

இவ்வார பதில்களுள் 'பளிச்' எது? அஞ்சலட்டையில் அதன் எண்ணைக் குறிப்பிட்டு வாக்களித்து, 23.6.07 தேதிக்குள் கிடைக்கும்படி எங்களுக்கு அனுப்புங்கள். முகவரி பகுதியில் 'வாசக தராசு - 24.6.07 என்று தவறாமல் எழுதுங்கள். மெஜாரிடி பெறும் பதிலைத் தேர்வு செய்தோருள் ஒருவருக்கு, குலுக்கல் முறையில் ரூ.100/- பரிசு. (ஆசிரியர் தீர்ப்பே இறுதி)

3.6.07 இதழில் இடம்பெற்ற 'வாசக தராசு' போட்டியில் பரிசு பெறும் பதில் எண் : 8

பரிசு பெறும் வாசகர்:
கே.அகிலாண்டேசுவரி,
மதுரை - 7

8.ரேவதிப்ரியன், ஈரோடு

? ஈராக் மக்களுடன் ஒன்று சேர்ந்து கொண்டு அமெரிக்காவை நாம் எதிர்க்க வேண்டும் என்கிறாரே எம்.பி.கனிமொழி?

! ஒரு வேளை கருணாநிதி அவரை வருங் கால அயலுறவுத்துறை அமைச்சராக்கத் தீர்மானித்துள்ளாரோ என்னவோ!

9. மீனா ரங்கநாதன், சென்னை - 33 ★

? பல சரக்கு, காய்கறிக் கடைகளில் இல்லாத அளவு கூட்டம் நகைக் கடைகளிலும், பட்டுப்புடைவைக் கடைகளிலும் அலை மோதுகிறதே? மக்களிடம் ஏது இவ்வளவு பணம்?

! கறுப்புப் பணத்தைக் கரைக்கிறார்கள்.

10. தி.வி.கிருஷ்ணமூர்த்தி, மும்பை. ❒

? உலகிலேயே மிக அதிகமான அளவு போர்த் தளவாடங்களை இறக்குமதி செய்யும் நாடு இந்தியாதான் - இது பற்றி..?

! பெரிய நிலப்பரப்பு. அண்டை நாடு களுடன் உரசல், பயங்கரவாத அச்சுறுத்தல் என்று இதற்குப் பல காரணங்கள். ஆனால், இது பொருளாதாரத்தை பாதிக்கும். நல்லுறவுகளை வளர்த்துக் கொண்டு, ஆயுதச் செலவுகளைக் குறைப்பதே அறிவு டைமை.

11. எச்.ஆன்டனி தமிழரசன், மும்பை-17

? 'அன்புத் தோழி' படத்தில் விடுதலைப்புலி தோற்றத்தில் திருமாவளவன் வருவதாகச் சுட்டிக் காட்டி தணிக்கைக் குழு தடை விதித்திருக்கிறதே - சரியா..?

! விடுதலைப் புலிகளை ஆதரிப்பது போல் காட்சிகள் இருப்பதால் தணிக்கைக் குழு 'அன்புத் தோழி'யிடம் இறுக்கத்தைக் காட்டியிருப்பது முற்றிலும் சரியே. படம் இப்போது மத்திய குழுவின் பார்வைக்குச் சென்றிருக்கிறது. அவர்கள் சொதப்பிவிடா மல் இருக்க வேண்டும்.

12. ஜோ.பன்னீர்செல்வம், சென்னை - 12

? கர்நாடக மாநில கழிப்பறை ஒன்றில் ஆண் கள் பகுதியைக் குறிக்க மகாகவி பாரதி யாரின் படத்தை வரைந்து வைத்துள்ளது திட்டமிட்ட செயலா? கர்நாடகா வருத்தம் தெரிவிக்குமா?

! அறியாமை காரணமான செயலானாலும், திட்டமிட்ட அவமானமானாலும் நடந்த தவறுக்கு வருத்தம் தெரிவிப்பதே முறை. தமிழக அரசு வன்மையாகக் கண்டனக் குரல் எழுப்பினால்தான் இது நடக்கும்.

13. வசீகரன், தேனாம்பேட்டை

? கொழும்புவிலிருந்து தமிழர்களை துப்பாக்கி முனையில் கட்டாயமாக வெளி யேற்றும் இலங்கை அரசுக்கு 'இறை யாண்மை' இருக்கிறது என்கிறீர்களா?

! நிச்சயமாக இல்லை. ஏதோ ஒரு வக்கிர உள்ளத்தின் அடாவடித்தனம் செயல்பட்டி ருக்கிறது. நீதிமன்றம் தடை விதிக்க, இலங்கை அரசும் வருத்தம் தெரிவித் துள்ளது. இம்மாதிரியான செயல்கள்தாம் விடுதலைப்புலிகளின் கரங்களைப் பலப் படுத்துகின்றன. புலிகளை வெல்ல முக்கியமான ஆயுதம் இலங்கையில் வாழும் அனைத்துத் தமிழர்களுக்கும் சிங்களரைப் போல சம உரிமைகள் தந்து மதிப்பதுதான்.



✱ விழும் இமேஜ்!

14. லெ.நா.சிவகுமார், சென்னை -33

? விண்வெளியிலிருந்து பூமிக்குத் திரும்பும் சுனிதா வில்லியம்ஸை வர வேற்கலாமா?

! சாதாரணமாக வரவேற்றால் போதாது; அவர் திரும்பி வரப் போகிற விண் ஓடத்தில் ஏற் பட்டுள்ள சிறிய பாதிப்புகளால் ஆபத்து ஏதும் இன்றித் திரும்பி வரவேண்டும் என்ற பிரார்த்தனையுடன் வரவேற்க வேண் டும்.



✱ டபுள் புரமோஷன்?!



✱ லோன்லி குரல்!

**பா**ர்ப்பதற்கு சாஃப்ட்வேர் ஆசாமி போல இருக்கிறார் இயக்குநர் ராதாமோகன். அழகிய தீயே, பொன்னியின் செல்வன், மொழி என தொடர்ந்து மென்மையான படங்களின் மூலம் திரையுலகில் தன் அஸ்திவாரத்தை ஆழப்படுத்தியிருக்கிறார். அவரோடு நாம் பேசினோம்...

**அடிதடி வெட்டுக் குத்துன்னு வந்து ஜெயிக்கிற காலத்துல நீங்க மட்டும் சாஃப்டான கதைகளைத் தேர்ந்தெடுக்குறீங்களே...**

''அடிதடி, வெட்டுக் குத்து, காதல் எது எடுத்தாலும் மக்கள் குடும்பத்தோடு வந்து ரசிச்சி, என்ஜாய் பண்ற படமா இருந்தா அந்தப் படம் கண்டிப்பா வெற்றிப் படமா அமையும். என்னோட படம் மற்ற படங்களைவிட தனித்து நிக்கணும்னு நினைக்கிறேன். சார்லி சாப்ளின், பாலுமகேந்திரா, கமல்ஹாசன் இவங்கள மாதிரி படம் பண்ணணும்னு ஆசைப்படுறேன். அதுமாதிரிதான் என்னோட கதையைத் தேர்ந்தெடுத்து இயக்குகிறேன்.''

**பெரிய ஹீரோக்களை நம்பாமல் கதையை மட்டும் நம்புவது எந்த தைரியத்தில்?**

''பெரிய ஹீரோவுக்குன்னு ஒரு இமேஜ் இருக்கு. அத நாம கெடுத்திடக்கூடாது. ஹீரோக்களை நம்பறதைவிட கதையை நம்பிப் படம் எடுத்தாத்தான் இயக்குனரா மக்கள் மத்தியில பேசப்படுவோம். என்னைக்குமே கதையை நம்பிப் பயணம் செய்வதுதான் புத்திசாலித்தனம். பெரிய ஹீரோவுக்குப் படம் பண்ணும்போது ரொம்ப கவனமா இருக்கணும். தவறான செய்தியைக் கொடுத்திடக் கூடாது. அது ஆபத்தாயிடும். நான் பெரிய ஹீரோவுக்குப் படம் பண்ணும்போது என்னோட கதைக்குள்ளதான் ஹீரோவைப் பாப்பேன்.''

**ரஜினி கால்ஷீட் கொடுத்தாலும் இப்படித்தான் படம் எடுப்பீங்களா?**

''ரஜினி சார் படம் பண்றது பெரிய விஷயம். அவருக்குன்னு தனி ஸ்டைல் இருக்கு. அவரோட சின்னச் சின்ன வசனம்கூட பெரிய அளவுல பேசப்படும். நான் வளர்ந்து வரும் இயக்குனர். ரஜினி சாரை வச்சிப் படம் பண்றதை பற்றி யோசிக்கவே இல்லை. அப்படி ஒரு வாய்ப்புக் கிடைச்சா



அது என் வாழ்க்கையில மிகப்பெரிய பாக்கியமாக நினைக்கிறேன்.''

**ஒரு நல்ல சினிமாவுக்கு இலக்கணம் என்ன?**

''படத்தை பார்க்க வரக்கூடிய ஆடியன்ஸை இரண்டரை மணி நேரம் திருப்திபடுத்தணும். அவங்களோட வாழ்க்கையை ஒட்டிய சம்பவமா இருந்தா அதுவே பெரிய வெற்றி. தரமான படம்தான் நல்ல சினிமாவோட இலக்கணம்னு நான் நினைக்கிறேன்.''



**"பிரகாஷ்ராஜ் ஓர் ஆலமரம் மாதிரி. நாங்களெல்லாம் அதில் கூடு கட்டிக்கொள்ளும் பறவைகள்"**

**பிரகாஷ்ராஜ் கம்பெனிக்கு நீங்கதான் ஆஸ்தான டைரக்டராமே...?**

''பிரகாஷ்ராஜ் என்னோட நண்பர். நல்ல வழிகாட்டி. என்னை அவர் நம்புறார். எனக்கும் அவருக்கும் சினிமா பற்றிய பார்வை ஒரே மாதிரியா இருக்கும். அவர் கதையை மட்டும் நம்பிப் படம் எடுக்கக் கூடியவர். டூயட் மூவீஸ் எங்க கம்பெனி மாதிரி. அதுல யார் படம் செய்தாலும் நானும் விஜியும் இருப்போம். என்னோட அடுத்த படமும் டூயட் மூவிஸுக்குத்தான். விஜியும் டூயட் மூவிஸுக்கு ஒரு படம் பண்றார். பிரகாஷ்ராஜ், நான் உதவி இயக்குனரா இருக்கும்போதே எனக்கு நிறைய உதவி செய்திருக்காரு. இன்னமும் செஞ்சிக்கிட்டு இருக்காரு. அவர் ஓர் ஆலமரம் மாதிரி. நாங்களெல்லாம் அதில் கூடு கட்டிக் கொண்ட பறவைகள்!''

**நீங்க பிரகாஷ்ராஜ் கம்பெனிக்குப் பண்ற படம் மட்டும் ஹிட் ஆகுது. மற்ற கம்பெனிக்கு பண்ற படம் அவ்வளவா போறதில்லையே, ஏன்?**

''அப்படியெல்லாம் கிடையாதுங்க. பிரகாஷ்ராஜ்கிட்ட படம் பண்ணும்போது நிறைய சுதந்திரம் இருக்கு. பொறுமையா யோசிக்க டைம் இருக்கு. மற்ற கம்பெனியில அப்படி இல்லை. அவங்க நிறைய கமர்ஷியல் கேட்கிறாங்க.''

**- ஆ.முத்துராமலிங்கம்**

படம் : **பொள்ளாச்சி சுந்தரம்**

# ஹீரோக்களைவிட கதையே முக்கியம்!



சிரி
சிந்தி
செயல்படு!
சுகாதாரம் இவன் எதிரி;
சுத்தம் இவன் பகைவன்!
ஜூன் முதல்....!
சிக்குன் குன்யா
ரிட்டர்ன்ஸ்
நீங்கள் நினைத்தால் தடை செய்யலாம்!
கருத்து: யுவா படம்: பிள்ளை

PC இருந்தால் சமையல் EC தான்!



# கல்கி

குடும்பத்துடன் படிக்க...

24.6.2007 இணைப்பு















**PC இருந்தால் சமையல் EC தான்!**



**'காயம் இது உண்மை தானுங்கோ... அண்ணாச்சி. உடல்நலத்துக்கு உகந்ததுங்கோ... அண்ணாச்சி. பெருங்காயம் இது உண்மைதானுங்கோ... அண்ணாச்சி!'** என்று பெருங்காய வாசனைக்குள் மிதந்து வந்தது பாடலொன்று. இப்படிப் பட்ட பெருங்காயம் எப்படி விளைகிறது?

இது ஒரு வகையான மூலிகைத் தாவரம். ஆப்கானிஸ்தான் மற்றும் ஈரான் போன்ற நாடுகளில் பனி படர்ந்த மலைப் பிரதேசங்களின் நிலப்பகுதிகளில் பெருங்காய மரங்கள் வளர்கின்றன. கடல் மட்டத்திலிருந்து 2000 - 4000 அடி உயர மலைப் பகுதிகளில் பயிராகிறது.

ஆப்கானிஸ்தானிலிருந்து வருவது காபூல் காயம்.

# பெருங்காயம் என்பது...



ஈரானிலிருந்து வருவது ஈரான் காயம். அங்கிருந்து நமக்கு வருபவற்றை நாம் அப்படியே நேரிடையாகச் சமையலில் பயன்படுத்திக் கொள்ள முடியாது; பயன்படுத்தவும் கூடாது. ஏனெனில், அவற்றில் சமச்சீரான ருசி மற்றும் வாசனை இருப்பதில்லையாம். மாறாக, அவற்றில் சில சமயங்களில் காரம் வெகு அதிகமாகவோ வாசனை மிகவும் தாக்கலாகவோ வீசுமாம். சில சமயங்களில் அதிக அளவிலான கசப்புத் தன்மை அவற்றுள் கரைந்திருக்குமாம்.

**வரலாறு**

# கூட்டுப் பெருங்காயம் என்பது...

பெருங்காய மூலப்பொருளில் வெகு அதிக அளவில் இருக்கும் காரம், கசப்பு, வாசனை போன்றவற்றைக் குறைக்க கோதுமை அல்லது மைதா மாவு போன்றவற்றினை, கலப்புப் பொருளாகப் பயன்படுத்த வேண்டி வருகிறது. அத்துடன் சூடான், நைஜீரியா போன்ற நாடுகளிலிருந்து தருவிக்கப்படும் ஒரு வகையான கோந்து இப்பொருட்களுடன் கலக்கப்படுகிறது.

மிதமான வாசனை, மிதமான காரச் சுவை கொண்ட கூட்டுப் பெருங்காயமாக அது உருவாக்கப்படுகிறது. நாலைந்து விதமான வாசனைகளில் கூட்டுப் பெருங்காயம் கிடைக்கிறது.

தமிழகத்தில் கூட்டுப் பெருங்காயத் தயாரிப்பு மற்றும் விற்பனையில் முன்னணியில் இருந்து வருகிறது P.C. கூட்டுப் பெருங்காயம். Ferula Asafoetida எனப்படும் மூலிகை மரத்தின் வேர்ப்பகுதி முடிச்சுகளில் உற்பத்தியாகும் பிசினைப் பயன்படுத்தி, கூட்டுப் பெருங்காயம் தயாரித்து, பெருங்காய வணிகத்தில் வெற்றி அடைந்து வருகிறது மதுரை, P.C. பெருங்காயம்.



PC இருந்தால் சமையல் EC தான்!





# 3ந்தையின் தாரக மந்திரம்!

**தொ**ழில், வியாபாரம் என்கிற வெற்றி மாளிகைகளின் அஸ்திவாரங்களை இளம் வயதி லேயே எங்கள் மனக் கனவுகளில் உணர்வுடன் எழுப்பியவர் எனது தந்தையார்.

எங்களுக்குப் பூர்விகம் அருப்புக்கோட்டை. எங் களது சிறு பிராயத்திலே மதுரைக்கு வந்துவிட்டது எங்கள் குடும்பம். எங்கள் தந்தை அமரர் பெ.செல்லம் அவர்கள் கடின உழைப்பாளி.

பெருங்காயம் தயாரிக்கும் நிறுவனம் ஒன்றில் வேலைக்குச் சேர்ந்து, தயாரிப்பு மற்றும் மார்க் கெட்டில் கனிவுகளை அங்கு கற்றுக் கொண்டார். பிறகு தம்முடைய சேமிப்புப் பணத்தில் மதுரை வெண்கலக்கடைத் தெருவில் பத்துக்குப் பத்து அறையொன்றினை வாடகைக்கு எடுத்து அங்கி ருந்து மதுரை மாநகர், மாவட் டம் எனப் பல பகுதிகளில் பெருங்காய வியாபாரத்தைத் துவக்கினார். அன்று நான்கு நபர்களை வேலைக்கு வைத் துக் கொண்டு, துவங்கியது

**பி.சி.ஜம்புலிங்கம்**
நிர்வாகப் பங்குதாரர்



Success Story

* P.C.ஜம்புலிங்கம்



**“குறைந்த இலாபத்துடன் அதிக எண்ணிக்கை வாடிக்கையாளர்களைக் கொண்டிருப்பதே எங்கள் சிறப்பம்சம்!”**

* P.C.ராஜசேகரன்



P.C. கூட்டுப் பெருங்காயம். இன்று நாற்பது பேர் நேரடித் தயாரிப்பிலும், சுமார் இருபது பேர் மார்க்கெட்டிங் பிரிவிலும் பணி புரிந்து வருகின்றனர்.

1956ல் துவங்கப்பட்டது P.C.பெருங்காய நிறுவனம். எனக்கு அப்போது வயது பதின்மூன்று. தம்முடைய கடின உழைப்பினால் தொழிலில் ஏறுமுகம் கண்டு கொண்டேயிருந்தார் எங்கள் தந்தை. எட்டாம் வகுப்பு படித்த பின்னர், வியாபாரத்தின்மீது ஏற்பட்டிருந்த ஈடுபாட்டினால் நானும் கடையில் வந்தமர்ந்து வேலை செய்யத் துவங்கினேன். அடுத்து, வரிசையாக என் சகோதரர்களும் இதில் முனைந்து பணிபுரிய வந்துவிட்டனர். வீட்டில் வைத்து குடும்பத்துப் பெண்களும், ஆண்களுமாக பெருங்காயம் தயாரிப்பது, வெண்கலக் கடைத் தெரு கடையில் வைத்து வியாபாரம் செய்வது என முற்றிலுமாக அது ஒரு குடும்பத் தொழிலாக மாறிப் போனது.

**சை**க்கிளில் சரக்கை வைத்துக் கட்டிக் கொண்டு தினசரி நாற்பது கி.மீ. தூரம் என மதுரை மாவட்டம் முழுவதும் சைக்கிள் மிதித்துச் சென்று வியாபாரம் செய்து வருவார் எங்கள் தந்தை. அன்று சைக்கிளில் துவங்கிய சிறு வியாபாரம்; இன்று ஆறு, ஏழு மினி டோர் வேன்களில் சரக்குகள் சுமந்து தமிழகம் முழுவதுமாக இயங்கி வருகிறது. அன்று பத்துக்குப் பத்து அறைக்குள் (தற்போதும் அந்தக் கடை இருந்து வருகிறது) ஆரம்பித்த தொழில், இன்று சுமார் பத்தாயிரம் சதுர அடி கட்டடத்தில் வளர்ச்சி பெற்று இயங்கி வருகிறது. எவ்விதம் நிகழ்ந்தது... இத்தனை வளர்ச்சி? அத்தனைக்கும் எங்கள் தந்தையின் தாரக மந்திரங்களே அடிப்படைக் காரணம்!

பெருங்காயம் தயாரிக்கும் இடம், பத்துக்குப் பத்து அறையாக இருந்தாலும், பத்தாயிரம் சதுர அடியில் பெரிய பரப்பளவாக இருந்தாலும் சரி, முதலில் அது தூய்மையானதாக இருக்க வேண்டும் என்பார் எங்கள் தந்தை. இந்தச் சுற்றுப்புறத் தூய்மையினை,



**“பெருங்காயம் தயாரிக்கும் இடம் பரப்பளவு எவ்வளவாக இருந்தாலும் முதலில் அது தூய்மையானதாக இருக்க வேண்டும்!”**



* P.C.மனோகரன்

* P.C.இளங்கோவன்


மதுரை முனிச் சாலை வீட்டிலிருந்து ஆரம்பித்து, இன்று பாண்டி கோயில் அருகே பெரிய கட்டடத்தில் வைத்து பெருங்காயம் தயாரித்து வருவது வரை கருமமே கண்ணாகக் காப்பாற்றி வருகிறோம்.

அவ்வளவு அக்கறை எடுத்துக் கொள்வார் எங்கள் தந்தை. தரத்தின் மீது சரக்கில் எந்தக் குறையும் நேர்ந்துவிடக் கூடாது. அதிக லாப நோக்கில் குறைந்த எண்ணிக்கை வாடிக்கையாளர்களைக் கொண்டிருப்பதைக் காட்டிலும், குறைந்த லாபத்துடன் அதிக எண்ணிக்கை வாடிக்கையாளர்களைக் கெண்டிருப்பதே எங்களுடைய முக்கிய நோக்கம். மூலப் பொருள் தட்டுப்பாடு மற்றும் உபரிப் பொருள் விலையேற்றத்தின்போதும்கூட கூட்டுப் பெருங்காயத்துக்கு அவ்வப்போது நாம் நிர்ணயிக்கும் விலை நியாயமானதாக இருத்தல் வேண்டும் என்று நேர்மையைப் போதித்தவர் எங்கள் தந்தை!

கடின உழைப்பாளியாகவும், நேர்மையான வணிகராகவும், குடும்பப் பற்றாளராகவும் வாழ்ந்து காட்டிய எங்கள் தந்தை பெ.செல்லம் அவர்கள் 1976ல் அமரத்துவம் அடைந்தார்கள்.

இன்று, தமிழகத்தில் எல்லாக் கிராமங்களிலும் P.C. பெருங்காயம் விற்பனைக்குக் கிடைக்கிறது. சென்னை, கொத்தவால்சாவடி ஆதியப்பன் தெருவில் மார்க்கெட்டிங் ஆபீஸ் இயங்கி வருகிறது. கேரளாவில் எல்லா மாவட்டங்களிலும் எங்கள் சரக்கு வினியோகிக்கப்படுகிறது. திருச்சூர் மாநகரில் இதற்கென ஒரு மார்க் கெட்டிங் ஆபீஸ் செயல்படுகிறது.

எங்கள் குடும்பத்தின் ஏழு ஆண்களில் மூத்த நபராகிய நான் (P.C. ஜம்புலிங்கம்), P.C.ராஜசேகரன், P.C. மனோகரன், P.C. இளங்கோ ஆகிய நான்கு சகோதரர்களும் P.C. பெருங்காயம் தயாரிப்புக் கம்பெனியில் நிர்வாகப் பங்குதாரர்களாகச் செயல்பட்டு வருகிறோம். எங்கள் தந்தையார் எங்களிடம் சொல்லிச் சென்ற தாரக மந்திரங்களை, அணையாத தீபங்களாகப் போற்றிப் பாதுகாத்து வருகிறோம்.



PC இருந்தால் சமையல் EC தான்!



# உப்புப் பணியாரம்!

**தேவையான பொருட்கள் :**

அரிசி - 400 கிராம்
உ. பருப்பு - 100 கி
பச்சை மிளகாய் - 3
P.C.பெருங்காயம் - சிட்டிகை
உப்பு - தேவைக்கேற்ப
கடுகு - 1 தேக்கரண்டி
எண்ணெய் - தாளிப்பதற்கு
கறிவேப்பிலை - 1 தழை
துருவிய தேங்காய் - 25 கி

**செய்முறை :**

★ உளுத்தம் பருப்பை 1 மணி நேரம் ஊறவைக்கவும்.

★ பச்சை மிளகாய், உப்பு, பெருங்காயம் ஒரு சிட்டிகை சேர்த்து நறநறவென அரைத்துக் கொள்ளவும்.

★ வாணலியில் எண்ணெயைச் சூடு செய்து கடுகு போடவும். பொரிந்தவுடன், தேங்காய் துருவலைச் சேர்த்து, அரைத்த உ.பருப்பை, அரிசியை போடவும். ஒரு கொத்து கறிவேப்பிலையைச் சேர்க்கவும்.

★ இதனை இட்லிப் பாத்திரத்தில் ஊற்றி ஆவியில் வேக வைக்கவும். வெந்த பிறகு எடுத்து சிறிது ஆறின பிறகு தனியாக எடுத்து வைக்கவும்.

# தேங்காய் சாம்பார்!

**தேவையான பொருட்கள் :**

துவரம் பருப்பு - 100 கிராம்
புளி - 20 கிராம்
வற்றல் மிளகாய் - 5 எண்ணிக்கை
மஞ்சள் தூள் - 1 சிட்டிகை
சாம்பார்ப் பொடி - 2 தேக்கரண்டி
கடுகு - 1/2 தேக்கரண்டி
வெந்தயம் - 1/2 தேக்கரண்டி
எண்ணெய் - 50 மி.லி.
உப்பு - தேவையான அளவு
வெங்காயம்/சாம்பார் வெங்காயம் - 75 கிராம்
தக்காளி - 50 கிராம்
P.C.பெருங்காயம் : 1 சிட்டிகை
துருவிய தேங்காய் - 50 கிராம்

**செய்முறை :**

பருப்பு, மஞ்சள் தூள் போட்டு மிருதுவாகும் வரை வேகவைக்கவும். ஒரு கப் நீரில் புளி, உப்பு சேர்க்கவும். துருவிய தேங்காயைச் சேர்க்கவும். வாணலியில் கடுகு, வெந்தயம், பெருங்காயம், வற்றல் மிளகாய் போடவும். கடுகு பொரிந்தவுடன் வெந்தயம் சிவந்தவுடன், வெங்காயத்தைப் போடவும். சிறிது பொன்னிறமானவுடன், நறுக்கிய தக்காளியைச் சேர்க்கவும். புளித்தண்ணீரைச் சேர்த்துச் சில நிமிடங்கள் கொதிக்க விடவும். துருவிய தேங்காயைச் சேர்க்கவும். வேக வைத்த பருப்பைச் சேர்த்துக் கொதிக்க விடவும். சாம்பார்ப் பொடியைச் சேர்த்து அடுப்பிலிருந்து இறக்கி விடவும்.







# கத்திரிக்காய்க் குழம்பு!

தேவையான பொருட்கள் :

துவரம் பருப்பு - 1½ கப்
வெங்காயம் - 8
கறிவேப்பிலை - 10
கத்திரிக்காய் - 3
கொத்துமல்லி - 1 கப்
கடுகு - 1 ஸ்பூன்
எண்ணெய் - 100 மி.லி.
உப்பு - தேவைக்கேற்ப
புளி - எலுமிச்சை அளவு
கறிவேப்பிலை - 1 கொத்து
மஞ்சள் தூள் - 1 தேக்கரண்டி
காய்ந்த மிளகாய் - 6
P.C.பெருங்காயம் - 1/4 டீஸ்பூன்
மிளகு - 8 (அரைத்த விழுது)
இலவங்கம் - 2
கடலைப் பருப்பு - 1 டீஸ்பூன்
உளுத்தம் பருப்பு - 1 டீஸ்பூன்

செய்முறை :

துவரம் பருப்பை 3 கப் நீரில் வேகவைத்து மசிக்கவும். அதில் கறிவேப்பிலை, வெங்காயம், உப்பு சேர்க்கவும். பருப்புடன் மற்ற மசாலாக்களைச் சேர்த்து வேகவைக்கவும். 5 - 7 நிமிடங்கள் சிறு தீயில் வேக வைக்கவும். இரண்டு கரண்டி எண்ணெய் சூடு செய்து, கடுகு பொரிந்தவுடன் கடலைப் பருப்பு, உளுத்தம்பருப்பு சேர்க்கவும். பருப்பில் மிளகு போடவும்.

# முறுக்கு!

தேவையான பொருட்கள் :

கடலைப் பருப்பு - 50 கி
பாசிப் பருப்பு - 50 கி
பச்சரிசி - 150 கி
உப்பு - தேவைக்கேற்ப
நெய் - 3 தேக்கரண்டி
P.C. பெருங்காயம் - 1/2 தேக்கரண்டி
சீரகம் - 1/2 தேக்கரண்டி

செய்முறை :

★ அரிசி பருப்புகளை எண்ணெய் சேர்க்காமல் தனித்தனியாகப் பொன் நிறமாக வறுத்து நைசாக அரைத்துக் கொள்ளவும்.

★ உப்பு, சீரகம், பெருங்காயம் ஆகிய வற்றைப் பொடி செய்து சிறிதளவு கலந்து மிருதுவான பேஸ்ட் போல் ஆக்கிக் கொள்ளவும்.

★ எண்ணெயை சூடு செய்து இந்த மாவைப் பயன்படுத்தி முறுக்குத் தட்டை உபயோகப்படுத்தி முறுக்கு செய்யவும்.



# பல்சுவை!

## PC இருந்தால் சமையல் EC தான்!



பெருங்காயக் கட்டிகள் வெட்டப்படுகின்றன!






விற்பனைக்குப் புறப்படுகிறது!



பெருங்காயத் தூள் தயாரிப்பு முறை இப்படித்தானா? தான்மா!



பிரித்து அடுக்கப்படுகிறது!





பேக்

# உற்பத்தி



PC இருந்தால் சமையல் EC தான்!



# கிடைக்கப் போகுது... ஐ.எஸ்.ஓ. தரச் சான்று!



TÜV SÜD South Asia

South Asia

TO WHOMSOEVER IT MAY CONCERN

This is to state that

P.C.COMPANY

Located at

6/244 A, Sivagangai Main Road, NearPandi Kovil Bus Stop,
Karuppayurani (P.O), Madurai - 625020,
Tamil Nadu, India

Based on the audit findings the company has been

"RECOMMENDED"

for

Certification to ISO 9001:2000 Standard

for the scope

"MANUFACTURE AND SUPPLY OF ASAFOETIDA"

for TÜV South Asia,

LEAD AUDITOR

✱ தரச் சான்றுக்கான பரிந்துரை

மதுரை - சிவகங்கை பிரதானச் சாலையில் பாண்டி கோயில் பேருந்து நிறுத்தம் அருகே P.C. பெருங்காயம் தயாரிக்கும் P.C. கம்பெனி சுமார் ஏழாயிரம் சதுர அடித் தரைத்தளக் கட்டடத்தில் அமைந்துள்ளது. மாடியில் மூலப் பொருட்கள் மற்றும் பெருங்காயப் பொடி போன்றவற்றை உலர்த்துவதற்கு, பரந்த திறந்தவெளி இடம் உள்ளது.

பெருங்காயத் தூள் அரைக்கும் அறை, பேக்கேஜ் ஹால், ஸ்டாக் ரூம் என கீழ்த்தளத்தின் மொத்தப் பகுதிகளும் அத்தனை சுத்தம்! கூட்டுப் பெருங்காயத் தயாரிப்பில் அதிக லாப நோக்கத்துக்காகக் கலப்படம் செய்யாதிருத்தல், சமையலில் பயன்படுத்த வேண்டும் என்பதற்காக மைதா மாவு, கோந்துப் பொருட்களை தேவைப்படும் அளவில் மட்டுமே மூலப் பொருளுடன் சேர்த்து கூட்டுப் பெருங்காயம் தயாரித்தல் போன்ற பிற காரணங்களுக்காகவும் P.C. பெருங்காயம் ஐ.எஸ்.ஓ. 9001 : 2000 தரச் சான்று இன்னும் ஓரிரு வாரங்களில் பெற இருக்கிறது.

தமிழகத்திலேயே ISO 9001 : 2000 தரச் சான்று பெறப்போகும் பெருங்காயத் தயாரிப்பின் முதல் நிறுவனம் P.C. கம்பெனி ஆகும்.

# இது என்ன மாயமோ... பெருங்காயமோ!

ருசி




**நா**ம் உண்ணும் உணவின் ருசிக்கு, பெருங்காயமும் ஒரு துணை ஆகும். ஆனால் இந்தத் துணைப் பொருளை உணவுத் தயாரிப்பில் சரியான விகிதத்தில் மட்டுமே சேர்க்க வேண்டும். உதாரணத்துக்கு, பருப்பு சாம்பாரில் பெருங்காயம் சேர்த்தால் அதன் டேஸ்ட்டே கொஞ்சம் தனியாக இருக்கும். பெருங்காயம் சேர்க்காவிட்டால், சாம்பாரின் ருசி மட்டுமல்ல, அதன் மணமும் சற்றுக் குறைவாகத்தான் இருக்கும். உணவுப் பொருளின் ருசியையும், மணத்தையும் பெருக்கி அனைவரையும் வசீகரிக்கச் செய்து விடுகிறது, கூட்டுப் பெருங்காயம்.

## ஏன் வேண்டும் பெருங்காயம்?

**உ**லகிலேயே பருப்பு - கிழங்கு வகைகளை உணவில் வெகு அதிகமாகச் சேர்த்துக் கொள்வது இந்தியர்கள்தான். அதிலும் தென்னிந்திய உணவு வகைகளில் இவற்றின் ஆதிக்கம் ரொம்பவே இருந்து வருகிறது. பலவித உடல் உபாதைகளுக்கு அடிப்படைக் காரணமாக அமைந்திருக்கும் வாயுவானது, பருப்பு - கிழங்கு வகைகளின் உடன் பிறந்த பங்காளி ஆகும். காய்கறிகளிலும் வாயுத் தன்மை உண்டு. எனவே பருப்பு, கிழங்கு மற்றும் காய்கறிகளை உணவுக்குப் பயன்படுத்தும் நேரத்தில், அவற்றின் வாயுத் தன்மைகளைக் குறைத்திடவும் - அகற்றிடவும் சமையலில் நாம் பெருங்காயத்தைச் சேர்த்தே ஆக வேண்டும். அதனால், வெல்க பெருங்காயம்! வாழ்க நம் வயிறு!!

## மலையாள தேசத்தில்...

**சை**வ உணவுச் சமையலில் மட்டுமே இடம் பிடித்திருந்த பெருங்காயம், கேரளாவில் அசைவ உணவுச் சமையலிலும் அங்கம் பிடித்துள்ளது. கேரளாவில் சைவ மற்றும் அசைவ உணவு வகைகளில் அவசியம் பெருங்காயம் சேர்க்கப்பட்டு வருகிறது. தமிழகத்தில் ஏனோ அசைவ உணவுச் சமையலில் இன்னும் இந்தப் பெருங்காயம் எட்டிப் பார்க்கவில்லை என்றே சொல்லப்படுகிறது.



## PC இருந்தால் சமையல் EC தான்!



**கா**யமே இது பொய்யடா! வெறும் காற்றடைத்த பையடா!' என்பது நம் தமிழ் மூதுரை. அந்தக் காற்றடைத்த பைக்குள் அஜீரணக் கோளாறு, வாயுப் பிடிப்பு, வயிறு உப்புசம் என்று பல்வேறு உடல் உபாதைகள். இந்தக் கோளாறுகளை நீக்கத் தரப்படும் சித்த - ஆயுர்வேத மருந்துகளில் பெருங்காயம் குறிப்பிட்ட அளவு சேர்க்கப் படுகிறது. 'பெருங்காயமே இது மெய்யடா! இடர் தரும் காற்றில்லாத ஹாய்யான பைய்யடா!' பாடத் தூண்டுவது இந்தக் கூட்டுப் பெருங்காயம்!

★ பெண்களுக்கு, கர்ப்ப காலங்களிலும் பிரசவத்துக்குப் பின்னும் தரப்பட்டு வரும் பிரசவ கால லேகியங்களில் பெருங்காயம் அவசியம் இடம் பெற்றிருக்கும்.

★ யானைகளுக்குத் தினசரி உணவில் சிறிதளவு பெருங்காயத் தூளும் கலந்து தரப்பட்டு வருவது உண்டு.

★ விலங்குகளுக்கான மருந்துகளிலும் பெருங்காயம் முக்கிய மருந்துப் பொருளாகச் சேர்க்கப்படுகிறது.

P.C.பெருங்காயம்

★ ஸ்பெஷல் ஈகிள் காயம்

★ ஸ்பெஷல் ஈரான் ரஸ் காயம்

★ ஸ்பெஷல் காயம் பவுடர்

★ ரெட் ஸ்டார் காயம் பவுடர்

போன்ற பிரிவுகளில் தூள் காயமானது இருபத்தைந்து கிராம் அளவிலிருந்து ஒரு கிலோ பேக்கேஜ் வரை கிடைக்கிறது.

★ ஈகிள் காயம் கட்டி

★ சங்கு மார்க் கட்டிக் காயம்

★ ஸ்பெஷல் கட்டிக் காயம் (டைமண்ட் குவாலிட்டி)

★ ரெட் ஸ்டார் காயம்

★ P.C. மார்க் காயம்

★ பீரங்கி மார்க் காயம்

★ சன் ஃப்ளவர் காயம்

★ A மார்க் காயம்

★ N மார்க் காயம்

★ ரோஜா மார்க் பால் காயம்

★ நுக்ரா காயம்

★ காபூல் காயம்

ஆகிய பிரிவுகளில் கட்டிப் பெருங்காயம் 5, 10 கிராம் கட்டிகளிலிருந்து 500 கிராம் 1 கி கட்டிவரை கிடைக்கிறது.




# காயமே இது மெய்யடா!



# பெருங்காய ரசத்துக்குப் பெரும் வரவேற்பு!



கே.கண்ணன்

"பதினைந்து ஆண்டுகளாக கேட்டரிங் தொழில் செய்து வருகிறேன். பல முகூர்த்தங்களில் சாப்பாட்டின் போது ரசப் பிரியர்கள் பலரைக் கண்டு வியந்திருக்கிறேன். அந்த ரசப் பிரியர்கள் மிகவும் விரும்பி உண்பது பெருங்காய ரசச் சாதமே. ரசத்தில் பெருங்காய ரசம், பூண்டு ரசம் என்று இரு வகைகள் உண்டு. ஆனால், பூண்டு ரசத்திலும் பெருங்காயம் இடம் பெற்றிருக்கும். இந்த இரண்டு வகை ரசங்களிலும் பொதுவாக மிளகு - சீரகம் அவசியம் இடம் பெற்றிருக்கும்.

பூண்டு ரசத்தைக் காட்டிலும் பெருங்காய ரசத்தில் மணமும் சுவையும் அதிகமிருக்கும். பெருங்காய ரசம் ஊற்றிச் சாப்பிட்டவர்களுக்கு வாயுத் தொல்லையிலிருந்து ஒரு மணி நேரத்தில் விடுதலை கிடைத்து விடும். சைவ உணவு சாப்பிடுபவர்கள் மட்டுமே பெருங்காய ரசத்தைச் சுவைத்து வந்தனர். தற்போது, அசைவ உணவுப் பிரியர்களும் பெருங்காய ரசத்தை விருப்பத்துடன் சுவைத்து உண்டு வருகின்றனர்!" என்கிறார் திருச்சி, ஸ்ரீ ஐஸ்வர்யலெட்சுமி கேட்டரிங் காண்ட்ராக்ட் உரிமையாளரான கே.கண்ணன்.



"உன் கணவரை 'கடவுள் மாதிரி'ன்னு எப்படிச் சொல்றே?"

"ஷாப்பிங் போறச்ச பாரத்தையெல்லாம் அவர் மேல் போட்டுடுவேன்..."

- எம்.சாம்பமூர்த்தி

PC இருந்தால் சமையல் EC தான்!



# மூலிகை மருந்தான பெருங்காயம்!

ஆரோக்கியம்

"உணவே மருந்து என்பது போல, உணவில் பயன்படுத்தப்படும் பெருங்காயம் மருத்துவக் குணங்கள் கொண்டதாகும். தென்னிந்திய உணவுத் தயாரிப்பில் வாசனைக்காகவும், ருசிக்காகவும், உடல் நலத்துக்காகவும் பெருங்காயத்தைச் சேர்ப்பது வழக்கம். நாம் சமையலுக்குப் பயன்படுத்தும் அனைத்தும் கூட்டுப் பெருங்காயமே!

நூறு கிராம் பெருங்காயத்தில் புரதச் சத்து 4 கிராம். கொழுப்புச் சத்து 1.1 கிராம். நார்ச்சத்து 4.1 கிராம். கால்சியம் 690 மி.கிராம். பாஸ்பரஸ் சத்து 50 மி.கிராம். இரும்புச் சத்து 39.4 மி.கிராம். இவை மட்டுமா? இவற்றின் மொத்த கலோரி 297 கிராம்.

பருப்பு, கிழங்கு மேலும் சில காய்கறி உணவு வகைகளில் பெருங்காயத்தைச் சேர்ப்பதன் மூலமாக, அவற்றின் வாயுத் தன்மை (Gas Formation) நீங்கும். நாம் உண்ணும் உணவுப் பொருளின் செரிமான சக்திக்குப் பெருங்காயம் உற்ற தோழன் ஆவான். அஜீரணக் கோளாறு ஏற்பட வாய்ப்பே வராது. மேலும் பெருங்காயத்தில் கால்சியம் சத்தும் இருப்பதால், மூட்டு வியாதி மற்றும் எலும்புகள் தேய்மானம் உள்ளவர்கள் இதனைப் பயன்படுத்தலாம்.

இரும்புச் சத்து அதிகம் இருப்பதால், இரத்தச் சோகை நோய் உள்ளவர்கள் உணவில் பெருங்காயத்தைச் சேர்த்துக் கொள்வது நல்லது. மேலும் கொழுப்புச் சத்து மிகவும் குறைவாக இருப்பதால், இதய நோய் மற்றும் கொலஸ்ட்ரால் அதிகம் உள்ளவர்கள் பெருங்காயத்தினை உணவில் தினசரி பயன்படுத்தி வரலாம்.

பெருங்காயத்தில் நார்ச்சத்தும் இருப்பதால், சர்க்கரை நோயாளிகளும் இதனைப் பயன்படுத்தலாம்.



* சண்முகப்பிரியா

குழந்தைகளுக்கு வயிற்றில் உண்டாகும் பூச்சிகளை வெளியேற்ற, மாந்தம் மற்றும் வயிற்றுப் பொருமல் போன்றவற்றைக் குணப்படுத்த சிறிதளவு பெருங்காயத்தை நீரில் கரைத்து, அதனுடன் சிறிது ஓமம் சேர்த்து ஒரு டீஸ்பூன் (அதாவது 5 மில்லி) புகட்டினால் போதும்; மேற்கூறிய அனைத்துத் தொந்தரவுகளும் நீங்கிவிடும். பெருங்காயத்தை நீர்விட்டு அரைத்து மார்பின் மீது பூசி வந்தால் நாளடைவில் கக்குவான் இருமல் இல்லாது போய்விடும்.

பெருங்காயம், தன்னைக் கரைத்துக் கொண்டு, நம்மை ஆரோக்கியத்துடன் வாழ வைத்து வரும் ஒரு மூலிகைப் பொருளாகும்!'' எனக் கூறுகிறார் திருச்சி, இந்திரா சேஷாத்திரி நர்சிங் ஹோமின் டயட்டீஷியனாகப் பணிபுரிபவரும், உணவியல் நிபுணருமான சண்முகப்பிரியா.

## துணுக்ஸ்!



### PC இருந்தால் சமையல் EC தான்!

### படையெடுக்காத பாம்புகள்!

கிராமத்து வீடுகளில் சாணம் கொண்டு வாசல் தெளிப்பது வழக்கம்! அதுபோல கேரள மலைப்பகுதி கிராமங்களில் பெண்கள் வீட்டு வாசல் தெளிக்கையில், பதினைந்து நாட்களுக்கொரு முறை பெருங்காயத் தூள் கரைசலைத் தெளித்து விடுவார்களாம்! ஏன் இந்தப் பெருங்காயத் தூள் கரைசல்? இக் கரைசலை வீட்டைச் சுற்றிலுமாகத் தெளித்து வைத்துவிட்டால், அந்தப் பெருங்காய வாசனைக்கு, பாம்பு வீட்டுக்குள் நுழையவே நுழையாதாம். பெருங்காய வாசனைக்கு உட்பட்ட பகுதிக்குள் உள்ளே, பாம்பு ராஜாக்கள் வாலை அல்ல... தலை வைத்துக் கூடப் படுக்கமாட்டார்களாம். விஷப் பூச்சிகளும் பெருங்காய வாசனைப் பகுதிக்குள் பறந்து வருவது இல்லையாம்.

## துளித் துளி...

★ உங்கள் வீட்டு முருங்கை மரம் நிறையக் காய்க்கவில்லையா? கவலையைத் தள்ளி வையுங்கள். பெருங்காயத்தைத் தண்ணீரில் கரைத்து, முருங்கை மரத்தின் வேர்ப்பகுதிகளில் ஊற்றி வந்தால் போதும். உங்கள் வீட்டு முருங்கை மரத்தில் காய்களைப் பறிக்க கைகள் போதாது.

★ குவைத்தில் பேரீச்சை மரங்களுக்கு இயற்கையுரமாகப் பெருங்காயக் கரைசலைக் கொட்டுகின்றனர்.

★ ஈரானில் Ferula Asafoetida எனப்படும் பெருங்காய மரத்தின் மையப் பகுதியிலிருந்து பூக்காம்பு ஒன்று வெளிப்படுமாம். இந்த வகை மரங்களில் பெருங்காயம் விளைவதில்லை. பூக்காத மரங்களில்தான் ஒலியோகம் எனப்படும் பிசின் உருவாகிறது. பூத்திருக்கும் பெருங்காயச் செடிகள் ஈரானின் கிராமப் பகுதி மக்களுக்குப் பிடித்தமான உணவுப் பொருளாம்.

★ பெருங்காய மரத்தின் அடி வேர்ப்பகுதி முடிச்சுகளைக் கீறி வைப்பார்கள். அதனை இலைகளால் மூடி, மண்ணால் குவியலாக மூடி வைப்பார்கள். 4-5 நாட்கள் சென்ற பின் கீறிய பகுதியிலிருந்து சுரந்து நிற்கும் பிசின் சேகரிக்கப்படுகிறது. கீறுதல் - பிசின் சேகரித்தல் என்று பிசின் வடியும் வரை சுமார் மூன்று மாதங்களுக்குத் தொடர்கிறது இந்தப் பிசின் சேகரிப்பு வேலை. இவ்வாறு சேகரிக்கப்பட்ட பிசின், துணிப் பைகளில் அடைக்கப்பட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

## அப்பளங்களின் சுவை கூட்டும்... பெருங்காய பேஸ்ட்!

கட்டிப் பெருங்காயம் கேள்விப்பட்டு இருக்கிறோம். தூள் பெருங்காயம் பார்த்திருக்கிறோம். அது என்ன? டூத் பேஸ்ட் மாதிரி... பெருங்காய பேஸ்ட்! கட்டியுமல்லாது, தூளுமல்லாது - சற்றே ஈரப் பதமான நிலையில் பசை வடிவத்திலுள்ள பெருங்காயமே பேஸ்ட் எனப்படும் பால் பெருங்காயம் ஆகும்.

50 கிராம் பேஸ்ட்டிலிருந்து 25 கிலோ பேஸ்ட் டின் வரை தயாரிக்கப்படுகிறது. இதனை தமிழகத்தில் கல்லிடைக்குறிச்சி அப்பளம் தயாரிப்பாளர்கள் அதிகமாக உபயோகித்து வருகின்றனர். இப்போது புரிகிறதா? கல்லிடைக்குறிச்சி அப்பளத்தின் தனிப்பட்ட ருசிக்குப் பெருங்காய பேஸ்ட்டும் ஒரு காரணம்!

# அப்பளத்தின் சுவை கூட...



PC இருந்தால் சமையல் EC தான்!



# வளர்ச்சிக்குக் கிடையாது முற்றுப் புள்ளி!

அபிவிருத்தி

''பெருங்காய வியாபாரத்தின் முதல் ஆதரவாளர்கள் சின்னச் சின்ன மளிகைக் கடைக்காரர்களே. முதலில் ஒரு கடையில் சிரமப்பட்டு சரக்கை உள்ளே வைத்துவிட்டால், பிறகு அவர்களே எங்கள் சரக்கை விரும்பி வாங்கத் துவங்கிவிடுவார்கள். முதல் முறை வாங்கிச் செல்லும் வாடிக்கையாளரை, மறுமுறை P.C. பெருங்காயம் கேட்டு வாங்க வைப்பதே எங்களின் வெற்றி ரகசியம் ஆகும். மொத்தத்தில் சின்னஞ்சிறு மளிகைக் கடைக்காரர்கள்தான் எங்கள் வளர்ச்சியின் தூண்களாக இருந்து வருகின்றனர். 'எந்தவொரு கட்டத்திலும் நாம் நன்கு வளர்ச்சி பெற்றுவிட்டோம் என்று ஹாய்யாக சாய்வு நாற்காலியில் சாய்ந்து விடக் கூடாது. நிர்வாக வளர்ச்சி குறித்து எப்போதும் யோசித்துக்கொண்டே இருக்க வேண்டும். ஏனெனில் வளர்ச்சிக்கு மட்டும் முற்றுப் புள்ளியே கிடையாது!' என்று எங்கள் குடும்ப உறுப்பினர்களுக்குக் குறிக்கோள் எதுவென கூறிச் சென்றவர் எங்கள் தாத்தா பெ.செல்லம் அவர்கள். அவரது சூத்திரங்களே தற்போதும் எங்களை வழி நடத்திச் செல்கின்றன!'' என்கிறார் P.C. பெருங்காயம் நிர்வாகப் பங்குதாரர்களில் மூத்த சகோதரரான P.C.ஜம்புலிங்கத்தின் மகன் P.C.J. சங்கர்.



P.C.J. சங்கர்



• P.C.R. கார்த்திக்

P.C. கம்பெனி நிர்வாகப் பங்குதாரர்களில் ஒருவரான P.C. ராஜசேகரன் என்பவரின் மகன் P.C.R. கார்த்திக் கேட்டரிங் துறையில் B.sc. Hotel Management & Catering Science தேர்ச்சி பெற்றுவிட்டு, எம்.பி.ஏ. முடித்துவிட்டு, பெருங்காயக் கம்பெனி நிர்வாகப் பணிகளுக்கு வந்துள்ளவர். ''பெருங்காயத் தயாரிப்பில் இன்னும் நவீன முறைகளைக் கொண்டு வர முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். தற்போது கட்டியாகவும், தூளாகவும் தயாரித்து வருகிறோம். இவை தண்ணீரில் கரைய சற்றுக் கால தாமதம் ஆகிறது. தண்ணீரில் எளிதில் கரைய என்ன வழிமுறை என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம்!'' எனக் கூறுகிறார் P.C.R. கார்த்திக்.

தொகுப்பு : ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு
படங்கள் : மதுரை டி.எம்.பாலசந்தர்

# கல்கி

குடும்பத்துடன் படிக்க...

24.6.2007

இதழுடன் இணைப்பு 16 பக்கங்கள்


+16








# மணமணக்கும் ரசம்!




**தேவையான பொருட்கள் :**

தனியாவிதை - 2 தேக்கரண்டி
கறுப்பு முழு மிளகு 2 தேக்கரண்டி
கடலைப் பருப்பு - 1 தேக்கரண்டி
வற்றல் மிளகாய் - 2-3
P.C.பெருங்காயம் - 1 சிட்டிகை
துருவிய தேங்காய் - 2 தேக்கரண்டி (கடைசியில் சேர்க்கவும்)
துவரம் பருப்பு - 100 கிராம்
புளி - 50 கிராம்
தக்காளி - 1
உப்பு - சுவைக்கேற்ப
ரசப்பொடி - 2 தேக்கரண்டி
கடுகு - 1 தேக்கரண்டி
எண்ணெய் - தாளிப்பதற்கு
கொத்துமல்லி - 1/2 கொத்து
கறிவேப்பிலை - 1 தழை
நெய் - 1 தேக்கரண்டி

**செய்முறை :**

★ ஒரு தேக்கரண்டி நெய்யுடன் தனியா, மிளகு, கிராம், டால், காய்ந்த மிளகாய், பெருங்காயம் ஆகியவற்றைப் பொன்னிறமாக வறுத்து, மிக்ஸியில் அரைத்துக் கொண்டு இறுதியில் தேங்காயையும் சேர்த்துக் கொள்ளவும்.

★ பருப்பை குக்கரில் வேகவைக்கவும்

★ தக்காளியை நறுக்கி அதனுடன் இரண்டு கப் நீரை விடவும். அதனுடன் பெருங்காயம், புளி, உப்பு சேர்த்து, புளியின் வாசனை போகும்வரை கொதிக்கவிடவும்.

★ அதனுடன் வேகவைத்து, அரைத்த துவரம்பருப்பைச் சேர்த்துக்கொள்ளவும்.

★ மிதமான சூட்டில் இருக்கும்போது ஒரு தேக்கரண்டி ரசப் பொடியைச் சேர்க்கவும்.

★ பின்பு கடுகு, உளுத்தம்பருப்பு, கொத்துமல்லி, கறிவேப்பிலையைச் சேர்க்கவும்.




# அடடே அடை!

**தேவையான பொருட்கள் :**

அரிசி - 100 கிராம்
கடலைப் பருப்பு - 30 கிராம்
துவரம் பருப்பு - 20 கிராம்
உளுத்தம் பருப்பு - 20 கிராம்
வெங்காயம் - 20 கிராம்
கறிவேப்பிலை - 1
உப்பு - தேவையான அளவு
எண்ணெய் - 100 மி.லி.
P.C. பெருங்காயம் - 1 சிட்டிகை
வற்றல் மிளகாய் - 4

**செய்முறை :**

★ அரிசி மற்றும் பருப்புகளை நன்றாகக் கழுவி 1 அல்லது 2 மணி நேரம் ஊற வைக்கவும்.

★ உப்பு, வற்றல் மிளகாய் மற்றும் பெருங்காயம் ஆகியவற்றைச் சேர்த்து 'நறநற'வென்று அரைத்துக் கொள் ளவும்.

★ சிறிது கறிவேப்பிலை மற்றும் பொடி யாக நறுக்கிய வெங்காயத்தையும் சேர்க்கவும். தோசைக்கல்லைச் சூடு செய்து, அதில் மாவை வட்டமாக ஊற்றவும்.

★ அதில் தேக்கரண்டியை உபயோகப் படுத்தி சிறு சிறு துளைகள் செய் யவும்.

★ எண்ணெயைக் துளைகள் மற்றும் ஓரங்களில் பரவும்படி ஊற்றவும்.

★ நன்றாக வெந்த பிறகு திருப்பிப் போடவும்.



Registered with the Registrar of Newspaper of India under No.1041/57 Registered No.TN/CC(S)DN/144/06-08-Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN/CC(S)DN/70/06-08-Registered as a Newspaper in Srilanka. Supplement to the Kalki Issue Dated 24.6.2007




மில்கி வே செல் டெக்
MILKY WAY CELL TECH
SALES & SERVICE
Our Special
SUNDAY OPEN
Service for All Mobile Phones
Exchange All Type of Mobile
Easy Installment
Softwares, Phone Backup, Ringtones, MP3
Song / Themes, Smart Movies, Antivirus
Milky Way Cell Tech™
NOKIA Sony Ericsson LG SAMSUNG BlackBerry MOTOROLA
TL Network Services (Group of Milky Way)
Authorised Service franchise for Dish TV (Dish Care)
AUTHORISED DEALER
dish
TATA Sky
Airtel
PREPAID & DATA CARDS
WorldSpace
No.94 Habibullah Road, T.Nagar, Chennai - 17
Tel: 28342020, 28342929 Fax: 42125090 Mobile: 9840066110-8.
milkyway.celltech@yahoo.com
"SERVICE IS OUR WAY OF LIFE"

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57" Registered No.TN/CC(S)DN/144/06-08-Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN/CC(S)DN/70/06-08-Registered as a Newspaper in Srilanka.

